# செம்மண்

நிலம் 01 துகள் 03 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 01 - 07 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# மாற்றம் சாத்தியம்

## தேர்தல் பற்றி மக்களின் எண்ணவோட்டம்

- ஜெயதாஸ் -

இன்னும் 5 நாள்களில் வாக்களிப்பு. எல்லாத் தேர்தலையும் போலவே இந்தத் தேர்தலும் வரலாற்றில் மிக முக்கியமானது என்று அரசியல்வாதிகள் ஓதித் திரிய மறக்கவில்லை. அரசியல்வாதிகள் பரபரப்பாக வாக்குக் கேட்டு ஓடித் திரிந்தாலும் மக்கள் நிதானமாகவும், பரபரப்பின்றியுமே இருக்கிறார்கள். அவர்கள் இறுதியில் யாரை வெற்றி பெற வைப்பார்கள் என்கிற சூக்குமம் தெரிந்து விட்டால் பிரச்சினையில்லை யார் வெல்வார்கள் என்பதைக் கணித்து விடலாம். ஆனால் அது தெரியாது என்பதால் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர்களிடமே கேட்டறிந்து கொள்ள முயன்றது செம்மண். மாற்றம் ஒன்று வேண்டும் என்கிற குரலின் கணிசமான ஒலியைக் கேட்க முடிகிறது. அதேநேரம்

(4ஆம் பக்கம் பார்க்க)




**பாவிலுப்பிள்ளை வின்சென்ற்**
*வயது 63*
*ஓய்வுபெற்ற அதிபர்*
*பாசையூர்*

**குகதாசன்**
*வயது 40*
*விற்பனை முகாமையாளர்*
*கோப்பாய்*

**முருகதாஸ் கஜந்தன்.**
*வயது 26*
*பட்டதாரி*
*மயிலிட்டி*

# உளடுருவும் குடியேற்றத்தின் இரகசியம் உடைத்த கூகிள்




- ஜெரா -

உலக மகா இரகசியமாகச் செய்யப்படும் சில விடயங்களைக் கூகுள் (Google) அல்லது இணையதளங்கள் மிக இலகுவாகக் காட்டிக் கொடுத்துவிடுகின்றன. பல்கிப் பெருகிவிட்ட தொழில்நுட்ப வளர்ச்சியானது எப்போதாவது ஒடுக்கப்படும் இனங்கள் சார்பாக அமைந்துவிடுவதுமுண்டு. ஏனென்பதை இந்தப் பத்தியில் நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.



வடக்கு, கிழக்கின் சில எல்லைக் கிராமங்களை அதற்கு அருகாக இருக்கின்ற சிங்கள மாகாணத்துடனோ, சிங்கள மாவட்டத்துடனோ, சிங்களப் பிரதேசத்துடனோ இணைத்துக் குடியேற்றங்களைச் செய்யும் பொறிமுறை இலங்கைக்கு மிகவும் பழமையானது. 1956ஆம் ஆண்டில் செய்யப்பட்ட கல்லோயா குடியேற்றத் திட்டத்திலிருந்து இதனை அவதானிக்கலாம்.

வவுனியா மாவட்டத்தில் வருகின்ற வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவானது வட

(02ஆம் பக்கம் பார்க்க)


கடவுளாய் மாறிய மருத்துவர்கள்... 18



கொரோனாவைத் தொடாதீர்கள்... 12



இறுதி நட்சத்திரம்... சிறுகதை 09



செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்
துணை ஆசிரியர்: ந.ஜெயதாஸ்



# இது ஒரு ஏமாற்று தேர்தல் நாடகம்

இலங்கை நாடாளுமன்றத்தின் 9ஆவது இருக்கைக்கான தேர்தல் வாக்களிப்பு ஆவணி 5ஆம் நாள் நடக்க இருப்பதையொட்டி பரப்புரைகள் உச்சத்தை எட்டியுள்ளன. தேர்தல் விதிமுறைகளை மதிக்காமல் அதனை மீறி சுவரொட்டிகளாலும் ஸ்ரிக்கர்களாலும் வீடுகளின் சுவர்களையும் பொது இடங்களையும் அசிங்கப்படுத்தி அத்துமீறும் அரசியல்வாதிகள் இந்த நாட்டின் எதிர்காலச் சட்டங்களை உருவாக்கும் மக்கள் பிரதிநிதிகளாகத் தம்மை தெரிந்தெடுக்கும்படி கேட்பதைப்போன்றதொரு அபத்தம் வேறெதுவும் இருக்கமுடியாது.

திருடர்களே நீதியை வகுப்பவர்களாக இருப்பதற்கு ஒப்பான இந்தத் நடைமுறைக்கூடாகத் தெரிவு செய்யப்படுபவர்களிடம் இருந்து நேர்மையையும் வெளிப்படைத் தன்மையையும் மக்கள் நலன்சார் திட்டங்களையும் எதிர்பார்ப்பது எந்தளவிற்குப் புத்திசாலித்தனமானது என்பதை வாக்காளர்கள் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் முதலில் சட்டத்தை மதிப்பவர்களாகவும் முன்மாதிரிகளாகவும் இல்லாததை ஏற்றுக்கொண்டு அதற்கு இயைபாக்கமடைந்துவிட்ட வாக்காளர்கள் தாம் தெரிந்தெடுக்கும் பிரதிநிதிகள் தமக்கான அரசியல் தீர்வுக்காகவும் மக்களின் பொருளாதார நலன்களுக்காகவும் குரல்கொடுக்கவில்லை, உழைக்கவில்லை என்று ஏங்குவதும் விமர்சிப்பதும் தம்மைத்தாமே ஏமாற்றும் செயல்.

வாக்காளர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொண்டு அரசியல்வாதிகள் தம்மை ஏமாற்றுகிறார்கள் என்று முறையிடுவதில் பொருள் இல்லை. இந்தத் தேர்தலில் தமிழ் வாக்காளர்கள் முன் வைக்கப்பட்டுள்ள தெரிவுகள் மிச்சொற்பமானவையே. உரிமையா, சலுகையா, அபிவிருத்தியா அல்லது உரிமையும் அபிவிருத்தியுமா என்பவைதான் இருக்கும் தெரிவுகள்.

இலங்கை நாடாளுமன்றப் பொறிமுறைக்குள், அதுவும் ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைத் தனிச் சிங்கள ஆதரவு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் கைப்பற்றக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் தமிழ் பேசும் மக்களின் உரிமையை மீட்டெடுப்பது என்பது கானல் நீர் மட்டுமே.

இணங்கிச் சென்றாலும் எதிர்த்து நின்றாலும் சிங்களத் தலைவர்கள் தாமாக முன்வந்து அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளப் போவதில்லை என்பதை அவர்கள் கடந்த 70 வருடங்களாக இடைவிடாது நிரூபித்திருக்கிறார்கள். இனியும் அதையேதான் செய்வோம் என்று அசராமல் சிங்கள மக்களுக்கு வாக்குறுதியளித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒரு நாடாளுமன்றத்திற்குள் கால்வாசிப் பங்கு உறுப்பினர்களைக்கூட தமிழ்பேசும் மக்களால் பெறமுடியாது என்கிற நிலையில் இந்த நாடாளுமன்றப் பொறிமுறைக்கு ஊடாக உரிமைகளை வென்றெடுப்போம் என்று அரசியல் கட்சிகள் சொல்வதும் அதனை மக்கள் நம்புவதாகக் காட்டி அவர்களுக்கு வாக்களிப்பதும் வெறும் ஏமாற்று நாடகங்களே.

உரிமை வேண்டும் என்று நினைக்கும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு வீதிக்கு இறங்கி இடையறாத் தொடர்ச்சியுடன் அறப் போராட்டங்களை நடத்துவதைத் தவிர உரிமைகளை வென்றெடுக்க நினைப்பது பகல் கனவு. தேர்தலில் வென்று நாடாளுமன்றம் சென்று உரிமைகளைத் தலைவர்கள் வென்று தருவார்கள் என்று நினைப்பதைப்போன்ற முட்டாள்தனம் வேறு எதுவும் தமிழ் பேசும் மக்கள் முன் இருக்காது.

அறவழிப் போராட்டங்கள் மட்டுமே ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுத்திருக்கின்றன, நாடாளுமன்ற உரைகள் அல்ல என்பதை மனதிலிருத்தி இந்தத் தேர்தலை எதிர்கொள்வது ஒவ்வொரு வாக்காளருக்கும் அவசியம். அரசியல் கட்சிகளை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதிலும் பார்க்க போராட்டக்களத்திற்கு அவற்றை இழுத்து வருவதிலேயே மக்களின் கவனமும் சக்தியும் செலவழிக்கப்படவேண்டும்.


மாகாணத்திற்குள்ளும், அநுராதபுர மாவட்டத்தில் வருகின்ற் பதவியா பிரதேச செயலாளர் பிரிவனது வட மத்திய மாகாணத்திற்குள்ளும் அமைந்திருக்கின்றன.

வட மாகாணத்திற்குரியவர்களாகத் தமிழர்களும், வட மத்திய மாகாணத்துக்குரியவர்களாகச் சிங்களவர்களும் வாழ்ந்து வருகின்றனர். எனவே வட மாகாணத்தின் எல்லைக் கிராமங்களாக வவுனியா வடக்கில் இருக்கின்ற சில கிராமங்களும், வட மத்திய மாகாணத்தின் எல்லைக் கிராமங்களாக பதவியாவுக்குள் வருகின்ற சில கிராமங்களும் இருக்கின்றன.



இந்த எல்லைக் கிராமங்கள் மிகவும் சர்ச்சையானவை. போர்க் காலங்களில் அமைதியாக இருப்பினும், அமைதிக் காலங்களில் பரபரப்பானவை.

அநுராதபுரத்திலிருந்து விரிவடைந்த சிங்களக் குடியேற்றங்கள், வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களையே அதிகம் விழுங்கிக்கொண்டன. தற்போதும் மிக வேகமாக விழுங்கப்படுகின்றன. அத்தகைய ஒரு இடத்தையே கூகிள் வரைபடம் காட்டிக்கொடுத்தது.



அனுராதபுர, பதவியாவின் மத்திய பகுதியிலிருந்து தொடங்கிய தனியே சிங்கள மக்களை மட்டும் கொண்ட குடியேற்றமானது வவுனியா மாவட்டத்தின் தெற்கின் சில கிராமங்களை அபகரித்து, 2015 இலிருந்து வவுனியா வடக்கின் சில கிராமங்களுக்கு நுழைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நிர்வாக ரீதியாக வட மத்திய மாகாணத்தில் தொடங்கிய குடியேற்றத் திட்டம், வட மாகாணத்தின் நிர்வாக வலயத்துக்குள் எவ்வித அனுமதியும் பெறாமலே நுழைந்திருக்கிறது. கச்சல் மகிழங்குளம், கொக்கச்சான்குளம் (கொக்குவைத்தான் குளம்) ஆகிய தொன்மையான இரு தமிழ் கிராமங்களையும் தனக்குள் இழுத்திருக்கிறது அனுராதபுர.

அதற்கு கலாபோகஸ்வெவ எனப் பெயரும் வைத்துவிட்டனர். தமிழர்கள் அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து நீண்டகாலமாகிவிட்ட காரணத்தினால் பெரு வனமாக மாறிவிட்ட இரு கிராமங்களையும் முழுவதுமாகச் சிங்களவர்கள் இப்போது ஆக்கிரமித்திருக்கின்றனர்.

காடுகள், மரங்கள் அப்படியே இருக்க, காடு முழுவதும் சிறு வீதிகளும், தற்காலிகக் குடிசைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. நாள்தோறும் ஐந்து, பத்து குடும்பங்களாகக் காட்டுக்குள் நுழைந்து குடியேறுபவர்கள் முதலில் காட்டு மரத்தடிகளைக் கொண்டு குடிசைகளும், பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகத் தாம் குடியேறிய காட்டை அழித்து நிரந்தர வீடுகளையும், வளவுகளையும் அமைத்துக்கொள்கின்றனர். இதுவொரு குடியேற்றப் பொறிமுறையாக நடந்து கொண்டேயிருக்கிறது.

இக்குடியேற்றங்களுக்கு யார் உதவி செய்திருக்கிறார்கள் எனத் தேடிப் பார்த்தால், இராணுவம், சர்வதேச தொண்டு நிறுவனங்கள், சர்வதேச தொண்டு நிறுவனங்களிடம் உதவிபெற்று இயங்கும் உள்ளூர் நிறுவனங்கள், அனுராதபுர அரச திணைக்களங்கள் என்பன முன்வரிசையில் நிற்கின்றன. இவற்றோடு ஆஸ்திரேலிய பேராசிரியர் ஒருவரும்.

இவ்வாறு காடுகளை அழித்துக் குடியேற்றங்களைச் செய்வதற்கு இந்தக் கரையில் நின்று உதவிபுரியும் இவ்வளவு நிறுவனங்களும், மறுகரையாக உள்ள மருதோடை, நாவலர் பண்ணை பகுதிகளில் தம் பூர்வ நிலங்களில் குடியேறப் போராடும் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டுக்கொண்டிருப்பதையும் அவதானிக்க வேண்டும்.

அந்தக் காட்டுப் பகுதிக்குள்ளும் ஒரு தொல்லியல் மையம் இருக்கிறது. உடைந்த கட்டடம் ஒன்றின் எச்சங்கள் மண்மேடொன்றில் காணப்படுகின்றன. அதில் ஒரு புத்தர் சிலையை அமர்த்தி, அவ்விடத்திற்கு சபுமல்கஸ்கட விகாரை எனப் பெயரும் மாட்டிவிட்டனர். தற்போது எவ்வேளையிலும் பிரித் ஒலிக்கும் பெரு விகாரையாக இது மாறியிருக்கிறது. கிட்டத்தட்ட 1000 ஏக்கர் அளவில் நடந்திருக்கும் இக்குடியேற்றத் திட்டம் பற்றி யாருக்கும் தகவல் தெரிவிக்கப்படவில்லை. முறைப்படியான அனுமதியும் பெற்றிருக்கவில்லை. அவர்கள் தங்கள் அரசியலின் வழியில் இயங்கிக்கொண்டே இருக்கின்றனர். அவ்வியக்கம் தமிழர்களின் தாயாகக் கோட்பாட்டை துடைத்தழித்துக் கொண்டு வருகிறது.

தமிழ் அரசியல்வாதிகள் எந்தக் கட்சிக்கு அதிக வாக்குகள் என்பதிலும் தங்களில் யார் விருப்பு வாக்குகளை அதிகம் அள்ளுவ்து என்பதிலும் மிகக் கவனமாக இருக்கிறார்கள். நன்றி கூகிள்.




■ ஜெ.ராஜ்

# வீடு தொடர்ந்தும் தமிழர் அடையாளமா?

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேர்தலில் வெல்லும் ஒவ்வொரு முறையும் வாக்காளர் தரப்பிலிருந்து முன்வைக்கப்படும் வெற்றிக்கான காரணங்களில் பிரதானமானது, 'புலிகள் கட்டிய வீடு அதைக் கைவிட்டு விடக்கூடாது. வீட்டுக்காகத்தான் வாக்களிச்சனாங்களே தவிர அதில் கேட்கிற ஆட்களுக்காக இல்ல', என்பதாகும். எப்படி ஆயுதப் போராட்டத்தின் அடையாளமாகப் புலிகள் மாறினரோ, அதே இடத்தை ஜனநாயகப் போராட்டத்தளத்தில் வீடு சார்ந்த அரசியல் கூட்டமைப்பு பெற்றதன் விளைவாகத்தான் இது நடந்தது. இந்த விளைவு திடீரென நிகழ்ந்த ஒன்றல்ல.

தமிழர்களது ஜனநாயக அரசியல் போராட்டமென்பது 30 வருடங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. இலங்கை என்றைக்கு சுதந்திரமடைந்ததோ அன்றிலிருந்தே தமிழர் மீதான பேரினவாத ஒடுக்குமுறையும், அதற்கு எதிரான ஜனநாயக ரீதியான போராட்டங்களும் நடந்து வந்திருக்கின்றன. தனிச் சிங்களச் சட்டம், சிங்கள குடியேற்றம் எனத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட ஆரம்பநிலை ஒடுக்குமுறைகள் சிங்கள எதிர்ப்புணர்வை வரலாற்றின் இயல்பான போக்கிலேயே ஏற்படுத்தின. வலிந்து திணிக்கப்பட்டதல்ல. எனவே ஒடுக்குமுறையால் குமுறிய மக்களது மனங்களை அணிதிரட்டத்தக்க அரசியல் தலைமைகள் வீடு என்பதை சின்னமாகக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்தும், உதயசூரியனை சின்னமாகக் கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளிருந்தும், சைக்கிளை சின்னமாகக் கொண்டிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரசுக்குள்ளிருந்தும் வெளிவந்தார்கள். அவர்களாற்றிய பணிகளுக்கு அமைவாக மக்களை அணிதிரட்டினார்கள். போராடினார்கள். வரலாற்றில் நிலைத்தார்கள். அத்தகைய தீரமிகு அரசியல் செயற்பாடுகளின் அவர்கள் முன்மொழிந்த கட்சியின் சின்னம் தமிழர்களது தேர்தல் அரசியல் சின்னமாக இருந்திருக்கிறது. மேற்குறித்த முச்சின்னங்களுக்கும் மாறிமாறி இந்த அடையாள அந்தஸ்து கிடைத்து வந்தமையே வரலாறாக இருக்கிறது. ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னரான 40 வருட அரசியல் போராட்டத்தையும் இந்த முச்சின்னங்களுமே மாறிமாறி முன்னெடுத்த வரலாறும் உண்டு. எனவே குறித்த 40 வருடங்களுக்கும் உரிய தமிழர்களின் சின்னமாக இந்த முச்சின்னங்களில் ஏதாவதொன்றே இருந்தது. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மாறிமாறி தமது தெரிவைச் செய்துகொண்டனர்.



இப்படியாக தமிழர்களது ஜனநாயகப் போராட்ட சூழலில் மூன்று சின்னங்கள் இருந்திருக்க வீடு மட்டும் தனி அடையாளத்தைப் பெற்றது எப்படி?

1970 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் ஆயுதப் போராட்டம் மீது தமிழர்களது அரசியல் பயணம் திசை திரும்ப, ஜனநாயகப் போராட்டத் தளம் செல்வாக்கற்றதாக மாறியது. கட்சிகளின் மீது, மிதவாத தலைமைகளின் மீது, சின்னங்களின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை ஆயுதங்களின் பக்கம் திரும்பியது. இளைஞர்கள் அந்தப் பக்கம் கரைசேர்ந்தனர். செயலாற்றல் மிக்க இளைஞர்கள் தலைவர்களானார்கள். எனவே ஆயுதப்போராட்டம் எழுச்சியுறவும், ஆக்கிரமிப்பாளர்கள் விரட்டியடிக்கவும் கூடியதுமான வெற்றிமிகு சூழல் உருவானது. இத்தகைய வெற்றிமிகு சூழலானது கட்சிகளை, சின்னங்களை, வாக்களிப்பை மறந்த-தெரியாத மூன்று தலைமுறைகளை உருவாக்கியளித்தது.

விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலத்தில் — அனைத்து தமிழர் சார் அரசியலையும் முனமொழிகின்ற இடத்தில் இருந்த காலத்தில் அவர்களின் அங்கீகாரத்தோடு உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு மக்கள் மத்தியில் செல்வது மிக இலகுவானதாக இருந்தது. ஏற்கனவே வீட்டு சின்னத்துக்குரிய வர்களின் குணமறிந்த மூத்தவர்கள் மிக நீண்ட இடைவெளியின் பின்னர் தேர்தலில் வாக்களிப்பதில் ஆர்வம் கொண்டனர்.

2002இல் ஆயுதப் போராட்டம் சமாதான வழிக்குத் திரும்ப மீளவும் கட்சிகள், சின்னங்கள், மிதவாத தலைமைகள் அரங்கிற்கு வந்தனர். அதாவது கிட்டத்தட்ட 25 வருடங்களின் பின்னர் மக்கள் தேர்தல் வாக்களிப்பில் ஈடுபடும் விருப்பை மீளவும் பெற்றனர். இப்போது முச்சின்னங்கள் அரங்கில் இல்லை. வருடக்கணக்கில் நீடித்த சின்னப் போராட்டத்தின் பின்பு வீடு தெரிவானது. களத்தில் நின்ற உதயசூரியன் பின்வாங்கி தனித்து சென்றது. தன்னாட்சி, தேசியம், சுயநிர்ணயம் என்கிற முக்கோசங்களை ஏற்றுநடந்த அல்லது ஏற்று நடப்பதாக உறுதியளித்த கட்சிகளை இணைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உருவாக்கினர். அந்தக் கூட்டமைப்பில் அதிக செல்வாக்குடையதாக இருந்த இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சியினர் தமது சின்னமான வீட்டை கூட்டமைப்பின் சின்னமாகப் பயன்படுத்த அனுமதியளித்தனர். இவ்விடத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரி உதயசூரியன் சின்னத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னமாகப் பயன்படுத்த உடன்பட்டிருந்தால், இப்பத்தியின் தலைப்பாக உதயசூரியன் தமிழர் அடையாளமா என்பதாக அமைத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலத்தில் - அனைத்து தமிழர் சார் அரசியலையும் முன்மொழிகின்ற இடத்தில் இருந்த காலத்தில் அவர்களின் அங்கீகாரத்தோடு உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு மக்கள் மத்தியில் செல்வது மிக இலகுவானதாக இருந்தது. ஏற்கனவே வீட்டு சின்னத்துக்குரியவர்களின் குணமறிந்த மூத்தவர்கள் மிக நீண்ட இடைவெளியின் பின்னர் தேர்தலில் வாக்களிப்பதில் ஆர்வம் கொண்டனர். புதிதாக வாக்களிப்பிற்கு வந்த தலைமுறையினரும் வீடுதான் புலிகளுக்குப் பிரதியாகப் பயன்படுத்தப்படும் ஜனநாயகம் ஆயுதம் எனக் கருதினர். வாக்களித்தனர். அமோக வெற்றி பெறவைத்தனர். தமிழர் என்றால் வீடுதான். வீடு வென்றால் தமிழர் வென்றது போல உணர்ந்தனர். புலிகள் இருக்கும் வரைக்கும் தமிழர்களுக்கு வீடு ஒரு பிரச்சினையாகவே இருந்ததில்லை. ஏனெனில் வீட்டுக்குரிய கூட்டமைப்பாரை கிளிநொச்சியில் அடிக்கடி பார்க்க முடிந்தது.

2009 ஆம் ஆண்டில் போர் முடிவுற்றதும் புலிகளின் தொடர்ச்சியாக ஜனநாயகத் தளத்தில் கூட்டமைப்பினர் இயங்கவேண்டும் எனவும், அதுவே காலத்திற்கு மிகப்பொருத்தமான அரசியலாகும் எனவும் மக்கள் நம்பினர். ஆனால் போர் முடிந்து கடந்த பத்தாண்டுகளில் கூட்டமைப்பின் அரசியல் பயணமானது தமிழர்களின் அரசியல் அபிலாசைகளிலிருந்து விலகிச் செல்வதாகவே மாறியது. எந்தத் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளிடத்திலும் காணாத விந்தையான ஆளுமைகளைத் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் தமிழர்கள் கண்டனர். இதுவரை தமிழ் தலைமைகள் ஏந்தாத சிங்கக்கொடியை ஏந்தினர். இதுவரை தமிழ்த் தேசிய தலைமைகள் புறக்கணித்து வந்த சிறீலங்காவின் சுதந்திரத்தினத்தில் விருந்தாளியாகவே கலந்துகொண்டனர். இது மாதிரியான உணர்வு ரீதியான விடயங்கள் வீட்டை சின்னமாகக் கொண்ட தலைமைகளின் மீது வெறுப்பையும், சந்தேகத்தையும் ஏற்படுத்த, மக்கள் தம் விருப்புக்கேற்ப தொகுதி தொகுதியாகப் பிரிந்தனர். தம் தேவைக்கேற்ப சேவை செய்வார்கள் என நம்பும் தலைவர்களை நாடினர். எனவே வீடு தனித்துவிடப்பட்டிருக்கிறது. ஆக, முச்சின்னங்கள் களத்தில் நின்று போராடி, தவணை முறையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்த ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரான அரசியல் யுகத்துக்குள் தமிழர்களை மீளவும் அழைத்துச் சென்றிருக்கிறது காலம். ஏகப் பிரதிநிதித்துவத்தின் மீதான நம்பிக்கையீனமும், செயலற்ற தன்மையும் இப்போக்கை வரவேற்கவே வாய்ப்பளித்திருக்கிறது.

இவ்வளவு காலமும் ஆட்சி செய்தது போதும்... புதியவர்களுக்குக் கொடுத்துத்தான் பார்ப்போமே என்ற மனநிலைக்குப் பலர் வந்துவிட்டதை அவதானிக்க முடிகிறது.

புதியவர்கள் எதையாவது செய்வார்கள் என்று நம்புவதைக் காட்டிலும் பழைய வர்களே பறவாயில்லை என்கிற குரலின் வீச்சும் அதற்கு ஈடு கொடுக்கிறது. ஆனால், எந்தவொரு தரப்புக்கும் வெற்றி இலகு வான தல்ல என்பது மட்டும் தெளிவானது.

இந்தத் தேர்தல் குறித்து மக்களில் சிலர் செம்மண்ணிடம் என்ன சொன்னார்களோ அதனை அப்படியே இங்கே தந்திருக் கிறோம். இது ஒரு மாதிரிதான், அறிவியல் ரீதியான முழுமையான கருத்துக் கணிப்பு அல்ல.

இதனடிப்படையில் முடிவுகள் அமைந் திருக்க வேண்டும் என்கிற கட்டாயமுமில்லை. ஆனாலும் மக்களின் எண்ண வோட்டத்தை அரசியல்வாதிகளும் ஏனையவர்களும் புரிந்துகொள்ள இது உதவக் கூடும்.

இன்றில்லாவிட்டாலும் விரைவில் மாற் றம் சாத்தியம்தான் என்பதை அந்த எண்ண வோட்டம் தெளிவுபடுத்துகின்றது.

**ச.ஜனகன்**
வயது - 25
விலங்குணவு விற்பனையாளர்
கல்வியங்காடு.

வழைமையான தேர்தல்தானே. ஆனா மாற்றம் வரப்போகுது எண்டு எல்லாரும் சொல்லுகினம்.

தேர்தல் காலத்தில் மட்டுமில்லாமல் சாதா ரணமாயும் எங்களோட "ஆ...! தம்பி, அண்ணே, ஐயா!" என்று புழங்கக்கூடிய வர்களாக அரசியல்வாதிகள் இருக்க வேணும். எலெக்சன் ரைமில கதைக்கிறது, சிரிக்கிறது மற்றும்படி பொம்மையா இருக் கிறது எண்டு திரியிற ஆக்களுக்கு வாக்க ளிக்க மாட்டன்.

பதவி கிடைச்சாலும் எந்த நேரமும் ஒரே குணத்தோட இருக்கிற ஆளாப் பாத்துத் தான் வாக்களிப்பன். கொழும்பிலயே படுத்துக்கிடக்காம நோர்மலா சனத்தோட இறங்கிச் சனத்தின்ர அடிமட்டம் வரை போய் வேலை செய்யக்கூடிய ஆளாக இருக்க வேணும். அரசியலுக்கு வாறதுக்கு முன்னமே அவர் மக்களுக்கு ஏதாவது செய்திருக்கி றாரா என்று பாக்கவேணும். திருப்பித் திருப்பிப் பழைய ஆக்களே வந்து பழைய பல்லவி பாடுறத விரும் பேல்ல. வயசான ஆக்களில துடிப்பான செயற்பாடிருக்காது.

**குகதாசன்**
வயது 40
விற்பனை முகாமையாளர் - கோப்பாய்

இந்த எலெக்சனில பெரிய மாற்றம் தெரி யும். சனமெல்லாம் என்னத்த விரும்புது எண்டில்லாட்டிலும் யாரை வெறுக்குது என்று தெரியும். மற்றத் தேர்தல்களப்போல முடிவிருக்காது.

கிட்டத்தட்ட 3 தேர்தல்கள் 15 வருசங்க ளாக நான் ஆதரிச்சு வந்தவையை முதல் தடவையா இந்தத் தேர்தலில ஆதரிக்காம விடப்போறன். 15 வருசமா நம்பிக்கை யோட வாக்களிச்சது மாதிரி இந்த முறை புதுசா ஒருத்தருக்குப் போட்டுப் பாப்பம். ஐஞ்சு வருசத்துக்கு ஒருத்தருக்கு வாய்ப்புக் குடுத்து என்ன செய்யிறார் எண்டு பாப்பம் எண்டு யோசிக்கிறன். எந்த இடத்திலையும் மாறாமல் எங்கட பிரச்சினையள எடுத்துக் கதைக்கக்கூடிய ஆளாப் பாத்துத்தான் இந்த முறை நான் வாக்களிப்பன்.

**டேவிட்**
வயது 35
கடற்றொழிலாளி - குருநகர்

எலக்சனப் பற்றி என்னத்தச் சொல்லுறது. வழமையா வாறதுதானே!

தேர்தலில வெண்டு பார்லிமென்றுக்குப் போனாலும் கட்சியின்ர கொள்கைக்குக் கட்டுப்பட்டுச் செயற்படவேணும் எண்டு றாங்கள். அது இது எண்டு காரணம் சொல்லி மக்களுக்கு வேலை செய்யிறதுக்காக முன் னுக்கு வாறவனையும் அதே கட்சிக்கா ரங்கள் தடுக்கிறாங்கள். கட்சிக்குள்ள ஒற்று மையில்லாத ஆக்களா இருக்கிறாங்கள். அபிவிருத்தியும் வேணும் அதே நேரம் தீர்வும் வேணும். ரெண்டையும் சரியாச் செய்யக்கூடிய ஆள் வேணும். ஆர் அப்பிடியிருக்கினம் எண்டு பாத்தா? ஆருக்கு வோட் பண்ணுற தெண்டே தெரியெல்லத் தம்பி. (சிரித்தார்)

**விஜயன்**
வயது 60
விவசாயி
சுன்னாகம்

தமிழர் அரசியலில் இந்த முறை மாற்றம் வரும்போல கிடக்கு. எல்லாரும் மாறி மாறித்தான் கதைக்கினம்.

நான்... என்ன செய்வன் என்றால்... ஏற்கனவே ஒரு தரமாவது நாடாளுமன்றம் போயிருந்தா அவருக்கு வாக்களிக்கப் போறதில்ல. வயோதிபர்களுக்கும் வாக்க ளிக்க மாட்டன். தென்னிலங்கைக் கட்சிக் காரர்களுக்கு அப்பயிருந்து இப்ப வரைக் கும் நான் வாக்களிக்கிறதே இல்ல. அது என்ர நிலைப்பாடு.

**பாவிலுப்பிள்ளை வின்சென்ற்**
வயது 63
ஓய்வுபெற்ற அதிபர்
பாசையூர்

இந்தத் தேர்தல் நிச்சயம் மாற்றத்துக்குரிய தாகவிருக்கும். அது எத்தகைய மாற்றம் என்றால், பாடசாலை மாணவர்கள் உட்பட எமது இளம் சமூகம் போதைப் பழக்கத்தால் எவ்வளவு சீரழிக்கப்படுகின்றதோ அதனு டன் தொடர்புடைய அரசியல்வாதிகளுக்கே இந்தத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு அதிக மாகவிருக்கும்.

போதைக்கு அடிமையாகியுள்ள இளம் சந்ததியினர் குற்றமிழைத்து நீதிமன்றத் தண்டனைக்குட்படுகின்றபோது அவர் களைக் காப்பாற்றுவதன் பின்னணியில் அரசியல்வாதிகள் இருக்கின்றனர். இதனால் போதையை விரும்பும் சமூகம் அத்தகைய அரசியல்வாதிகளுக்கே வாக்களிக்கும். ஆனால் நமக்குத் தேவையானது அது வல்ல. முன்னுக்கிருந்த நிலையை எம்மால் கொண்டுவர இயலாது. தற்போது நமக்குத் தேவை பொருளாதார வளமும், அமைதி யான சூழலும். அதை இதுவரை வென்ற வர்களால் தர முடியாது. அந்தச் சூழலை எமக்கு உருவாக்கித் தரக்கூடியவர்களுக்கே வாக்களிக்க வேண்டும்.

**முருகதாஸ் கஜந்தன்**
வயது 26
பட்டதாரி
மயிலிட்டி காங்கேசன்துறை

நான் ஆதரிக்கிற கட்சிக்காரரின்ர செயற் பாடுகள் தென்னிலங்கை அரசியல்வாதி களோட சேர்ந்து நிற்கிற அரசியல்வாதி களின்ர செயற்பாடுகளைவிடக் குறைவு தான். ஆனாலும் அந்தக் கட்சியைத்தான் நான் ஆதரிக்கிறன். ஏன் எண்டால் நான் ஆதரிக்கின்ற கட்சியின் தோற்றுவாய் அப் பிடிப்பட்டது. வரலாற்றுக் கட்சி, அவை யள் ஏற்கனவே கடந்த 15 வருசத்துக்கு மேலாக குறிப்பிட்டளவு ஆசனங்களை வைச்சுக்கொண்டு இருக்கினம். மாற்று கட்சி ஒன்றைத் தெரிவுசெய்யும்போது அவையளால அவ்வளவு ஆசனங்களை பெற்றுக்கொண்டு நாடாளுமன்றத்தில நிலைச்சிருக்க முடியாது. இனி புதுசா நாடாளுமன்றம் போகப்போறவை அங்க போய் ஆரம்பத்தில இருந்து பிள்ளையார் சுழி போடுறதையும் பார்க்க இந்தக் கட்சி யின்ர கொள்கைகளில் சில பிறழ்வுகள் இருந்தாலும் என்ர ஆதரவு அதுக்குத் தான்.

நான் தெரிவுசெய்யப் போற மூன்று பேரும் படிச்ச ஆக்களா இருக்கவேண்டும் எண்டு நினைக்கிறன். இளம் வேட்ப்பாளர் ஓராளயும் தெரிவுசெய்யவேணும். ஏன் எண் டால் நேரடியா கதைக்கக்கூடிய வல்லமை துணிவு இளைஞர்களிட்டத்தான் இருக் கும். சனத்தோட தொடர்ந்து ஈடுபாடு இருக் கிறவராக இருக்கவேண்டும். இரண்டாவது தெரிவு செய்ய விரும்பிய ஆள் நீண்டகாலம் நாடாளுமன்ற அங்கத்துவம் நீண்டகால அரசியல் அனுபவம் கொண்ட ஓராளாவும் இருக்கவேணும். மூண்டாவதாக தெரிவு செய்யிற ஆள் நடுத்தர வயதுடைய அரசியல் மக்கள் தொடர்பு போன்றவற்றிலே அனு பவம் வாய்ந்த ஓராளா இருக்கவேண்டும். ஆக மொத்தத்தில் படிப்பு பிளஸ் அனு பவம் இரண்டும் இருந்தா தான் அரசியலில் சாதிக்கலாம்.

## நட்சத்திரங்கள் பகல் தர மாட்டா!

**சி.ப.வேந்தன்**

அழுக்குத் தின்பதற்கு மீன்களைத்தானே அனுமதித்தது
நாய்கள் ஏன் முண்டியடிக்கின்றன?
தண்ணீரை நன்னீராக்க மீன்களால்தானே முடியும்!
நாய்களுக்கு நாசமாக்கத்தானே தெரியும்!
எல்லோரும் குதித்துக் குழப்ப இது ஒன்றும்
காலிக் கடலல்லவே
தேசக் குடிநீர்க் கிணறல்லவா?
முப்பது தட்டுச் சோற்றுக்கு முந்நூறு பேரின் வயிறுகள்
விண்ணப்பம் செய்வதா?
மாற்றங்கள் வரவேற்கப்படுகின்றன என்பதற்காக
மரணச் சடங்கில் மங்கல வாத்தியமிசைப்பதா?
தேர்தல் என்னறால் என்ன தவணைத் தேர்வெழுதல்
என்றா நினைத்தீர்கள்?
அரசியல் செய்வதற்கு அரிசி விலை மட்டும்
தெரிந்தால் போதுமா?
போதுமென்றால் ஆலை முதலாளிமாரெல்லாம்
வரிசைகட்டி நிற்பார்களே!
ஒப்பாரி முடித்து எட்டுச் செலவே முடிந்தபாடில்லை,
கல்யாணத்துக்குத் திகதி குறிக்க வெற்றிலையோடு
வருகிறீர்கள்!
வாக்குறுதி என்பது உங்களுக்கென்ன
குசினி வளையில்
தொங்கும் கருவாட்டுக் கூடையா அள்ளி அள்ளிக்
கொடுக்கிறீர்கள் அளவே இல்லாமல்?
வேட்பாளர் பட்டியலில் பேர்
பதிந்துவிட காணி பூமியை
விற்றா காசு கொடுப்பது
ஊர் ஊராய்த் தேரிழுந்து மின் கம்பங்களில் பேர்
பொறித்து மூத்திர சந்துகளில் எல்லாம் முகத்தைக்
கீறிவிட்டால் நீங்கள் எல்லாம் சரித்திரம் புரட்டுவீர்கள்
என்று சனங்கள் நம்பிவிடுமா?
ஏற்கனவே இருந்தவர்கள் இடித்தும் இன்னும்
அரிசிதான் கிடக்கிறது.
குறுனியாக்கவே பெரும்பாடாய் இருக்கக்
கொழுக்கட்டை பிடித்துத் தருவதாய் கொழுக்கப்
புளுகாதீர்!
நம்பிக் கொள்ள நாங்கள் ஒன்றும் பரமார்த்த
குருவின் சீடர்களல்ல
பாரதியாரின் வாரிசுகள்
தயவு செய்து நிறுத்திவிடுங்கள்
எங்களால் இடிகளைத்தான் தாங்க முடியும்
இம்சைகளை அல்ல
நம்புங்கள் நட்சத்திரங்களால் மினுமினுக்கத்தான்
முடியும் பகல் தர முடியாது.

## பந்தயம்

**ஆங்கில மூலம் லெக்ஸீ பொட்டம் லீ**
**தமிழில் ந.சத்தியபாலன்**

போட்டியாளர்கள் ஒருமித்து எழுந்துகொள்கிறார்கள்
வில்லென வளைந்த உடல்களுடன்
துப்பாக்கி வெடியோசைக்கான காத்திருப்பு
மூன்றே விநாடிகள் - மூன்று யுகங்களென
யாவரும் காத்திருக்கிறார்கள்
ஒரு போராட்டத்துக்கான விலையை வழங்கவென
கடந்த இரவு முழுதும் எதிரொலித்தபடியிருந்த
அந்த வெடியோசை...
அவள் புறப்பட்டுவிட்டாள்
இப்பக்கம் அப்பக்கம் திரும்பாத பார்வை
பாதங்கள் பறக்கத் தொடங்குகின்றன
நிலத்தைத் தொட்டும் தொடமாலும்
தொலைவில் ரசிகர்களின் பொங்கியெழும் பேரோசை
கண்ணில் தெரிகிறது எல்லைக்கோடு
அண்மையில் கேட்கும் மூச்சோசை
இதோ இன்னும் ஓரடிதான்... ஆழமாய்...
வெற்றியெனில் அது முதலிடம்தான்
இரண்டாமிடம் அது போதாது
நாடா அறுகிறது
இதோ அறிவிப்பு... அவள் கண்களை
மூடிக் கொள்கிறாள்
அறிவிப்பாளரின் சொற்கள் இதழ் அவிழ்க்கின்றன
அவளேதான் வீராங்கனை
அதிகூடிய வேகம்
உச்ச வெற்றி
அவள் இப்போதொரு உன்னதப் பெண்
ஏனையோர்க் கெல்லாம் மேலாய்...

# யாழ். குடாநாட்டில் கஞ்சாப் பிரக்ஞை!

■யாழ்.ஆனந்தன்

வட பகுதியில் அதிகரித்து வருகிறது போதைப் பொருள் பாவனை. அதைக் கட்டுப்படுத்துவதற்கான காப்புப் பொறிமுறையை உருவாக்குவதற்கான கருத்திட்டங்கள் அதிகாரிகள் மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடபிராந்திய கடற்படை



அதிகாரிகளது கருத்துப்படி அண்மைக் காலங்களில் இந்தியாவில் இருந்து கடத்தப்படும் கஞ்சாப் பொதிகளின் அளவு அதிகரித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களுக்குள் மட்டும் 300 தொண் கஞ்சாவைத் தாம் மீட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். எனின், கடத்தப்பட்டிருக்கக்கூடிய கஞ்சாவை கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணச் சிறைச்சாலை அத்தியட்சகரின் கருத்துப்படி யாழ்ப்பாணத்தில் கஞ்சா, ஹெரோயின் பாவித்துக் கைதுசெய்யப்பட்ட பலர் சிறையில் உள்ளனர். இவர்க



ளில் சிலர் போதைப் பொருள் வியாபாரிகளின் அடிமைகளாக உள்ளனர். இந்தக் கைதிகள் ஏனைய கைதிகளுடன் தொடர்புகளைப் பேணாதவாறு தனியாகவே வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மாறாக, சிறு குற்றங்களுக்காக விளக்கமறியலில் வைக்கப்படுபவர்களும் மீண்டும் கடும் குற்றங்களுடன் தொடர்புபட்டுக் கைது செய்யப்படும்போது போதைப் பொருளுக்கு அடிமையாகி இருக்கிறார்கள் என்றும் தாம் போதைப் பாவனையை சிறையிலேயே பழகினார்கள் என்று தெரிவிக்கிறார்கள் என்றும் யாழ். மாவட்டக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக் காவலர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட மது வரித் - திணைக்கள அதிகாரிகளின் கருத்துப்படி யாழ். மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் ஹெரோயின் பாவனையும் கஞ்சாப் பாவனையும் அதிகரித்துள்ளன.

## இன்னும் அதிகரிக்கும்

"கொரோனாத் தொற்றுக்குப் பின்பான உலகில் போதைப்பொருள் பாவனை அதிகரிக்கும். இது இலங்கையையும் பாதிக்கும்; தென்னிந்தியாவில் அதிகரிக்கும் வேலையின்மை, பொருளாதார மந்த நிலை போதைப் பொருள் வர்த்தகத்தை அதிகரிக்கும். இதனால் இலங்கையின் வடபகுதி அதிகம் பாதிக்கப்படும்."

இந்தியப் பிரதமர் ஆடி மாதம் 23ஆம் நாள் ஆற்றிய உரையின் சிறு பகுதி இது.

ஐக்கிய அமெரிக்காவுக்கு மெக்சிக்கோ எவ்வாறு போதைப் பொருள் வர்த்தக எல்லையாக உள்ளதோ அவ்வாறே இந்தியாவுக்கு இலங்கை போதைப் பொருள் வர்த்தக எல்லையாக மாறிவருகிறது.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தச் சமூக மட்டத்தில் விழிப்புச் செயற்பாடுகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.

பொதுவாகப் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் 16 வயது தொடக்கம் 35 வயது வரையிலானவர்களே. இள வயதினரிடையே சமூக ஒழுக்கத்தைக் கட்டிறுக்கமாகக் கடத்திச் செல்லும் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டிருப்பது போதைப் பயன் பாட்டின் தாக்கத்தை அதி கரிக்கும் ஊக்கியாக இருக்கப் போகின்றது. இது பாடசாலை இடைவிலகலையும் அதிகரிக்கும்.

## தடுக்க என்ன செய்யலாம்?

இந்த நிலையைத் தவிர்க்கப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளில் மிகவும் கண்காணிப்பாக இருத்தல் அவசியம். பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் பணம் நல்ல வழியில் செலவு செய்யப்படுகின்றதா என்பதை உற்றுப் பார்த்தல் ஒவ்வொரு பெற்றோரதும் கடமை.

எமது இளம் சந்ததியினரை நாம் மட்டுமே காப்பாற்ற முடியும் என்பதால் விழிப்புடன் இருப்பது கட்டாயம்.

மாணவர்களின் கற்றல் சூழலையும், விளையாட்டு மைதானச் சூழலையும் பாதுகாப்பானதாகக் கண்காணித்

> பொதுவாகப் போதைப் பொருளுக்கு அடிமை யானவர்கள் 16 வயது தொடக்கம் 35 வயது வரையிலானவர்களே. இள வயதினரிடையே சமூக ஒழுக்கத்தைக் கட்டிறுக்கமாகக் கடத்திச் செல்லும் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டிருப்பது போதைப் பயன்பாட்டின் தாக்கத்தை அதிகரிக்கும் ஊக்கியாக இருக்கப் போகின்றது. இது பாடசாலை இடைவிலகலையும் அதிகரிக்கும்.

தல் அவசியம். பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் என்ப வற்றைச் சூழ ஏற்படும் நட்பு மீதான அவதானிப்பும் கட்டுப்பாடுகளும் மிக மிக அவசியம்.

போதைப்பொருள் அடிமைகளையும் பயன் பாட்டாளர்களையும் அதிலிருந்து மீட்பதற்கான மருத்துவ வசதிகளை வடக்கு கிழக்கு வைத்திய சாலைகள் மேம்படுத்துதல் அவசியம்.

பொது நிறுவனங்கள் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான தமது விழிப்புணர்வுச் செயற்பாடுகளைப் பரவலாக்கித் தீவிரப்படுத்துதல் அவசியம்.

இளைஞர்களுக்கு போதிய தொழில் முயற்சிகள் ஏற்படுத்திக் கொடுப்பதில் கவனம் செலுத்தவேண்டும். தொழில்நுட்பக் கல்வியைப் பெறுவதற்கான வசதியை இன்னும் அதிகரிக்க வேண்டும்.

கிராமங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்கள் போதைப்



பொருள் விழிப்புணர்வில் கவனம் செலுத்துவது கட்டாயம்.

போதைப்பொருள் பாவனை சட்டப் பிரச்சினை அன்று. அது சமூகப் பிரச்சினை. அதனைக் கட்டுப்படுத்துவது கட்டுக்காவல் கடமைகளுடன் தொடர்புபட்ட குறித்த சில தரப்பினரது பணி என்று சுகாதார சேவையினர் ஒதுங்கி விடக்கூடாது. ஏனெனில் போதைப் பயன்பாட்டால் விளையும் தாக்கத்தை நேரடியாகப் பின்னர் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருப்பவர்கள் சுகாதாரத் துறையினரும் மருத்துவத் துறையினருமே. எனவே இந்த எல்லாத் துறையினரும் இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டியதும் அவசியம். இந்தப் பிரச்சினையைப் பிரதேச மட்டத்தில் கட்டுப் படுத்தாவிடின் சமூகம் மீள முடியாத பாதாளத்துக்குச் சென்றுவிடும்.



## சுள்ளியின் பம்பல்



சுள்ளிராஜா ஆசையாக ஒரு கழுதை வளர்த்து வந்தார். திடீரென்று ஒரு நாள் அந்தக் கழுதை தொலைந்து போய்விட்டது. சுள்ளியின் கழுதை தொலைந்த கதையைக் கேள்விப்பட்ட அவரது நண்பன் ஜம்புலிங்கம் ஆறுதல் சொல்ல சுள்ளியின் வீட்டைத் தேடிப் போனார். அவர் போனபோது சுள்ளி நடுவீட்டில் இருந்து பெரிய சத்தமாக இறைவனுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தார். பார்த்த ஜம்புலிங்கத்திற்கு வியப்பு.

ஜம்பு: கழுதையைத் தொலைத்து விட்டு கடவுளுக்கு ஏன் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறாய் சுள்ளி?



சுள்ளி: என்ன இப்பிடிக் கேட்டுட்டாய் ஜம்பு! கழுதை தொலைந்த போது வழக்கம் போல அதன் மேல் நானும் சவாரி செய்து கொண்டிருந்திருந்தால் நானுமல்லவா தொலைந்து போயிருப்பேன். அன்று பார்த்து நான் கழுதையில் சவாரி செய்யாமல் பார்த்துக் கொண்டதற்காகத்தான் கடவுளுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறன்.



# ரோட்டுக்கும் மரங்களுக்கும் ஏட்டாப் பொருத்தம்?

கதிரேசன் காத்தவராயன்

அபிவிருத்தி எண்டுறது என்ன பாருங்கோ? இப்பிடியொரு கேள்வி உங்களுக்கு எப்பவாவது வந்திருக்குதோ? எனக்குக் கனதரம் வந்திருக்குது. கடைசியா இப்ப கிட்டடியிலையும் வந்தது.

அண்டைக்கொருநாள், அதிலை சங்கானையிலை ஒரு அலுவலை முடிச்சுக்கொண்டு யாழ்ப்பாணத்துக்குப் போவமெண்டு பொம்மை வெளியாலை போனன் பாருங்கோ.

மானிப்பாய் றோட்டாலை போறதில கனவிதமான சிக்கல். றோட்டு வலுமோசம். அதுக்குள்ள பயணியள் பஸ்காறற்றை ஓட்டம் வயித்தைக் கலக்கும். அதுக்குள்ள நாங்களெண்டா என்ன குறைஞ்ச ஆக்களோ எண்டு பெடியள் பெட்டையள் மோட்டச் சயிக்கிளிலை விடுகிற சாகசம் ..... கற்பனை பண்ணிப்பாருங்கோ ஒருக்கா.. என்ன செலவே?

அது கிடக்கட்டும்! அப்ப பொம்மை வெளிப் பாதையாலை போகேக்குள்ள அதிலை யாழ்ப்பாணக் கல்லூரி தாண்டி அப்பிடியே போக வெளி தொடங்கிற இடத்திலை முந்தி "அவங்கள்" நட்டுவைச்ச பனைமர வரிசை வருகிற வடிவு...ச்சாய் என்ன வடிவு! அண்டைக்கும் அந்த நினைப்போட போனால்.... பனையள்ள றோட்டுக்கு ஒரு பக்கத்தானுகள் எல்லாம் வேரோட புடுங்கிப் போட்டிருந்தது. மண்டைக்க என்னவோ செய்துது. மற்றப் பக்கத்தானுகளுக்கும் இலக்கம் போட்டிருக்கு. ஆனபடியாலை அதுகளுக்கும் இதே கதிதான் போலையிருக்கு...

அகலமான காப்பெற் றோட்டாமெல்லே போடுறாங்கள்... ஏற்கனவே வெளி அதை இன்னும் வெளியாக்கி வேலை நடக்குது.

றோட்டுக்கு ரெண்டு பக்கமும் முந்தியே அவசரத்துக்கு ஒண்டுக்கு ரெண்டுக்கு முழு மறைவாப் போகமுடியாதளவிலையெண்டாலும் கிடந்த செடிகொடி ஒண்டுமே மிச்சமில்லை. வழிக்செடுத்துப் போட்டாச்சு.. பனையை விடுவாங்களோ?

அப்பிடியே திகைச்சுப்போய் பாத்துக்கொண்டு நிக்க சங்கரப்பிள்ளையர் அதாலை வந்தார். என்னைக் கண்டிட்டு நிண்டிட்டார்.. நாசமாப் போச்சு... அறுக்கப்போகுது.. எண்டு நினைச்சு முடிக் கேல்லை "என்னப்பா கதிரேசு இந்தப் பக்கம்? றோட்டு வேலை எப்பிடியெண்டு பாக்கிறியோ? நாட்டின்ர அபிவிருத்தி இப்ப வேகமெடுத்திருக்கு என்ன?" என்ர வாயைக் கிளறிச்சு மனிசன். உதுகளுக்கு விளக்கம் சொல்ல வெளிக்கிட்டால் வெளியிலை நடமாடுறது சிக்கலாப் போகிடும். அது அரசியலில்லோ!

மனிசனை ஒருமாதிரிச் சமாளிச்சுக் கதைக்க வேண்டியதாகிப்போச்சு. அந்த மனிசன் கனக்கக் கதைக்கும். எல்லாம் சுத்தசூனியம். அதைவிட அப்பாவி. ஏன்னட்ட கேட்கிற கதையளை வாற கிழமை எனக்கே சொல்லி அறுக்கிற பேர்வழி. அந்தாளே என்ரை யோசிப்பைக் குழப்பி "அது சரி கதிரேசு ஏன் இவ்வளவு அகலமா றோட்டைப் போடுறாங்கள்?" எண்டுது. இருக் கிற எரிச்சலுக்கு என்னத்தைச் சொல்ல? "அது அவசரத்துக்கு பிளேனை இறக்கிறதுக்காக்கும்" எண்டு சொல்லி வாயை மூடுறதுக்குள்ள "அப்பிடி யெண்டா.. உந்த கறன்ட்போஸ்ற்று கள்?" எண்டுது மனிசன். "அதோ... அதுகளைப் பிடுங்கி அங்காலை வயலுக்குள்ள நடுவங்களாக்கும்...."

கொஞ்சநேரம் யோசிச்சுப் போட்டு மனிசன் "ஓ... ஓ... செய் தாலும் செய்வங்கள்... அங்காலை பாத்தனியோ கதிரேசு! பனையளை வேரோடை பிடுங்கியிருக்கிறாங்கள்... திரும்ப நடப்போறாங்கள் போலை... என்ன!" எண்டிச்சுது. ஐயோ எண்டு கத்தவேணும்போலை கிடந்துது. ஆனாலும் இந்தாள் பாவம்... கடுமையா யோசிக்குது. இந்தாளை மாதிரித்தான் பெரி யாக்களும் யோசிக்கினமோ?

"கதிரேசு... நீ நக்கலடிக்கிறாய் என்ன..? இஞ்ச கிடக்கிறதுகளை, ஆகிறதுகளை அழிச்சு புதிசாய்ச் செய்யிறதுதான் அபிவிருத்தியோ? உண்ணாணைக் கதிரேசு, நையாண்டி பண்ணாமச் சொல்லு பாப்பம்? "சங்கரப்பிள்ளையற்றை கேள்விக்கு என்ன பதிலைச் சொல்ல? அபிவிருத்தியை அனு பவிக்கக் கன விசயங்களை இழக் கத்தான் வேணுமோ?

பொம்மை வெளி றோட்டுக்கு மட்டுமே உந்த நிலைமை. அகல மாக்கின எல்லா றோட்டுகளும் காலங்காலமாய் தங்களோடை வைச்சிருந்த மரங்களைப் பறிகுடுத் துத்தானே அனாதையளாய் நிக்குதுகள். இதுகளுக்கான மாத்து வழியளை யோசிக்கக் கூடின ஆக்கள் நாட்டிலை இல்லையோ?

NKD TOWNSHIP


காணி விற்பனைக்கு
தலைமன்னார் வீதியில் மன்னார்
நகருக்கு மிக அருகாமையில்
முன்பதிவுகளுக்கு

Perch
ரூ.60,000
தொடக்கம்


077-7585936
077-9262225

30 அடி அகலமான உள்வீதிகள்
இலவச வீட்டு வரைபடம்
வங்கிக்கடன் வசதி
இலவச ஆலோசனை



# எங்கே போகிறோம்?



எழுத்தாளர் மு.சிவநேசன் எழுதும் புதிய தொடர்

கொரோனா முடக்கத்தால் பலர் உப்பிப் போய் இருக்கிறார்கள். வெளியே செல்ல முடியாது என்பதையே சாட்டா வைத்துக் கொண்டு நடைப் பயிற்சி செய்வதை அவர்கள் விட்டுவிட்டார்கள்.

"என்னையும் வைத்தியர் நடக்கச் சொல்லுகிறார். முழங்கால் பிறழ்வோடும், தலைச் சுற்றோடும் போராடும் நான் இரண்டு கி.மீ. எப்படி நடக்க முடியும்? அதைச் சொன்னால் அதற்கும் மருந்து எழுதுகிறார் மருத்துவர்" என்று ஒருவர் ஆதங்கப்பட்டார்.

நடைப் பயிற்சியில் ஈடுபட்டு இருந்த ஒருவர் மயங்கி இறந்தார் என்று செய்தி. ஒருவேளை நடக்காமல் இருந்து இருந்தால் தப்பி இருப்பாரோ?

பெனி தன்னை இறுக்கமாக கௌவிப் பிடித்து இருந்த ஆசனத்தில் இருந்து எழுந்தாள். இரண்டு சிகரெட்டுக்களுக்கு இடையில் இடைவெளியை சற்று அதிகரிக்க வேண்டிய தேவை அவளுக்கு. காரணத்தில் எந்த நல்ல நோக்கமும் இல்லை. பற்றாக்குறை பற்றிய அச்சம்.

கண்களுக்கு அருகில் இருந்த பச்சை மலைக்குன்று இன்று சற்று அழகாகத் தெரிந்தது. இவ்வளவு நாளும் அது அங்கேதான் இருக்கிறது. பெட்டிக்குள் இருந்த சிகரெட்டுக்கள் அதனழகை மறைத்து விட்டிருந்தன. மெல்ல எழுந்து அந்த ஒற்றையடி மலைப் பாதையில் சில அடிகளை மேல் நோக்கி வைத்தாள்.

சற்று உயரத்தில் இருந்து பார்க்கும் போது அந்த மைதானம் பச்சைப் பசேலென்று மிகவும் அழகாகத் தெரிந்தது. குளுகுளுவென அவளது மகன் உருண்டு ஓடி விளையாடுவது இன்னும் ஒரு படி மேலாக ரசிக்க வைத்தது.

இன்னும் சற்று மேலே ஏறி இதனை ரசித்தால் என்ன என அவளது மனம் ஆவல் கொண்டது. மேலும் சில அடிகள் ஏறிக்கொண்டாள். அட கமெராவை கொண்டுவரவில்லையே என்று வாழ்க்கையில் முதல் முறையாகக் கவலைப்பட்டாள். இன்று வீட்டுக்குப் போனவுடன் மறக்காமல் கமெராவை எடுத்து கைப்பையில் வைக்க வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.



பாதையின் இருமருங்கும் செடிகள் வளர்ந்து அழகாகப் பூத்துக் குலுங்கின. அவற்றை எல்லாம் ரசித்தபடி மேலே ஏறிக்கொண்டிருந்தாள். அவளுடைய சோம்பேறி உடம்பை சுமந்து கொண்டு ஏறியதில் மூச்சு வாங்கியது. என்றாலும் ஏதோ ஓர் உந்துதல்.

நேரத்தைக் கணித்துத் திரும்பி இறங்கத் தொடங்கினாள். இப்போது உற்சாகம் சற்றே அதிகமாக இருந்தது.

வந்து இருக்கையில் அமர்ந்ததும் இதயம் இலேசாக இருப்பது போன்ற உணர்வு. நாடித்துடிப்பு வேகம் சற்றே தணிந்து இதமாக இருந்தது.

அன்றிலிருந்து மகனை விளையாட்டு மைதானத்துக்கு அழைத்துவரும் நாளெல்லாம் இவளுக்கு அந்த மலையேறும் எண்ணமே குடிகொண்டு இருந்தது. கைப்பையில் சிகரெட் பெட்டியை மறந்தாலும் கமெராவை வைக்க அவள் தவறுவதில்லை. தனக்குள் ஏற்பட்ட இந்த மாற்றத்தை அவளாகக் கண்டு பிடிக்கச் சில வாரங்கள் ஆயின. அவளது முகநூல் பக்கங்களை அந்த மலைக் காட்சிகள் நிறைத்துக் கொண்டன.

இந்த நடைப் பயிற்சி அவளது வாழ்க்கையில் வேலைத்தளத்தில் பதற்றத்தை நிறையவே குறைத்து இருந்தது. இரவில் நல்ல நிம்மதியான தூக்கம் வரும். வேலைகளை உற்சாக மாகச் செய்ய முடிகிறது. உடம்பு இலேசாக இருக்கிறது.

அப்படி என்றால் தொடர்ந்து புகை பிடிப்பவர்களை, தாமாக முன்வந்து நடைப்பயிற்சி செய்யத் தயங்கு பவர்களைத் தனிவழியில் வாகனத்தில் சில கி.மீ. தொலைவில் கொண்டு போய் இறக்கி விட்டு நடந்துவரச் செய்தால் அவர்கள் திருந்த வாய்ப்பு உள்ளது என அவள் நினைத்தாள்.

இன்று மக்கள் நடந்து சென்று தமது அலுவல்களை கவனிப்பது அருகி விட்டது. சைக்கிள் ஓடுவதும் இல்லை. கலோரிகளை எரிக்க பாடுபடுவதில்லை. உடலுழைப்பு அருகிவிட்டது. எல்லா வேலைகளையும் செய்ய இயந்திரங்கள் களத்தில் உள்ளன. அதனால், வித விதமாக வாய்க்கு ருசியாக வேளா வேளைக்கு சாப் பிட்டுவிட்டு இருப்பது ஆபத்தில் முடிந்து விடுகிறது. போதாக்குறைக்கு கோவிட் முடக்கம் வேறு.

(பயணம் தொடரும்)

## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்



படத்தில் மறைந்துள்ள 6 ஆங்கிலச் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

1



# கொரோனாவின் பின் காலம் எதை நோக்கி போகிறது



வெளிச்சம் பாய்ச்சத் தயாராகியது கிழக்கு. காரிருள் புகைபோன்று கலைந்து கொண்டிருந்தது. பெருங் கடல் அமைதி காத்தது. கடலைத் தழுவி வீசிய மென் காற்று உடல் வருடியது. சில்லென்ற அதன் குளிர் இதமளித்தது. காலைக் கடலின் அமைதியும், அதன் அழகும் புத்துணர்ச்சியூட்டின. மாலைப் பொழுதில் கூடு திரும்புகின்ற பறவைகள்போல காலையின் வருகை அறிந்ததும் கரையைத் தேடி விரைந்து வந்தன படகுகள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக அவை கரை சேர்ந்து கொண்டிருந்தன. கரையை வந்தடைந்த கையோடு தாம் ஏற்றிவந்த வலைகளில் சிக்குண்டிருந்த மீன் வகைகளை வலைகளில் இருந்து வேறாக்கும் நடவடிக்கைகளில் இறங்கினர் தொழிலாளர்கள். வேலணைத் தீவையொட்டிய அந்தக் கடற்கரைச் சந்தை இன்னும் சொற்ப நேரத்தில் கடலுணவு வியாபாரத்தில் களை கட்டவுள்ளதை அவர்களிடம் காணப்பட்ட பரபரப்பு உணர்த்தியது.

கரையை அடைந்த படகு ஒன்றிலிருந்த கடல் தொழிலாளி பாலன்.

"சந்தையில இப்ப அவ்வளவு விலையில்லை" என்று சலித்துக் கொண்டே மீன் தெரிகிறார். கொரோன பெருந் தொற்றுக்குப் பின்னரான காலத்தைத்தான் அவர் அப்படிக் குறிப்பிடுகிறார். கொரோனாத் தொற்றும் அதையொட்டிய முடக்கமும் கடற்றொழிலாளர்களின் வாழ்க்கையில் பல பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றன.

"மற்றத் தொழிலாளியளைவிட நான் கொஞ்சம் தூரக் கட லுக்குப் போய்த்தான் வலை எறியிறனான். அதுக்குப் பெரிய இஞ்சின் தேவை எண்டதால 25 கோர்ஸ் இஞ்சின் ஒண்டு போன வருச நடுப்பகுதியில லீசிங்கில எடுத்தன். தொடக்கத்தில தொழில் பருவாயில்ல. மதாம் மாதம் 30 ஆயிரம் லீசிங் காசு. வடிவாக் காசு கட்டிக் கொண்டு வந்தன். கொரோனா வந்தவுடன எல்லாம் தலைகிழாப் போச்சு."

தனது வலையில் சிக்கியிருந்த நண்டைச் சிக்கவிழ்ப்பதில் மும்முரமாக இருக்கிறார். கடல் நீரால் நனைந்திருந்த அவரது தேகம் குளிரால் சுருங்கி விறைத்திருந்தது. கடலுக்குப் பழக்கப்பட்டு மரத்துப்போன அவரது கைகள் எதையும் சாட்டை செய்யாமல் வலையிலிருந்து நண்டுகளை விறுவிறுவென சிக்கெடுத்துக் கொண்டிருந்தன.

"நான் நண்டுத் தொழிலுக்குத்தான் அதிகம் போறனான். இஞ்ச அதிகம் பேர் நண்டு வலைதான் செய்யினம். யாழ்ப்பாணமிருந்து வந்து கொம்பனிக்காரர்தான் நண்டு எடுக்கிறவை. இஞ்சின் எடுக்கேக்க நம்பர் வன் நண்டு ஒரு கிலோ ஆயிரத்தி நூறுக்கும் நம்பர் ரூ எழுநூறுக்கும் நம்பர் திறி நானூறுக்கும் எடுத்தவை. உந்தக் கொரோனா வந்தவுடனை நண்டு எடுக்கமாட்டினம் எண்டு கதை வந்துது. கொஞ்ச நாள் தொழிலையும் மறிச்சுப்போட்டினம். பிறகு விட்டிச்சினம். விட்டாலும் ஊரடங்கு எண்டதால எண்ணை அடிக்கிறது சிரமமாக் கிடந்துது. சரியெண்டு தொழிலுக்குப் போனா நண்டு எடுக்கிறதுக்குக் கொம்பனிக்காரர் வரயில்லை. யாவாரிமாரும் வரயில்லை. ஊருக்க கொஞ்ச விலையில குடுத்தன். கொஞ்ச நாள் கழிச்சு ஒண்டிரண்டு யாவாரிமார் வந்தாங்கள். நண்டுகளைக் கலந்தபடியே முந்நூறு முந்நூற்றம்பதுக்கு எடுத்தவை. எண்ணையடிச்சு அவ்வளவு தூரம்போய் வந்து குறைஞ்ச விலையில குடுக்க எண்ணைக்காசே மிஞ்சேல்ல. பிறகெப்பிடித் தொழில் செய்யிறது. ஆனா மீன் கொஞ்சம் பரவாயில்லாத விலை வித்துது. நண்டு வலைய விட்டிட்டு மீனுக்குப் போவமெண்டால் மீன் வலை இல்லை. வலைக் கடையளும் கொஞ்ச நாளாப் பூட்டு. வலை விலையும் கூடிப்போச்சு தாம் எண்டு கதைச்சாங்கள். தொழில் இல்லாததால கையில காசு களஞ்சும் இல்ல. யோசிச்சுக் கொண்டிருக்க லீசிங் காரங்கள் வீட்டை வந்திட்டாங்கள்" கதையை நிறுத்திய பாலன் என்னைப் பாத்து மெல்லச் சிரித்தார். பனையால் விழுந்த பாலனை மாடேறி மிதித்தது என்று தான் என்னால் உணர முடிந்தது. சிரிப்பு அப்படி

கொரோனாத் தொற்றுக் காரணமாகத் தொழில், வேலை முடக்கங்கள் ஏற்பட்டதும் அரச தனியார் வங்கிகளில் பெற்ற கடன் களைத் திரும்பச் செலுத்த மக்களால் முடியாதிருந்தது. இதனால் அவற்றை அறவிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று இலங்கை அதிபர் கோத்தபாய ராஜ பக்ச கேரிக்கை விடுத்திருந்தார். அது கோரிக்கையே தவிர சட்டத் தீர்ப்பு அல்ல என்பதைக் கடன் வழங்கிய அனைத்து நிறுவனங்களும் உணர்த்தின.

அரச, தனியார் வங்கிகள் தம்மிடம் பெற்ற கடன்களைச் செலுத்து மாறு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியும், வீடு தேடிச் சென்றும் தெரிவித்தன. அரசின் சலுகை அறிவிப்பு பணவசதி படைத்தவர்களுக்கும் முதலாளிகளுக்கும் கிடைத்தன. ஆனால், சாதாரண ஏழைகள் மேலும் துன்பப்பட்டார் கள். வருமானத்தை இழந்த வர்கள் தமது கடன் தவணைப் பணம் செலுத்துவதைப் பிற்போட முடியும் என்றும் அதற்காக வங்கிக்கு நேரில் சமூகமளித்து அதற்குரிய படிவத்தில் கையெழுத்திட்டுச் செல்லுமாறும் ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. எப்படியிருப்பினும் தாமதமாகச் செலுத்துகின்ற தவணைப் பணத்துக்கும் சேர்த்து கடன் பெற்றவரே வட்டி கட்ட வேண்டும் என்பது வேறு கதை.

எனவே அரசின் அறிவிப்புகளால் பாலன் போன்றவர்களுக்கு நன்மை எதுவும் விளையவில்லை. இது பாலனையும் வெகுவாகப் பாதித்திருந்தது. பாலனைப் போன்ற பல தொழிலாளர்கள், அடிமட்ட மனிதர்கள் என இன்னும் பலர் இவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

"வீட்ட வந்து லீசிங் காசு கட்டச் சொல்லிச்சினம். நான் நிலமையச் சொன்னன். பிறகு ஒரு போமில சைன் வாங்கிக்கொண்டு போச்சினம். அந்த மாதத்தான் காச அடுத்த மாசம் சேர்த்து வட்டியோட கட்ட வேணும் எண்டு சொன்னது மாத்திரம் விளங்கினது" பாலன் பெருமூச்செறிந்து தனது கதையை இடைநிறுத்தினார். நண்டு விலை குறைந்திருந்தாலும் கடலோடு மல்லுக்கட்டிப் பாலன் படாத பாடுபடுகிறார். இது அவரது வயிற்றுக்காகவோ, வாழ்வாதாரத்துக்காவோ அல்ல. லீசிங் காசைக் கட்ட வேண்டும் என்கிற கட்டாயத் . துக்காக....

பாலனைப்போல பல தொழிலாளர்கள் இவ்வாறாக அந்த ஊர் முழுதும் விரவிக் கிடக்கிறார்கள். ■




> வீட்ட வந்து லீசிங் காசு கட்டச் சொல்லிச்சினம். நான் நிலமையச் சொன்னன். பிறகு ஒரு போமில சைன் வாங்கிக் கொண்டு போச்சினம். அந்த மாதத்தான் காச அடுத்த மாசம் சேர்த்து வட்டியோட கட்ட வேணும் எண்டு

■ காயா

## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்




2


இதிலிருந்து ஒரு காரை அகற்றுவதன் மூலம் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க முடியுமாயின் அது எந்தக் கார்.

■ஓஷோ சிறிரதி

# இறுதி நட்சத்திரம்

என் பெயர் ஸ்ரீபன். ஸ்ரீபன் ஹாக்கிங். இன்று, இப்பொழுது என் வாழ்வின் மிகமுக்கியமான தருணம். சற்று விநாடிகள் முன்தான், ஓர் அற்புதமான விடை கிடைத்தது. இயற்பியலின் ஒரு விழாநாள் என்றுகூட இதைச் சொல்லலாம். என் மனதில் மகிழ்ச்சி - நகருக்குள் பாய்ந்தோடி வந்த கடல் போல், என் தர்க்க மூளையின் அத்தனை சுவர்களையும் இடித்து நிற்கின்றது.

சாவைப் பார்த்து வரும் பயம் போலவும், பிறந்த குழந்தையைப் பார்க்கும்போது வரும் மகிழ்வு போலவும், அகராதியில் அகப்படாத ஒரு வார்த்தையால் மட்டுமே உணர்த்தப்படக்கூடிய ஓர் உணர்ச்சி நிலை. இதை யாரிடமாவது பகிராவிட்டால், பைத்தியம் பிடித்து விடும் போல் இருந்தது. என் இவ் எழுபத்தாறு வருடங்களில், எத்தனையோ யூரேக்கா தருணங்களைக் கண்டிருக்கிறேன், ஆனால் இது போல் ஓர் உணர்வை அனுபவித்ததில்லை. என் உடலில் மூளை, இதயத்தின் இடத்தில் இருந்து துடிப்பது போல் இருந்தது.



வீட்டில் யாரும் இல்லை. இருந்திருந்தாலும் பெரிதாய்ப் பயனில்லை. என் உடல் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது. ஒரு விசித்திர நோயால். இந்த இயந்திரக் கதி ரையிலேயே நான் பல வருடங் களாக வாழ்கிறேன். ஆனால் என் மூளையை எந்த நோயும் சிறைப் படுத்த முடியாது. அவை வானைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகள், அங்கு திரியும் ஒவ்வொரு பறவை யோடும் அது பயணிக்கும். அதனால் இதுவரை என்னால் இயங்க முடியவில்லை என்று நான் கவலைப்பட்டதில்லை.

ராமகிருஷ்ணர் என்ற இந்திய ஞானி, தன் தொண்டையில் புற்று நோய் ஏற்பட்ட போது, அவர் வழிபட்ட தெய்வமான காளியைக் கேட்டாராம், தன்னால் எதுவும் பருக முடியவில்லை, அதனால் நோயைக் குணப்படுத்தச் சொல்லி. இவ்வாறு அவர் கேட்கமாட்டேன் என்றே இருந்தாராம், ஆனால் அவரின் சீடர்களும் துணைவியும் அவரை வற்புறுத்திக் கேட்க வைத்தனர். அப்போது பதில் வந்ததாம், "ஏன் உன் தொண்டையால் பருகவேண்டும் என்று அடம்பிடிக்கிறாய், உனக் கிருக்கும் பல்கோடிப் பக்தர்களின் வாயிலாகப் பருகு" என்று.

சமயத்தில் எனக்குச் சுத்தமாய் நம்பிக்கை இல்லை, ஆனால் அந்தக் கதையின் கவித்துவத்தை மறுப்ப தாய் இல்லை.

இதுவரை என் மூளை வழியே, பிரபஞ்சத்தின் அத்தனை மூலைகளிலும் வியா பித்திருந்தேன். மகிழ்ச்சியாக. ஆனால் இன்று முதல்முறையாக என் கால்கள் ஆடத்துடிக்கின்றன. என் நா பாட ஏங்குகிறது. எல்லையற்ற இந்த ஆனந்த வெள்ளத்தில் என்னால் எதுவும் செய்யமுடியவில்லையே என்று ஏங்குகிறேன். இந்த இயந்திரத்தின் உதவியோடு என்னால் பேச முடியும், ஆனால், அதுபோதவில்லை, இன்னும் ஆத்மார்த்தமாய் ஏதோ ஒன்று தேவைப்பட்டது.

முற்றத்தில் சென்று வேகமாய் இயந்திரக்கதிரையைச் செலுத்தினேன், போதவில்லை. ஆனந்தம் வெறியாக என்னுள் பாய்கிறது. மீண்டும் வீட்டுக்குள் சென்றேன். கதிரையால் முட்டிச் சில பூவாசு களை உடைத்தேன், போதவில்லை. சந்தோஷம் இவ்வளவு சங்கடங்களை ஏற்படுத்தும் என நான் எண்ணவில்லை.

உங்களுக்கு என் நிலை புரியவில்லை. எனக்கேன் இப்படி என்பதும் புரியவில்லை. எப்படிப் புரியும்? ஆனால் அதுக்கு நிறைய விளங் கப்படுத்த வேணும். நீங்கள் பொறுமையாக் கேக்க வேணும்.

முன்னொரு காலத்தில நாம வாழ்கின்ற இந்தப் பிரபஞ்சம் ஒரு சின்னச் சின்னச் சின்னச் சின்னச் சின்ன அணுவை விடச் சின்னனாக இருந்திச்சு. அப்ப நாங்கள் எல்லாம் எங்க இருந்தம் என்று கேட்கிறது, குழந்தைகள் அப்பா அம்மாண்ட கல்யாண வீட்டு அல்பத்தப் பார்த்து, அப்ப தாங்க எங்கே இருந்தம் என்று கேக்கிற மாதிரி. பிரபஞ்சம் தோன்றி **13,800,000,000** ஆண்டுகள் ஆகுது. பொறுமையாப் பிறகு சைவர்களா எண்ணுங்க. எட்டு இருக்க வேணும். நம்ம பூமி தோன்றி **4,500,000,000** ஆண்டுகள் ஆகுது. மனிதர் கள் தோன்றி வெறும் **200,000** ஆண்டுகள்தான் ஆகுது.

பிரபஞ்சத்தின் மொத்த வயசில எங்கட வயசு சுமார் வெறும் **0.001** வீதம்தான். சோ தொடக்கத்தில குறு ணியா இருந்த இந்தப் பிரபஞ்சம், படாருன்னு வெடிச்சு ஒரு சொட்டு நேரத்திலையே பெருசா விரிஞ்சிச்சு. இந்த வெடிப்ப பிக் பாங் எண்டு **(Big Bang)** சொல்லுவம். இப்பவும் தொடர்ந்து பிரபஞ்சம் விரியுது, ஆனா ஆரம்பத்தில கொஞ்சக் கணங்கள் படுவேகமா விரிஞ்சுது. அத

> இதுதான் என்ர வாழ்கையோட உச்சக்கட்டம். ஏன், இதுக்கு நோபல் பரிசும் கிடைக்கலாம். ஆனா அதை வாங்குறதுக்கு நான் உயிரோட இருப்பனோ தெரியாது. என் நேரம் வேகமா ஓடிக்கொண்டிருப்பதை என்னால் உணரமுடியுது. அது மட்டுமில்லை உங்களுக்கு இன்னொரு கவலையான செய்தியும் இருக்கு. இந்தக் கண்டுபிடிப்போட இன்னொரு எதிர்வுகூறல் என் னென்டா, கடசியா ஒரு நாள், எல்லா நட்சத்திரங்களின்ர சக்தியும் முடிஞ்சு. அதுகள் எரிஞ்சு முடிஞ் சதுக்குப் பிறகு எங்களோட இந்தச் செல்லப் பிரபஞ்சம், பாழடைஞ்ச இருள் சூழ்ந்த இடமா மாறிடும்.

வீக்கம் எண்டு **(Inflation)** சொல்லுவம்.

இது தொடர்பான என்னுடைய **1983** ஆய்வுக் கட்டுரையில நான் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டிருந்தன். இந்த இயற்பியல் கொள்கைப்படி ஒரு பிக்பாங் மட்டும் இல்லை, எண்ணில் அடங்கா பலகோடி பிக்பாங்கள் நிகழ்ந்து அவை ஒவ்வொன்றும் பல கோடி பிரபஞ்சங்களை உருவாக்கியிருக்க முடியும். அப்ப அதுகள எப்படிக் கண்டு பிடிக்கிறது? இது தான் அந்தக் கேள்வி.

பல கோடி பிக்பாங்கள் மூலம் உருவானவைகளைப் பல் அண்டம் எண்டு **(Multi verse)** சொல்லுவம். ஆனா இது கணித ரீதியில ஒரு முரண ஏற்படுத்திச்சு - இவற்றை அளப்பது சாத்தியமற்ற ஒண்டாப்பட்டது. இண்டைக்கோ..., அவற்றை எப்படி அளக்கலாம் என்ற கேள்விக்கு விடை கிடைச்சிட்டுது. அது தான் என்ர மகிழ்ச்சிக்குக் காரணம்.

இந்தப் பிரபஞ்சம் முழுக்கப் பரந்திருக்கும் பின்புல கதிர்வீச்சில, இந்தப் பல் அண்டமானது தன்னுடைய கைரேகைத் தடங்கள விட்டுட்டுப் போயிருக்க வேணும். ஒரு விண்வெளிக் கப்பலில் பொருத்தப்பட்ட சரியான சாதனங்களூடாக அந்தத் தடயங்கள நாம் அளக்க முடியும். என்ன குழப்பமா இருக்கா? சுருக்கமாச் சொன்னா, எங்களுடைய இந்த ஒரு பிரபஞ்சம்தான் இருக்கா இல்லை வேறு பல பிரபஞ்சங்களும் இருக்கா என்று ஆதாரங்கள‌ச் சேகரிக்க ஒரு சாத்தியமான வழியை நான் கண்டு பிடிச்சிட்டன்.

இதுதான் என்ர வாழ்கையோட உச்சக்கட்டம். ஏன், இதுக்கு நோபல் பரிசும் கிடைக்கலாம். ஆனா அதை வாங்குறதுக்கு நான் உயிரோட இருப்பனோ தெரியாது. என் நேரம் வேகமா ஓடிக் கொண்டிருப்பதை என்னால் உணரமுடியுது. அது மட்டுமில்லை உங்களுக்கு இன்னொரு கவலையான செய்தியும் இருக்கு. இந்தக் கண்டுபிடிப்போட இன்னொரு எதிர்வுகூறல் என்னென்டா, கடசியா ஒரு நாள், எல்லா நட்சத்திரங்களின்ர சக்தியும் முடிஞ்சு, அதுகள் எரிஞ்சு முடிஞ்சதுக்குப் பிறகு எங்களோட இந்தச் செல்லப் பிரபஞ்சம், பாழடைஞ்ச இருள் சூழ்ந்த இடமா மாறிடும்.

பிரபஞ்சம் தனியா இருக்கோ இல்லையோ, இப்ப நான் வீட்டிலை தனியாத்தான் இருக்கிறன். முதலே சொன்ன மாதிரி யாரவது இந்த நேரம் கூட இருந்தாக் கூட அவர்களால முழுசா இந்தச் சந்தோசத்தைப் பார்த்துப் பெற்றுக்கொள்ள முடியாது. முதல்முறை சந்தோஷத்தோட பின்னணியில ஒரு மர்மமான கவலை என்னைச் சூழ்ந்திருக்கு. ஓர் அந்நியக் கிரகத்தின் வானம் போல் வியப்பாவும் பயமாவும் இருக்கு. ஒரு நிமிடம். ஆம் என் மகிழ்ச்சியை வெளிக்காட்ட அதுவே சிறந்தவழி. விஞ்ஞான பூர்வமான ஒரு மார்க்கமாகவே அதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஆராயாமல் உதாசீனம் செய்வது சரியில்லை. தவிர ஒரு விஞ்ஞானியாக எதையும் ஆராயவேண்டியது என் கடமை. எனக்குள் பாய்ந்துகொண்டிருந்த பரவசமான இந்தப் பல்கோடி வோல்ட் மின்சாரத்தை, தாங்கி நிற்கக்கூடிய பூமி, அதுவா எனச் சோதிக்க முடிவெடுத்தேன்.




கண்களை மூடினேன். தியானம் எனும் பரிசோதனையை ஆரம்பித்தேன். நான் முதல் முதல் சாட்சி யாய் "இருந்தேன்". அப்பொழுது என்னைக் கடந்து சென்ற முதல் எண்ணம் - நல்ல வேளை என்னால் நடக்க முடியவில்லை, இல்லை யென்றால் ஆர்கிமீடி சைப்போல் இப்பொழுது நானும் நிர்வாணமாய் ஓடியிருப்பேன். ■

## ஒரு விருப்பு வாக்குக்கு ஒரு மரம்!

கொரோனாவிலிருந்து மீண்டதும் மக்களுக்கு இயற்கை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காற்று, நீர் மாசுபாடு என்பன குறித்து அதீத அக்கறை ஏற்படலாம் என்றும் இவை குறித்து மக்கள் அதிக விழிப்புடன் இருப்பார்கள் என்றும் ஆருடம் கூறியிருக்கிறார் பிலிப் கோட்லர் **(philip-kotler)**. 'நவீன சந்தைப்படுத்தலின் தந்தை' என்றும், 'உத்தி சார் சந்தைப்படுத்தலின் முன்னோடி' என்றும் உலக



அளவில் புகழ் பெற்ற அவர் 'தி சரசோட்டா இன்ஸ்சிற்றியூட்' என்கிற இணையத் தளத்தில் எழுதிய கட்டுரையில்தான் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நெருங்குகின்ற தேர்தலையொட்டி அரசியல்வாதிகள் பலரும் பல வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்கள். வழமைபோல் தேர்தல் முடிந்த கையோடு அவை குப்பைத் தொட்டிக்குள் போய்விட அடிமட்ட மக்கள் தேடினாலும் கிட்டாத தொலைவுக்கு அரசியல்வாதிகள் பறந்து விடுவார்கள்.

இதனால் தேர்தல் கால வாக்குறுதிகளாக அரசியல்வாதிகள் எடுத்து விடுகின்ற புலுடாக்கள் ஏராளம். இந்த நிலையில், முன்னாள் நாமாளுமன்ற உறுப்பினரும் பிலித்துறு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில தமது கட்சிக்குக் கிடைக்கும் விருப்பு வாக்குகள் 3 இலட்சம் என்றால், அந்தத் தொகைக்குச் சமமான மரங்களைத் தமது 5 வருட பதவிக் காலத்துக்குள் தான் நடுவார் என்று வாக்குறுதி வழங்கியிருக்கிறார்.

நடுவதன் மூலம் நாட்டின் சுற்றுப் புறச் சூழலை மேம்படுத்துவேன் என்று ஊடகச் சந்திப்பொன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார். இது சாத்தியமாகக் கூடிய விடயம்தான். தமிழ்க் கட்சிகளுக்கும் பொருந்தக் கூடிய செயற்றிட்டம் என்றே தோன்றுகிறது. செய்ய முடியாதவற்றை மக்களிடம் சொல்லிக் காலம் கடத்துவதைவிட இப்படி மரம் நடுவது உத்தமம் இல்லையா?

நெடுங்கதை
அத்தியாயம் 02

# ஆறாவது குண்டு

■ கலியுக பித்தன்

யாரோ கதவைத் தட்டுகிறார்கள் என்று திறந்தால், இரண்டு பேர் திடீரென நுழைந்தார்கள், கேட்டுக்கேள்வியில்லாம் வீடெல்லாம் அளைகிறார்கள். கேட்டால் விதண்டா வாதம் வேறு பேசுகிறார்கள் என்றதும் சினந்துகொண்டு வந்தது ராகுலுக்கு. போதாதற்கு வந்தவர்களின் அதிகாரத் தொணி வேறு அவனுக்கு எரிச்சலூட்டியது.

"இட்ஸ் ஓகே! ஐ ஆம் கவிந்த் ஹெட் ஓஃப் த க்ரைம் ப்ரான்ஜ். ஹீ இஸ் சந்துரு, மை கொலீக்" கவிந்த் தங்களை அறிமுகப் படுத்தி கொண்ட நிமிடத்தில் ராகுலின் சினமும் எரிச்சலும் எப்படி மாயமாகி பயம் தொற்றிக்கொண்டது என்பதை ஆராய்ந்தால் மூன்று தீசிஸ் எழுதலாம்.

அந்த மழை நேரத்திலும் அவனுக்கு வியர்க்கத் தொடங்கிற்று. இனி என்ன நடக்க போகிறது என்பதை நினைத்துப் பார்க்கவே அவனுக்குச் சங்கடமாய் இருந்தது.

"இப்போ பேசலாமா?" என்ற அதட்டிய குரல் ராகுலை நடுங்க வைத்தது.

"பே...பே...பேசலா... ம்...." தட்டுத்தடுமாறியபடி ராகுலின் வாய்க்குள் இருந்து வார்த்தைகள் வந்து விழுந்தன.

நான்கு விரல்களால் நெற்றி வியர்வையை ஒற்றிய படியே தாழ்ந்த குரலில் பதில் சொன்னான்.

"சரி, சரி இதில இருங்க" இருக்கையைக் கை நீட்டி காட்டியபடி சொல்லிவிட்டு, சந்துருவை நோக்கி "நீங்க சேர்ச் பண்ணுங்க" என்று கவிந்த் கட்டளையிட்டார்.

ராகுலின் நெஞ்சு கண நேரத்துக்கு நின்று துடித்தது. சந்துரு மீண்டும் தேடத் தொடங்கினான்.

"மிஸ்டர் ராகுல்! இப்போ எங்க கைக்கு ஒரு கேஸ் கிடைச்சிருக்கு. அந்த விசயமாத்தான் இங்க வந்திருக்கிறம்... நீங்க எங்களுக்குப் புள் கோப்ரேட் பண்ணினா வேலை ஈசியாகும். அடம்பிடிச்சா எங்கட ஆக்சன் வேற விதமா இருக்கும்" கண்டிப்போட கவிந் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவருடைய அலைபேசி கதற தொடங்கியது. "நல்லவேளை யோசிக்கக் கொஞ்சம் நேரம் கிடைத்தது" என்று ஆறுதல் பட்டுக்கொண்டான் ராகுல்.

கவிந்த் பட்டனை அழுத்தி விட்டு அலை பேசியை தன் காதோடு அணைத்து கொண்டார்.

"யெஸ் சேர்"

"கேஸ் விசயமாத்தான்.... விசாரிச்சிக்கொண்டு இருக்கிறம் "

"டெபினிட்லி சேர்"

"கெதியாப் பிடிச்சிருவம் "

"யா சேர்! என்குயரியை முடிச்சுட்டுக் கோல் பண்றன் "

"நிச்சயமா சேர்..."

"தங் யூ சேர் "

உரையாடலை முடித்து அலை பேசியை அணைத்துப் பொக்கெட்டுக்குள் திணித்துக் கொண்டே ராகுலை ஏறிட்டார் கவிந்த். இந்தச் சிறு இடைவெளியில் தன்னை நன்றாக ஆசுவாசப்படுத்தி கொண்டான் ராகுல்.

"இது பெரிய கேஸ், மேல் இடங்களில இருந்து எங்களுக்கு ப்ரஸர் அதிகமா இருக்கு. சோ யூ மஸ்ற் கோப்ரேட் அஸ்!"

ராகுலுக்கு என்ன கேஸ் என்றே புரியவில்லை. இவர்கள் என்ன புதிர் போடுகிறார்கள் என்ற விரக்தியுடன் பார்த்துக்கொண்டே இருந்தான்.

"வெல் மிஸ்டர் ராகுல், ஐ கான் எக்ஸ்ப்ளேயின் எபவுட் திஸ் கேஸ்" கவிந்த் சொல்லி முடிக்க அவருடைய முகத்தை வலு கவனமாக பார்த்துக்கொண்டிருந்தான் ராகுல்.

"இது ஒரு மேடர் கேஸ் "

"கொலை செய்யப்பட்டவர் அவ்வளவாப் பெரிய இடத்தைச் சேர்ந்தவர் இல்லை. இருந்தாலும் அவர் கொலை செய்யப்பட்டிருக்கிற விதம் வித்தியாசமா இருக்கு" சொல்லும் போதே கவிந்தோட இதழ்களில் ஒரு பட படப்புத் தெரிந்தது. ராகுல் அதனைக் கவனித்துக்கொண்டான்.

"இதெல்லாம் எங்கிட்ட எதுக்கு சேர் சொல்லிக்கொண்டிருக்கிறீங்க" என்ற கேள்வி அவனது பார்வையில் தொக்கி நின்றது.

"மேடர் செய்யப்பட்டவர் கடைசியா இந்த ரூம்லதான் தங்கி இருந்திருக்கார். அவர் சம்மந்தப் பட்ட ஏதாச்சும் துணுக்குகள் இங்க கிடைக்குதா என்று பார்க்கத் தான் வந்திருக்கிறம்.." கவிந்த் சொல்லி கொண்டிருக்கும்போதே, "ஆள் யாராக இருக்கும்" என்ற கேள்வி மண்டையைக் குடையத் தொடங்கியது.

"சேர்; இங்க தேவையான எதுவும் கிடைக் கேல்ல" என்று சொல்லிக் கொண்டே வந்தான் சந்துரு.

"ஓகே! அப்ப நாங்க வந்த வேலை முடிஞ்சுது. நாங்க போப்போறம். இங்க சந்தேகப் பட கூடிய மாதிரி ஏதும் இருந்தா எனக்குக் கோல் பண்ண வேணும்" கவிந்த் குரலில் கண்டிப்புத் தெறித்தது. தன்னுடைய விசிட்டிங் கார்ட்டை எடுத்து நீட்ட, அதைப் பவ்வியமாக வாங்கி கொண்டான் ராகுல்.

"தாங் யூ மிஸ்டர் ராகுல்!" என்றபடியே அவர்கள் இருவரும் புறப்பட, ராகுலுக்கு இன்னும் எதையும் நம்ப முடியாமல் இருந்தது.

"இட்ஸ் ஓகே சேர்?" என்றான் அப்பாவியாக. இறந்து போனவர் யார் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதுகூட உறைக்காத மாதிரி மூளை அதிர்ச்சியில் மரத்துக் கிடந்தது.

எங்கே தன்னைக் கொலைக் கேஸில் பிடித்துக்கொண்டு போய்விடப் போகிறார்களோ என்று அடிமனதில் கவ்விக்கொண்ட பயம் இன்னும் விலகியபாடில்லை.




அவர்கள் சென்றதும் அவசரமாகக் கதவைப் பூட்டிவிட்டுத் தன்னுடைய பயணப்பையை சரிபார்த்து விட்டுச் சற்று மனம் ஆறினான். அணைத்து வைத்த சிகரெட்டை மீண்டும் பற்ற வைத்துக் கொண்டான். பெரிய மழை ஒன்று வெளியில் கொட்டி தீர்த்து ஓய்வெடுத்ததைப் போலவே அவன் மனதுக்குள்ளேயும் ஒரு பெருத்த மழை ஓய்வை எட்டியிருந்தது.

ஆனாலும் இது இத்தோடு முடியுமா நீளுமா என்கிற கேள்வி அரித்தது. இறந்தவர் யாராக இருக்கும் என்ற கேள்வி குடைந்தது.

(அடுத்த வாரம் தொடரும்)

## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்




பொழுதைப் போக்க தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டும் நொறுக்குத்தீனி உண்பவர்கள், செயற்கைச் சுவையூட்டிகளிடப்பட்ட கடைத் தீனிகளைத் தேடுவதற்குப் பதிலாக ஊட்டச்சத்துக்கள் நிறைந்த கிராமத்து உணவுகளை வீட்டில் தயாரித்துச் சுவைப்பதே நல்லது. வாழைக்காய் பிட்டு அதற்கொரு அருமையான பண்டம்.

## வாழைக் காய்ப் பிட்டு!

### என்னென்ன பொருள்கள் தேவை?

வாழைக்காய்கள் - 3, பெரிய வெங்காயங்கள் - 2, பச்சை மிளகாய்கள் - 2, கறிவேப்பிலை - ஒரு கைப்பிடி, துருவிய தேங்காய்ப் பூ, இஞ்சிக் கிழங்கு, பெருங்காயத்தூள், கடுகு, உளுந்தம்பருப்பு என்பன சிறியளவில், உப்பு, எண்ணெய் என்பன தேவைக்கு ஏற்ப.

### எப்படிச் செய்வது?

பெரிய வெங்காயங்கள், பச்சை மிளகாய்கள், இஞ்சிக் கிழங்கு ஆகியவற்றை நறுக்கிக் கொள்ளவேண்டும். வாழைக்காய்களை இரண்டாக வெட்டி அவற்றை அகன்ற பாத்திரத்தில் போட்டு அவை மூழ்கும்வரை தண்ணீர் ஊற்றிக் குழையவிடாமல் வேகவைத்து எடுக்க வேண்டும். வேக வைத்து வெளியே எடுத்த வாழைக் காய்கள் ஆறியதும் அவற்றின் தோலை நீக்கிப் பிசைந்து கொள்ளவேண்டும்.


இப்போது சட்டி ஒன்றில் எண்ணெய் ஊற்றி அது சூடானதும் கடுகு, உளுந்தம் பருப்பு ஆகியவற்றைப் போட்டு தாளியுங்கள். கையோடு வெங்காயம், மிளகாய், இஞ்சி, பெருங்காயத்தூள், கறிவேப்பிலை ஆகியவற்றையும் சேர்த்து வதக்குங்கள். வெங்காயம் பொன்னிறத்துக்கு வந்ததும் பிசைந்து வைத்த வாழைக் காய், தேங்காய்ப் பூத் துருவல், உப்பு ஆகியவற்றைச் சேர்த்து இடைவிடாமல் கிளறுங்கள். சிறிது நேரத்தில் அடுப்பிலிருந்து இறக்கி விடுங்கள். இப்போது சுவையான வாழைக்காய்ப் பிட்டுத் தயார்!

வாழைக்காயின் விலை தற்போது எகிறியிருப்பதால் உடனடியாக இதைச் செய்வதைத் தவிர்த்தாலும் பெரும்பாலான காலங்களில் வாழைக்காய் மலிவாகவே கிடைப்பதால் இதை அடிக்கடி செய்து சாப்பிடலாம். அதிகளவு புரதச் சத்து நிறைந்தது வாழைக் காய். அதனால் வளரும் பிள்ளைகளுக்கு இது ஒரு நிறை ஊட்ட உணவாகவும் இருக்கும்.



# யாழில் வளர்கிறது வாய்ப் புற்று நோய்!

■ மருத்துவர் சி. யமுனாநந்தா



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பல் மருத்துவப் பிரிவில் 2018ஆம் ஆண்டில் 83 பேருக்கும், 2019ஆம் ஆண்டில் 92 பேருக்கும் வாய்ப் புற்றுநோய் இனங் காணப்பட்டுச் சிகிச்சைக்குட்படுத்தப் பட்டனர். 39 இலிருந்து 85 வரை யான வயதுடையவர்களாக இவர்கள் இருந்தபோதும் 60 வயது முதல் 70 வயது வரையானவர்களே அதிகம் இந் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



வாய்ப்புற்று நோய் கண்டறியப் பட்டவர்களில், ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்டவர்கள் 5 சதவீதம் பேர் மட்டுமே. நான்கு படிநிலை களாக வகுக்கப்பட்டுள்ள இந்த நோய் இனங்காணலில் இறுதி நிலையில் கண்டறியப்பட்டவர்கள் 55 சதவீதம். இவர்களே அதிகமும்கூட. வாய்ப் புற்றுநோயை தொடக்க நிலையில் கண்டறிதலே குணப்படுத்தலைச் சுலபமாக்கும். எனவே வாய்ப்புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு அவசியமாகின்றது.

## நோய்க்கான காரணம்

வாய்ப் புற்றுநோய் அதிகம் ஏற் படுவதற்குக் காரணம் வெற்றிலை, பாக்கு மெல்வது, புகையிலை மெல் வது ஆகும். பொதுவாக இரவு வேலை செய்யும் காவலாளிகள், வயல்வேலை, தோட்ட வேலை செய்யும் தொழிலாளிகள், வாகனச் சாரதிகள் என்போர் இவற்றுக்குப் பழக்கப்படுகின்றனர்.


இவர்களிடையே வாய்ப் புற்று நோய் ஏற்படும் சாத்தியம் அதிகம். மதுபானம் பாவித்தல், வாயைச் சுகாதாரமான முறையில் பேணாமை, பற்தூரிகை பயன்படுத் திச் சுத்தம் செய்யாமை என்பனவும் வாய்ப் புற்றுநோயை ஏற்படுத்து கின்றன. வாயில் பற்க ளால் ஏற்படும் நாட்பட்ட காயங்களும் வாய்ப்புற்று நோயை ஏற்படுத்தலாம்.

## சுய பரிசோதனை

வாய்ப்புற்றுநோய் உருவாவதற்கு முன்பே வாயில் ஏற்படும் மாற்றங் கள், தொடக்க நிலைப் புற்றுநோய் இழையவியல் நிலைமைகள் ஆகும். இப்புற்றுநோயின் தொடக்க காலத் தில் வலி இருக்காது. குருதிப்பெருக்கு இருக்காது. வாயின் சாதாரண செயற் பாட்டில் மாற்றம் இருக்காது. இத னால் தொடக்க நிலையில் நோயாளி கள் இனங்காணப்படல் குறைவு. எனவே சுய வாய்ப் பரிசோதனை மூலம் அல்லது மருத்துவர்களின் உதவியுடன் வாய்ச் சுகாதாரத்தைக் குறிப்பாக 30 வயதுக்கு மேற்பட்ட வர்கள் பேண வேண்டியது அவசியம்.

## மருத்துவ ஆலோசனை அவசியம்

நீண்டகாலம் வலியற்ற, அகற்ற முடியாத வெள்ளையும் சிவப்பும் கலந்த படலம் வாய்ப்புற்றுநோயின் தொடக்க அறிகுறியாகும். அடுத்து நீண்ட காலத்துக்கு ஆறாத வாய்ப் புண், அசாதாரண வலி, எரிச்சலுடன் கூடிய வெள்ளைத் தழும்புகள் உடைய வாயின் உட்புறமும், உதடு களும் ஆபத்தானவை. இத்தகைய அறிகுறிகள் காணப்படின் பல் மருத்து வரின் ஆலோசனையினைக் கண் டிப்பாகக் கடைப்பிடித்தல் அவசியம்.



வாய்ப்புற்றுநோய் வராமல் தவிர்க்க வெற்றிலை, பாக்கு, புகையிலை, மதுபானம் ஆகிய வற்றை முற்றாகத் தவிர்த்தல் வேண்டும். உறைப்பான மிளகாய் உண்பதைக் குறைத் தல் வேண்டும். ஆண்டுக்கொரு தடவை பல் மருத்து வரிடம் பரிசோதித்தல் வேண்டும். இலங்கையில் நாளொன் றுக்கு ஆறு பேருக்கு வாய்ப் புற்று நோய் கண்டறியப்படுகிறது என்கிறது புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம். இந்த நோயால் 2 தொடக்கம் 3 இறப்புக்கள் நாளாந்தம் நிகழ்கின் றன. இலங்கையர்களிடம் பரவும் 2ஆவது பெரிய புற்றுநோய் இது என்று நிகழ்ச்சித் திட்டத்தின் பணிப் பாளர் மருத்துவர் ஜானகி விதான பத்திரன தெரிவிக்கிறார். அதிலும் குறிப்பாக ஆண்களிடம் காணப்படு கின்ற பொதுவான நோயாகவும் இது இருக்கிறதாம். 70 சதவீதமான நோயாளிகள் நோய் முற்றிய நிலையி லேயே கண்டறியப்படுகிறார்கள் என்றும் ஜானகி தெரிவித்தார். ■


யாழ் முற்றம்
மீண்டும் விரைவில் யாழ் நகரல்..!
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை

- பனைசார் உற்பத்திப் பொருட்கள்
- தும்பு உற்பத்திப் பொருட்கள்
- இயற்கை விவசாய மரக்கறிகள்
- இயற்கை விவசாய இடுபொருட்கள்
- வீட்டுத்தோட்ட மரக்கன்றுகள்
- இயற்கை உரங்கள்
- கைவினைப் பொருட்கள்
- மட்பாண்டம்
- பாதணிகள்
- உலர் உணவுப் பொருட்கள்
- கடல் உணவுப் பொருட்கள்
- இரசாயனமற்ற ஆரோக்கிய பானங்கள்
- ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள்
- சித்திரங்கள்
- பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)

உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்

# கொரோனாவைத் தொடாதீர்கள்!

■ வர்ணா குலசிங்கம்





500 ஆண்டுகளுக்கு முன்னரே பிரான்ஸ்சைச் சேர்ந்த தீர்க்கதரிசி நொஸ்ரடா மேர்ஸ் எழுதிய தீர்க்க தரிசனக் குறிப் பின் பிரகாரம் எல்லாமே நடந்து கொண்டிருக்கின்றன. ஏறத் தாழ 5 மாதங்களாக உல கையே ஆட்டிப் படைத்து வருகிறது கொவிட் 19 என்ற கொரோனா தொற்று நோய்.

பிரான்ஸ்சைச் சேர்ந்த தீர்க்க தரிசி நொஸ்ரடா மேர்ஸ். 1551ஆம் ஆண்டில் ஒரு தீர்க்க தரிசனத்தை எழுதி வைத்திருக்கிறார். அது, "ஒரு ருவின் வருடத்தில் (2020) ஓர் அரசி (கொரோனா) கிழக்குப் பாகத்தில் (சீனா) இருந்து எழுவாள். அவள் பிளேக் நோயைப் போன்றதொரு நோயை (கொரோனா) ஓர் இருண்ட நாளில் பரப்புவாள். ஏழு மலைகளைக் கொண்ட நாட்டிலிருந்து (இத்தாலி) இருள் சூழ்வதைப்போல அனைத்தையும் தூசாக்குவாள் (மரணம்) அதன் மூலம் உலகை அழித்து எச்சங்களை மட்டும் விட்டு வைப்பாள். அது உலகின் பொருளாதாரத்தை முற்று முழுதாக அழித்திருப்பதை அறிவீர்கள்" என்றுள்ளது.

500 ஆண்டுகளுக்கு முன்னரே அவர் எழுதிய தீர்க்க தரிசனக் குறிப்பின் பிரகாரம் எல்லாமே நடந்துகொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 5 மாதங்களாக உலகையே ஆட்டிப் படைத்து வருகிறது கொவிட் 19 என்ற கொரோனா தொற்று நோய்.

இதுவரை அந்தத் தொற்று நோய் எங்கிருந்து பரவியது என்பதைத் திடமாகக் கண்டறிய முடியாமல் விஞ்ஞானிகள் தடுமாறுகின்றனர். கெரோனாவுக்கான தடுப்பு மருந்தும் முழுவதுமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. உலகம் முழுதும் பல ஒரு கோடி 55 லட்சம் மக்கள் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றனர். இதை வாசித்துக் கொண்டிருக்கும்போதே இந்த எண்ணிக்கை இன்னும் பல லட்சங்களைத் தாண்டியிருக்கும்.




6.5 லட்சம் மக்கள் இறந்திருக்கிறார்கள். ஆனால் இந்த நோய் ஒருபோதும் தம்மை அணுகாது என்று வடக்குக் கிழக்கு வாழ் தமிழர்கள் தினவெடுத்துத் திரிகிறார்கள் போலுள்ளது. தமிழர்கள் மட்டுமென்றில்லை ஒட்டுமொத்த இலங்கையர்களுமே அப்படித்தான் திரிகிறார்கள் போலுள்ளது.

20.7.2020 அன்று இடம்பெற்ற ஆடி அவாசை விரத்தின் போது பிதிர்க்கடன் செலுத்துவதற்காகக் கீரிமலையிலும், மட்டக்களப்பு மாமங்கத்திலும் ஒட்டுசுட்டான் ஆறு ஒன்றிலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் கூடி ஓரிடத்திலுள்ள நீர் நிலைகளில் தலை முழுகினார்கள்.

கொரோனா நோய் தொடுகை மூலம் பரவும், சுவாசத்திலிருந்து பறக்கும் நீர்த்துளிகளால் பரவும், இரும்பு போன்ற உபகரணங்களில் படிந்திருந்து பரவும் எனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையில் சமூகத் தொற்றாக அது மாறாத வகையில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சமூகத் தொற்றாக மாறவில்லை என்பதற்காக அந்த நோய் குறித்துக் காட்டப்படும் அதிக அலட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தல்ல.

தேர்தல் பரப்புரைக் கூட்டங்களிலும் 50 பேர் 100 பேர் தான் பங்கேற்கலாம், சமூக இடைவெளி கட்டாயம் என்றெல்லாம் முதலில் அறிவித்தார்கள். இப்போது வெளிவரும் படங்களைப் பார்த்தால் அந்த மாதிரிக் கட்டுப்பாடுகளெல்லாம் கிடையாது என்பது வெளிப்படை. தேர்தல் திணைக்களமும் அந்தக் கட்டுப்பாட்டை அரசிதழ் (வர்த்தமானி) அறிவிப்பாக வெளியிடவில்லை என்பதும் இதற்கான காரணமாக இருக்கக்கூடும்.



வெளியே செல்லும்போது முகக் கவசம் அணிய வேண்டும், பொதுவெளியில் மற்றவர்களுடன் தொடுகையிடாமல் சமூக. இடைவெளியைப் பேண வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் தொடர்ச்சியாகக் கூறி வருகிறது. இத்தாலி, அமெரிக்கா, பிறேசில் ஆகிய நாடுகளில் நாளொன்றுக்கு இந்தத் தொற்றால் 2 ஆயிரம் பேர்வரை இறந்த சம்பவங்களும் நடந்தன. தற்போது இந்தியாவிலும் இந்தத் தொற்று பெருமளவில் பரவி வருகிறது.

உலகப் பெருந்தொற்றான இந்தக் கொரோனா வைரஸ் குறித்து தமிழர்கள் சரிவரப் புரிந்துகொண்டு செயலாற்றும் தன்மை குறைவாக உள்ளமை கவலையளிக்கிறது.

ஆடி அமவாசை விரதம் பிடிப்பவர்கள் பெரும்பாலும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களாகவே இருப்பர். இந்த வயதுப் பிரிவினருக்குத் தொற்று ஏற்பட்டால் அது அவர்களை இலகுவாகக் காவுகொள்ளும் என்பது உலகம் கற்றுக்கொண்ட பாடம். ஆனாலும் அது குறித்து தமிழர்களால் காட்டப்பட்ட அக்கறை போதுமான தாகத் தெரியவில்லை.

இந்த மாதம் 27ஆம் திகதி நல்லூர் கொடியேறிவிட்டது. 25நாள்கள் திருவிழா நடக்கவுள்ளது. 300 பேருடன் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றித் திருவிழா நடத்தலாம் என்று அறிவிக்கப்பட்டாலும் மக்கள் கூட்டத்துக்குக் குறைவில்லை. பிரதிஷ்டை, அடி அளத்தல், அங்க நமஸ்காரங்கள், நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுதல், காவடி, தூக்குக் காவடி, வியாபார நடவடிக்கைகள், சமயச் சொற்பொழிவுகள் என எல்லாம் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அறவிக்கப்படுகின்றது. இது காலத்துக்கு ஏற்ற செயலும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் ஆகும்.

ஆனால் 300க்கு அதிகமானவர்களைத் திருவிழாவுக்கு அனுமதிக்குமாறு கோரி தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு ஒரு சிலர் கடிதம் எழுதியுள்ளனர் என்றும் அதை ஏற்றுக்கொண்டு அவரும் அதற்கு ஆவன செய்யும்படி அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார் என்றும் தெரிகிறது. இந்த அலட்சியம் ஆரோக்கியமானதல்ல.



தலதா மாளிகையின் பெரஹராவை ஆள் அரவமின்றி நடத்தும் மகிந்த நல்லூருக்கு மட்டும் ஆள்விடச் சொல்வதன் மீது விமர்சனங்கள் இல்லாமலில்லை.

அதற்காக மிக இறுக்கமும் தேவையற்றது. திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் காரணமாக ஒருவேளை தொற்றுகள் அதிகரித்தால் பாதிக்கப்பட்டவர்கள் உயிரிழக்கும் வரை அல் லது குணமடையும் வரை அவர்களைப் பக்குவமாக அடைத்து வைத்துப் பராமரிப்பதைத் தவிர அரசிடம் வேறு சிகிச்சை முறையில்லை. அப்படியிருக்கையில் தேடிப் போய் வினையை ஏன் வாங்கிக்கொள்வான்?

முன்னெச்சரிக்கையாக நடக்காமல், எல்லாம் நடந்த பின்பு இதுவும் கடவுளின் சித்தம் என்று முடித்து விடும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்ற தமிழர்கள் இந்த விடயத்தி லும் அதையே செய்யாமல் எட்ட நில்லுங்கள், கிட்ட வராதீர்கள். ■

# இளைஞர்களே இயற்கையை நேசியுங்கள்!



குமரன்

அமைப்பின் முதல் திட்டமே ஆயிரம் மரங்களை நடுவது "இந்தத் திட்டத்தை அரச நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் இயற்கை வழி அமைப்புகள் சில என்பவற்றுடன் இணைத்து செயற்படுத்தி வெற்றியும் கண்டுள்ளோம். 2019ஆம் ஆண்டில் 620 மரங்களை யாழ்ப்பாணத்தில் நட்டோம். மீதியை நடுவதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன" என்கிறார் அமைப்பின் தலைவர் ஜெ.தனுசன்.

இளைஞர்கள் முறைதவறிச் செல்கின்றனர். அவர்களைத் திருத்துவதென்பது மிகக்கடினம். இவர்களின் பெற்றோர் என்னதான் செய்கிறார்கள்? இன்றைய நாட்பொழுதுகளில் அடிக்கடி கேட்கக்கூடிய குற்றச்சாட்டுக்கள் இவை. குற்றஞ்சாட்டுபவர்களில் பலர் தமது இளம் வயதில் தாம் எப்படியிருந்தார்கள் என்பதை மறந்துவிட்டார்கள் என்பது வேறுகதை. ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எல்லாம் அப்பாலானவர்கள் என்று தங்களை நிரூபித்து வருகிறார்கள் "ஔடதம்" இளைஞர்கள்.

யார் இவர்கள்? என்ன செய்யப்போகின்றனர்? "மரமே மருந்து" இதுதான் இந்த இளைஞர்களின் தார்மீக மந்திரம். தமது வேலை நேரம் போக மீதி நேரத்தில் இயற்கையோடு இணைந்து எதிர்காலச் சந்ததிக்காகவும் செயற்பட ஆரம்பித்துள்ளவர்கள் தான் ஔடதம் அமைப்பினர்.

இந்த அமைப்பில் இணைந்திருக்கும் அனைவரும் 20 தொடக்கம் 23 வயதுக்கு உள்பட்டவர்கள். தந்தை ஒருவரின் அறிவுரையும் ஊக்கமும் கைகொடுக்க ஒரு சில இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஔடதம் இன்று 30 உறுப்பினர்களுடன் வளர்ந்திருக்கிறது. அவர்கள் நட்ட மரங் களைப் போலவே அமைப்பும் கிளைவிடத் தொடங்கி விட்டது.

ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவரான ஜெயபாலசிங்கம், அமைப்பு இயங்கத் தொடங்கிய சிறிது காலத்திலேயே காலமாகிவிட்டார். ஆனால் கவலைப்படாதீர்கள் என்று அமைப்பைத் தத்தெடுத்துக் கொண்டார் பௌதீகவியல் கற்பித்தலில் புகழ்பூத்த ஆசிரியர் குமரன். ஏனெனில் அமைப்பிலுள்ள இளைஞர்களில் பலரும் அவரிடம் கற்றவர்கள்.

அவரது நிதி உதவியுடன் இப்போது வேகமாகச் செயற்படுகிறது ஔடதம். நிதியோடு நின்றுவிடாமல் அவர்களின் செயற்பாடுகளுக்கென ஒரு காணியையும் கொடுத்துதவி இருக்கிறார் ஆசிரியர் குமரன்.

அமைப்பின் முதல் திட்டமே ஆயிரம் மரங்களை நடுவது. "இந்தத் திட்டத்தை அரச நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் இயற்கை வழி அமைப்புகள் சில என்பவற்றுடன் இணைத்துச் செயற்படுத்தி வெற்றியும் கண்டுள்ளோம். 2019ஆம் ஆண்டில் 620 மரங்களை யாழ்ப்பாணத்தில் நட்டோம். மீதியை நடுவதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன" என்கிறார் அமைப்பின் தலைவர் ஜெ.தனுசன்.



மரக் கன்றுகளை வாங்கியும் விதைகளை நட்டும் வளர்த்து பெரிய பைகளில் 6 மாதங்கள் வரைக்கும் பாதுகாத்து அவை 4-5 அடி உயரத்தை எட்டிய பின்னரே அவை நிலத்தில் நடப்படுகின்றன. வீதியோரங்கள், பொது இடங்களில் அவை



பின்னர் நட்டு வளர்க்கப்படுகின்றன. தம்மால் வழங்கப்பட்ட மரங்களின் வளர்ச்சியை அடுத்த 6 மாதங்களுக்குத் தொடர்ந்து கண்காணிக்கிறார்கள். நிலத்தில் பல்வேறு காரணிகளால் தாக்குப் பிடிக்க முடியாமல் அழிந்துவிடும் மரக் கன்றுகளுக்கு மாற்றுக் கன்றுகள் நடப்பட்டு தமது இல்கை அடைவதில் ஔடதம் குறியாக இருக்கின்றது.

அமைப்பின் அடுத்த கட்டமாக இயற்கை வழி விவசாயத்திலும் இந்த இளைஞர்கள் நாட்டம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். தமக்குக் கிடைத்திருக்கும் காணியில் காய்கறிகளைப் பயிரிடுவதற்குத் தொடங்கியிருக்கிறார்கள். "இயற்கை முறை விவசாயம் செய்வதற்கு எல்லோரையும் ஊக்கப்படுத்தும் வகையில் நாங்களே பரீட்சார்த்தமாக காணியின் சிறிய் பகுதியில் தக்காளி, பாகல், பயற்றை, மிளகாய் போன்றவற்றைப் பயிரிட்டிருக்கிறோம். இயற்கை உரம் மற்றம் பூச்சி விரட்டிகளையே பயன்படுத்தவுள்ளோம்" என்று பூரிப்போடு விளக்குகின்றார் தனுசன்.

தமது "முயற்சி நிச்சயம் வெற்றிபெறும்" என்ற பெரு நம்பிக்கையோடு இந்த இளைஞர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். தமது பரீட்சார்த்த முயற்சி வெற்றிபெற்றதும் அந்த அனுபவத்துடன் இயற்கை விவசாயத்தை மக்களிடம் கொண்டு செல்வதே தமது அடுத்த இலக்கு என்கிறது ஔடதம் அமைப்பு.

இளைஞர்கள் இப்படிச் செய்வதால் என்ன லாபம் என்று கேட்பவர்களுக்கு அருமையான பதிலை வைத்திருக்கிறார் தனுசன். "இயற்கையை நாம் நேசிக்கின்றோம், இயற்கை எங்களை நேசிக்கின்றது. அந்த மனநிம்மதிதான் எமக்கு கிடைக்கின்ற இலாபம்."

## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்

4

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 4 | | | | 6 | |
| 5 | 16 | 9 | | 9 | 18 | 8 |
| | 2 | | | | 5 | |
| | 7 | | | | 4 | |
| 2 | 12 | 6 | | 8 | ? | 7 |
| | 3 | | | | 6 | |


பெட்டியில் வரும் இலக்கம் யாது?




குமரன்

# சோதனை மேல் சோதனை போதுமையா முருகா!











சில நாள்களுக்கு முன்னர் நல்லூர் வெளி வீதிக்குள் உள்ள தனது வீட்டுக்குப் போவதற்கு இரண்டு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது என்று சீறிச் சினந்து அங்கலாய்த்துக் கொண்டார் நண்பர் ஒருவர்.

நல்லூர் ஆலய வளாகத்துக்குள் நுழையும் எவரையும் ஸ்கான் எடுத்த பின்னரே உள்ளே அனுமதிப்பது என்ற நடைமுறை இறுக்கமாக இருப்பதால், மின்சாரம் தடைப்பட்டுப் போன நேரத்தில் ஸ்கான் கருவி செயற்படவில்லை என்று தெரிவித்து யாரையும் உள்ளே விடமுடியாது என்று காவலர்கள் மறித்துவிட்டார்கள்.

இரண்டு மணி நேரத்தின் பின்னர் மின்சாரம் வந்து ஸ்கான் கருவி வேலை செய்யத் தொடங்கிய பின்னரே மீண்டும் ஆள்களை உள்நுழைய அனுமதித்தார்கள் என்பது தான் நண்பரின் அங்கலாய்ப்புக்குக் காரணம்.

கடவுள் சோதிப்பார் என்ற காலம் போய் கடவுளைக் காண்பதற்கே சோதனை என்கிற காலமாகிவிட்டது இன்று.

இரண்டு வருடங்களாகவே யாழ்ப்பாணத்தின் நல்லூரானின் பெருமகோற்சவ காலப் பகுதியில் மனம் உருகி முருகனைத் தரிசிக்க வருபவர்கள் கடுமையாகச் சோதிக்கப்படுவார்கள். நல்லவர்களைத்தான் கடவுள் சோதிப்பார் என்பார்கள். இங்கே வருபவர்கள் எல்லோருமே சோதிக்கப்படுகிறார்கள்.

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தற்கொலைக் குண்டு வெடிப்புகள் காரணமாக நல்லூரில் பாதுகாப்புக் கெடுபிடி அதிகரிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு கொரோனா பெருந்தொற்று காரணமாகவும் பக்தர்களுக்குச் சோதனை.

கடந்த ஆண்டு ஆலயத்தைச் சூழ நாற்பதிற்கும் மேற்பட்ட கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்பட்டன. நூற்றுக்கணக்கான படையினர், காவல்துறையினர் கடமைக்காக அழைக்கப்பட்டனர். இவையனைத்திற்கும் மேலாக ஆலயத்தைத் தொடர்புபடுத்தும் வீதிகள் அனைத்தும் மூடப்பட்டு அவற்றுக்குப் பதிலாக மாற்று வீதிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆலயத்தின் நான்கு புற வாயில்களிலும் படையினர், காவல்துறையினர் கண்காணிப்புடன் சோதனைச் சாவடிகள் மற்றும் சோதனைக்கான டிஜிற்றல் ஸ்கானர்கள் அமைக்கப்பட்டுப் பக்தர்கள் சோதிக்கப்பட்டனர். உள்ளே சென்றாலும் புலனாய்வாளர்களதும் பொலிஸாரினதும் கழுகுப்பார்வைக்கு மத்தியில்தான் வழிபடமுடிந்தது.

இந்த வருடம் கடந்த வருடத்தைவிடவும் ஏற்பாடுகள், கெடுபிடிகள் இன்னும் தீவிரம். கோயிலுக்குள் ஐம்பது பேருக்குத்தான் அனுமதி, நூறு பேருக்கு அனுமதி, முன்னூறு பேருக்கு அனுமதி என்று தொடக்கத்திலேயே கெடுபிடிக்கான அறிவிப்புக்கள் தூள்பறக்கத் தொடங்கிவிட்டன.



கடந்த சனிக்கிழமை கொடியேறியபோதுதான் உண்மை நிலவரம் தெரியவந்தது. ஆலயத்துக்கு வருபவர்கள் அடையாள அட்டையினைக் கட்டாயம் தம்வசம் வைத்திருக்க வேண்டும். வெளிநாடுகளில் இருந்து வருபவர்களானால் தனிமைப்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழையும் தம்முடன் கூடவே கொண்டுவருதல் கட்டாயம். அனைவரும் முகக் கவசம் (மாஸ்க்) அணிந்திருக்க வேண்டும். அத்துடன் உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் கைகள் கழுவுவதும் கட்டாயம்.


ஆலய வளாகத்துக்குள் நுழைபவரது அடையாள அட்டையும் முகமும் கமெரா மூலம் பதிவுசெய்யப்படும்; தேவை ஏற்பட்டால் தேடிப் பிடிப்பதற்கு இலகுவாக. ஆலய வளாகத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்று மாறும் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதென்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டன.

நல்லூரானை தரிசிக்க வருபவர்கள் தங்களை உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் தூய்மைப்படுத்தியே ஆலயத்துக்கு வருவார்கள். இவ்வாறு வருபவர்களை சோதனை என்கின்ற பெயரில் சோதித்து மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் தூய்மையற்றவர்களாக்கியே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கின்றனர் என்று குறைப்பட்டுக் கொள்ளும் பக்கதர்களும் இருக்கிறார்கள்.

அதற்காகக் கொரோனா போன்றதொரு பெருந் தொற்றுக் காலத்தில் அலட்சியமாகவும் இருந்துவிட முடியாது என்பதும் நியாயமானதுதான். விரைவில் கொரோனாவின் பிடியில் இருந்து விடுபட்டு விட்டால் மட்டுமே இந்த நிலையைத் தவிர்க்க முடியும்.

எனவே சோதனைகள் போதுமையா என்று கந்தனைத் துதிப்பதுதான் ஒரே வழி! ■

## மூளைக்கு வேலை




5

அடுத்து வரும் இலக்கம் என்ன?

# கூந்தலின் தோழி செவ்வரத்தை !

செவ்வரத்தம் பூ, அதன் இலைகள் ஆகியவற்றைப் பிசைந்த திரவத்தைச் சிறு பராயத்தில் குழந்தைகளுக்குத் தலையில் தேய்த்துக் குளிப்பாட்டினார்கள் மூதாதையர்கள். அந்தக் குழந்தைகள் வளர்ந்து இப்போது இயந்திரங்கள் தயாரிக்கின்ற செயற்கைத் திரவியங்களைத் தம் தலையில் தேய்ப்பதுடன் தமது குழந்தைகளின் தலைகைளிலும் தேய்த்து நறுமணம் வீசுகின்றனர். செவ்வரத்தையை மறந்து விட்டனர்.

மருத்துவ குணம் கொண்ட செவ்வரத்தையைப் பயன்படுத்துவது சருமத்திற்கும், கூந்தல் பராமரிப்புக்கும் மிகச் சிறப்பானது. நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குச் செவ்வரத்தம் பூவில் பல மருத்துவ குணங்கள் அடங்கியுள்ளன. காயவைத்த செவ்வரத்தம் பூவின் இதழ்களுடன், ஆவாரம்பூ, பாசிப்பயிறு, கருவேப்பிலை இவைகளைச் சேர்த்துத் தூளாக்கிச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். குளிக்கும்போது சவர்க்காரத்துக்கப் பதில் இந்தத் தூளை உடம்பில் தேய்த்துக் குளித்து வந்தால் தோல் நோய் வராமல் தடுத்துக் கொள்ளலாம். உடலும் பளபளப்பாகும்.



செவ்வரத்தை இலைகளுடன் கருவேப்பிலை, மருதாணி இலை சேர்த்து அரைத்துத் தலையில் தேய்த்து ஊற வைத்துக் குளித்தால் இளநரை, சொடுகு, முடி உதிரும் பிரச்சினைகள் நீங்கும். வாரத்திற்கு 2 முறை இதைச் செய்துவந்தால் தலைமுடி சார்ந்த பல பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். இப்படி செய்து வரும்போது நம் கண்களும், உடலும் குளிர்ச்சி அடையும். உடற் சூடு தணியும்.

பேன், ஈர் தொல்லை அதிகமாக இருப்பவர்கள் இரவில் தூங்கும் போது செவ்வரத்தம் பூவைத் தலையில் வைத்துப் படுத்து உறங்கினால் அவை குறைவடையும். 2, 3 செவ்வரத்தம் பூக்களை நீரில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி ஒரு டம்ளர் அளவு நீரில், ஒரு கரண்டியளவு தேன் கலந்து குடித்து வந்தால் குருதிச் சோகை நீங்கும். குருதியிலுள்ள ஈமோகுளோபினின் அளவு அதிகரிக்கும்.

நிறுவனங்கள் இயந்திரம் மூலம் தயாரித்துக் கடைகளில் கிடைக்கின்ற செயற்கைப் பூச்சுகள், திரவியங்களுக்குப் பதிலாக இவ்வளவு இயற்கை மருத்துவ குணம் கொண்ட செவ்வரத்தையைப் பயன்படுத்தி நலமடைவோம்.

# அகராதி பிடிச்சவன் பதில்கள்



**கே:** அருகிப்போகும் தமிழை வளர்க்க இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கு நீங்கள் சொல்லும் அறிவுரை என்னவாக இருக்கும்?

**ப:** சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம் என்று முன்னரே சொல்லி வைத்திருக்கிறார்கள். தமிழை வளர்க்க இளைஞர்கள் தெளிவாகத் தமிழ் பேசவேண்டும், தமிழில் பேச வேண்டும். ஆங்கிலத்தையும் பிற மொழிச் சொற்களையும் கலக்காது தமிழைப் பேச இன்றைய இளைஞர்கள் முயற்சிப்பார்களானால் போதும் தமிழ் வளர்ந்துவிடும். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் என்று பெருமை பேசுவதோடு நின்றுவிடாது விண் தாண்டி வேற்றுக் கிரகம் வரை செல்லத் தமிழ் வளர்ப்பதே இன்றைய தேவை. நல்ல புத்தகங்களின் வாசிப்பை இளைஞர்கள் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இன்றைய நவீன உலகில் அவை அச்சுப் புத்தகங்களாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை, மின் நூல்களாகவும் இருக்கலாம். ஆனால், நல்ல புத்தகங்களின் வாசிப்பைத் தமது அலைபேசிகளிலும் கணினிகளிலுமாக இளைஞர்கள் அதிகரிப்பது மிக முக்கியம்.

**கே:** சாதி மீண்டும் யாழ்ப்பாணத்தில் வேகமாக வளர்ந்து வருவது போலத் தெரிகிறதே அது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு?

**ப:** இங்கே சாதி எப்போது ஒழிந்தது? அது கொஞ்சக் காலம் பயந்து பம்மிக் கிடந்தது. ஆயுதப் போராட்டக் காலத்தில்கூட திருமணம், காணி விற்பனை மற்றும் சொத்துப் பரிமாற்றம் என்று சாத்தியமான எல்லா இடங்களிலும் சாதி தன் கால்களை அகலப் பரப்பித்தான் இருந்தது. ஆனாலும் பகிரங்கமாகத் தன்னை வெளிப்படுத் தயங்கி, மயங்கிக் கிடந்தது. ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட நிலையில் இன்று அது தன் கோரப் பற்களை வெளிப்படையாகக் காட்டுவதற்குப் பயமற்றிருக்கிறது. சாதிய மையச் சிந்தனையை முற்றாக ஒழிக்கக் கூடிய சமூகப் புரட்சி நோக்கி தமிழ் மக்கள் வழிப்படுத்தப்படவேயில்லை என்பது வருத்தத்திற்குரியது. அதை தலைமை தாங்கி முன்னெடுத்திருக்கக்கூடிய அரசியல் கட்சிகளே வாக்கு வேட்டைக்காக சாதிய வேட்பாளர் தெரிவு முறையைக் கைக்கொள்ளும் நிலைமைதான் இன்றும் இருக்கிறது. சாதிகள் இரண்டன்றி வேறில்லை என்பதே எம் நிலைப்பாடு.

**கே:** முகநூலில் தமது சிமிட்டல்களைப் பதிவிடுகின்ற பெண்கள் பற்றி?

**ப:** இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு முன்னர், சிமிட்டல்களையும் கொஞ்சல்களையும் குழைவுகளையும் வெளிப்படுத்தும் பாலியல் பண்டமாகப் பெண்ணை உருவகப்படுத்தி வளர்த்தெடுத்த சமூகத்தின் ஓர் அங்கமாக நாம் இருக்கிறோமே, அதை மாற்ற எம்மளவில் என்ன செய்திருக்கிறோம் என்று உங்களை நீங்களே கேட்டிருந்தீர்களானால் என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்க நினைத்திருக்கமாட்டீர்கள். திணை விதைத்தால் திணை அறுக்கலாம். வினையை விதைத்துவிட்டு திணையை எதிர்பார்க்கக் கூடாது.

**கே:** வடக்கின் கல்வித்துறை தொடர்ந்தும் வீழ்சிப் பாதையிலே பயணிக்கின்றது. இதற்கு காரணம் என நீங்கள் கருதுவது?

**ப:** கடந்த காலம், போர்க் காலம், போருக்குப் பின்னரான காலங்களின் கல்வி நிலைகளை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு வடக்கின் கல்வித் துறை வீழ்ச்சியடைந்துவிட்டது என்று சொல்வது ஒரு அபத்த ஒப்பீடாகவே இருக்க முடியும். இன்றைய மாணவர்களுக்குக் கிடைக்கும் வசதிகள், வாய்ப்புக்கள், தொழில்நுட்பங்கள் என்பவற்றின் அடிப்படையோடு ஒப்பிடும்போது கல்வி அடைந்திருக்க வேண்டிய எல்லையை அடையாமல் விட்டிருந்தால், வீழ்ச்சிப் பாதையில் பயணித்திருந்தால் அது கவலைக்குரியதுதான். போருக்குப் பின்னரான நிலையில் உலகமயமாக்கல், நுகர்வுப் பண்பாடு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி என்பவற்றைப் படிப்படியாகக் காலவோட்டத்தில் எதிர்கொள்ளாமல் திடீரென எதிர்கொண்டதால், ஆற்று வெள்ளத்தில் அள்ளுண்டு சென்றதைப் போன்ற நிலைக்குள் தமிழ்ச் சமூகம் சிக்கிக்கொண்டதும் இதற்கொரு காரணம். அதைச் சீர் செய்ய மொத்தச் சமூகமும் ஒன்றிணைவது அவசியம்.

**கே:** தற்போது தமிழ் அரசியல் களத்தில் உள்ளவர்களில் மிக எளிமையானவர் யார்?

**ப:** ஓய்வு பெற்ற பின்னர் மக்களுக்குச் சேவை செய்ய வந்தேன் என்று கூறுகின்ற முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனே இரவல் சொகுசு வாகனத்தில் திரிகின்றார் என்கிறபோது எளிமை மிக்க அரசியல்வாதி என்று எந்தத் தலைவரையும் சொல்ல முடியாது. ஏனெனில் ஒரேயொரு தடவை மாகாண சபையில் பதவி வகித்தவர்களிடமே இன்றைக்குக் காரும் அதற்கான சாரதியும் இருக்கின்றனர் என்பதுதான் உண்மை. எனவே கட்சிகளின் உண்மையான விசுவாசிகளாக உள்ள தொண்டர்களையும் அரசி யல்வாதிகள் ஊடாக ஓர் அரச வேலை வாய்ப்பாவது கிடைத்துவிடாதா என்கிற அங்கலாய்ப்பில் தேர்தல் பரப்புரைக்காக இழுபட்டுத் திரியும் இளம் ஆண், பெண்களையும் வேண்டுமானால் தமிழ் அரசியல் களத்தில் உள்ள எளிமையாளர்கள் என்று சொல்லிக்கொள்ளலாம். ■

**உங்கள் கேள்விகளை**
**551 A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**என்கிற தபால் முகவரிக்கு**
**அல்லது**
**shemman.redsoil@gmail.com**
**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு**
**அனுப்பி வையுங்கள்.**

ப்

## நலம் வாழ எந்நாளும்...

### கொஞ்சும் இளமைக்கு இஞ்சி



*வஞ்சி இளமைலே மானிலத்தில் நல்ல*
*இஞ்சியின் குணம் கேள்*
*நஞ்சகற்றும் நாவில் ருசியேற்றும் நல்ல வண்ணம்*
*குடல் இயங்கச் செய்யும்*
*நெஞ்செரிச்சல் நீங்கும் காண்,உப்பிட்டுப் பருக*
*மலமிளகும், பசி எடுக்கும்,*
*அஞ்சாதே மகளே தொண்டைவலி, இளைப்பிருமல்*
*இதைக் கண்டாலே ஓடும், பலம் பெருகும்.*
*இன்னும் கேள்*
*தஞ்சமென்று இதைக் காலையிலேயே*
*தினம் அருந்த*
*என்றென்றும் கொஞ்சி நிற்கும் இளமை உன்னோடு.*

**விளக்க உரை**

**இளம் மயில் போன்றவளே நன்மை அதிகம் உள்ள இஞ்சிக் கிழங்கின் மருத்துவப் பயன்களைக் கேட்பாயாக! இதை உணவில் சேர்த்தால் நச்சுத் தன்மையை நீக்கு கிறது, சமிபாட்டைத் துரிதப்படுத்துகின்றது. பித்த அதி கரிப்பால் ஏற்படும் நெஞ்செரிச்சலை நீக்குகிறது. இதை உப்பிட்டு கஷாயமாக்கி அருந்தினால் மலமிளக்கியாகவும் தொழிற்படுகின்றது. பசியைத் தூண்டுகின்றது. அஞ்ச வேண்டாம் மகளே இஞ்சியுடன் மிளகு திப்பலி சேர்ந்த கசாயம் தொண்டை வலியை நீக்குகிறது. இதனால் இழைப்பிருமல் [அஸ்மா] தணிகிறது. இதை தேனிட்டு [காய கல்பமாக] தினமும் காலையிலேயே அருந்திவர உடலின் இளமை குன்றாது பாதுகாக்கிறது.**

**மருத்துவர்**
**கந்தையா சோதிதாசன்**

## அவனைப் பற்றிய கவிதைகள்



*1*

*என் விண்ணை, விடி விளக்கை, விரிகதிரை*
*கற்கண்டாய் இனிக்கின்ற*
*கண்ணான சூரியனை, காத்திருந்தேங்கி கனவில்*
*அவன் பேர் சொல்லி.*
*கட்டியணைத்துப் பின் காணாது, விழித்தழுது.*
*காதலின் நோய் மிகுந்து.... கவலை மிகவாகி*
*காற்றோடு பேசி. காலங்கள் நகராது.*
*விடியாத இரவை கோபித்து மனம்*
*கொந்தளித்து ஆற்றாது அழுது தவிக்கிறேன்.*
*அவனை அழைத்து வராத நிலவைச் சபிக்கிறேன்.*


*2*

*என் கண்ணுக்குள் நின்றானை*
*காதல் கலகம் செய்தானை*
*மனம் மயக்கும் மன்னவனை*
*என் மனம் கொன்றானை*
*நெஞ்சுக்குள் நினைந்து நினைப்பொழிந்து*
*நீள் இரவு பகலாகும் நிலைமை கூடி*
*அவன் பேர் ஒன்றே சொல்லி*
*பிதற்றித் திரிவேன் யான்*
*அவன் என்னை மாயக் குழலெனவே*
*செய்வான் போடி.*

*3*


*உன் குரலன்றி யாதும் கேட்பதில்லை என் செவிகள்.*
*திரும்பும் திசை எங்கும் நீயே நிறைந்திருக்கிறாய்.*
*காலையில் ஒளியாய் மாலையில் சிகப்பாய்.*
*நீயே எங்கும் தெரிகிறாய்.*
*உன்னிடம் அன்றி யாருடன் சொல்வேன் என் துயர்.*
*நீ அன்றி யார் தருவார் அன்பெனும் அமுதம்*
*நீ இன்றி யார் தணிப்பார்*
*என் மனத்தாகம் உனக்குத் தர என்னிடம் இருப்பது*
*இந்த உயிர் காதல் மட்டும்தான்.*

- அஞ்சு.



சவூதி அரேபியாவின் மக்கா ஆலயத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் வருடாந்த ஹஜ் தொழுகை நடந்தது. மசூதியின் காபாவைச் சுற்றி வட்ட வடிவில் யாத்ரீகர்கள் சமூக இடைவெளியைப் பேணி வழிபாடு நடத்தினர்.

இணையக் கற்றலின் போது வழங்கப்பட்ட வீட்டு வேலைகளை முடிக்காத காரணத்தால் கிரேஸ் என்கிற மாணவி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார் என்று கடந்த வாரம் அறியத்தந்திருந்தோம். அந்த மாணவிக்கு ஆதரவாக மிச்சிகனில் உள்ள டெட்ராய்ட் புறநகர்ப் பகுதியான போண்டியாக், ஒக்லாண்ட் நீதிமன்றம் மற்றும் வழக்குரைஞர்கள் அலுவலகம் எனப் பல இடங் களில் போராட்டங்கள் நடந்தன.






பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் உள்ள முன்ஷிகஞ்ச் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் தனது வீடு வெள்ளத்தில் மூழ்கியிருக்க நபர் ஒருவர் படகில் பார்வையிடுகிறார்.



உள்நாட்டுப் போர் வெற்றியைக் குறிக்கின்ற 67 ஆவது ஆண்டு நினைவு நாளில் ஆயுதப்படைகளின் முன்னணிக் கட்டளை அதிகாரிகளுக்குத் துப்பாக்கிகளை வழங்கிய வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன் அவர்களுடன் ஒளிப்படம் பிடித்துக் கொண்டார்



அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள நீதிமன்றத்தில் காணொலி மூலம் நடந்த வழக்கு விசாரணையின் போது முகநூல் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி மார்க் ஜுக்கர்பெர்க் பேசுகிறார்.

இந்தியாவின் அசாம் மாநிலத்தின் மொரிகான் மாவட்டத்தில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகத் திட்டை ஒன்றில் தஞ்சமடைந்துள்ள குழந்தைகளும், கால்நடைகளும்.

## கடந்த வார உலகில்....





ஏமனின் சனா நகரில் வசிக்கின்ற ஹமாஷீன் சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்கள், ஹவுத்திப் போரா ளிகள் சார்புக் கூட்டத்தில் கலந்து கொண்டதோடு ஆயுதங் களையும் ஏந்திக் காட்சியளித்தனர்.

## ஒரு கேள்வி ஒரேயொரு கேள்வி!

**கேள்வி:** மஞ்சள், இஞ்சி போன்றவற்றை உட்கொள்வதால் நோய்த் தடுப்பாற்றல் அதிகமாக இருக்கும் என்றும். இலங்கையில் மஞ்சளும் இஞ்சியும் உணவில் எடுத்துக்கொள்ளப்படுவதால்தான் இங்கே கொரோனா இறப்புகள் குறைவாக இருக்கின்றன என்றும் கூறப்படுவது பற்றி?

**பதில்:** மேற்கத்திய நாடுகளைவிட ஆசிய நாடுகளில் கொரோனா இறப்பு விகிதம் குறைவுதான். அதற்கான காரணம் இனிமேல்தான் நிறுவப்பட வேண்டும். ஆசிய நாடுகள் எல்லாவற்றிலும் மஞ்சளும் இஞ்சியும் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லிவிடமுடியாது. இஞ்சி, மஞ்சள், உள்ளி (பூண்டு) போன்ற பாரம்பரியமான உணவுப் பொருள்களின் நன்மைகள் பற்றிய பாரம்பரிய நம்பிக்கைகள் இருக்கின்றன. ஆனால், அவற்றை எப்போதாவது அல்லது நான்கைந்து நாள்கள் உணவில் சேர்த்துக்கொள்வதால் அந்த நன்மை கிடைத்து விடாது. என்றாவது ஒரு நாள் உடற்பயிற்சி செய்வதால் உடல் வலுப்பெற்றுவிடாது அல்லவா? அதுபோல இப்போது திடீரென்று நிறைய இஞ்சி, மஞ்சள் சேர்த்துக் கொள்வதால் பயனிருக்காது. பாரம்பரிய உணவுகளில் இருக்கிற மூலக்கூறுகள் என்ன, அவை உடலில் செயல்படும் விதம் எத்தகையது என்பன பற்றி அறிவியல் ஆராய்ச்சிகள் நடத்தப்படாமலிருப்பது வருத்தத்திற்குரியதுதான். அந்த ஆராய்ச்சிக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு சீனாவின் மருந்தாய்வாளர் டூ யூயூ.

அவர் அங்கே பாரம்பரியமாக உணவில் சேர்த்துகொள்ளப்படுகிற ஒரு பொருளின் மூலக்கூறுகளைக் கண்டுபிடித்தார், மலேரியாவைத் தடுப்பதில் அவை வெற்றிகரமாகச் செயல்படுவதை அறிவியல்பூர்வமாக நிரூபித்தார். அதற்காக அந்தப் பெண்மணிக்கு நோபல் விருது வழங்கப்பட்டது. இலங்கை, இந்திய பாரம்பரிய உணவுப்பொருள்களின் மருத்துவ குணத்தை நிரூபிக்க நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன, ஆனால் ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தத் தவறிவிட்டோம்.

இந்தியாவில் சில மருத்துவநிலைச் சோதனைகள் தற்போது நடந்துகொண்டிருக்கின்றன. ஜம்முவில் இருக்கிற ஒருங்கிணைந்த மருந்துகளுக்கான ஆராய்ச்சி மையமும், நியூடில்லியில் இருக்கிற மரபணுப் பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனமும் இணைந்து, ஒரு பழங்குடியினர் பாரம்பரியமாகப் பயன்படுத்தி வருகிற ஒரு மூலிகையின் மூலக்கூறுகள் கிருமிக்கு எதிரானவை என்று சோதனைக்கூட அளவில் நிரூபித்திருக்கிறார்கள். இதுபோல் அனைத்துப் பாரம்பரிய உணவுப்பொருள்களும் மூலிகைகளும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுவது மனிதகுலத்திற்குப் பேருதவியாக இருக்கும்.

---

### சுள்ளியின் பம்பல்

பல வருடங்களாக வேலைக்கே செல்லாமல் இருந்ததில் அலுப்புத் தட்டிப்போன சுள்ளி ராஜா கடை ஒன்றில் முகாமையாளர் வேலைக்கு ஆள் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்து அதற்கு விண்ணப்பித்தார். அவரே எதிர்பார்க்காமல் நேர்முகத் தேர்வுக்கு வருமாறு அழைப்புக் கடிதம் வந்துவிட்டது. சுள்ளிக்கு ஒரு பக்கத்தில் மகிழ்ச்சியாக இருந்தாலும் மற்றொரு பக்கத்தில் என்னத்தைக் கேக்கப் போறாங்களோ அறுவார் என்கிற பயம்வேறு. இருந்தாலும் பயத்தை வெளிக்காட்டாது சுள்ளி குறித்த தினத்தில் நேர்முகத் தேர்வுக்குப் போனார். அங்க போனால்.... சுள்ளியைத் தவிர வேற ஒருத் தரும் இல்லை. சுள்ளி நல்லா எல்லா இடமும் சுத்திமுத்திப் பார்த்தார் ஒருத்தரையும் காணயில்லை. உள்ளே ஓர் அறை இருந்தது. அதுக்குள்ள ஆள் நடமாட்டம் இருந்த மாதிரி இருந்தது.



பின்ன சுள்ளி அறைக் கதவைத் தட்டி உரத்த குரலில் கேட்டார்.

சுள்ளி: மே ஐ கம் இன் சேர்? (நாள் உள்ளே வரலாமா?) உள்ளிருந்து : வெயிட் பிளீஸ் சுள்ளி: 75 கிலோ சேர்! என்றாரே பார்க்கலாம்.

---

# அவள் என் மகள்

■ சிதம்பரபாலினி கதிர்காமநாதன்

என்றும்போல அன்றும் வேலை முடிந்து வீடு வந்து சேர்ந்தேன். எப்போதும் சிரித்தபடி ரீ கொண்டுவந்து வைக்கின்ற மனைவியின் முகம் அன்று ஒரு மார்க்கமாக இருந்தது. ‘சரி இண்டைக்கு ஒரு றெஸ்லிங் மச் நடக்கத்தான் போகுது’ என்று நினைத்துக் கொண்டு ரீயைக் குடித்தேன்.

அப்போது பிள்ளைகள் மூவரும் றிப்போட் அட்டையைக் கொண்டு வந்து கையில் தந்தார்கள். ‘இதிலதான் ஏதோ விசயம் இருக்கு’ என்று எண்ணியபடி, அவற்றைத் திறந்து பார்த்தால், மூவரின் மதிப்பெண்களும் யாழ்ப்பாணத் தமிழ்க் கட்சிகளின் செயற்பாட்டைப்போல மிகக் குறைவாகவே இருந்தன. நான் யோசனையுடன் மனைவியை நோக்க அவளோ ‘தெரிஞ்சுட்டுதா’ என்று காஞ்சனா பட லோரன்ஸ் பாவனையில் இருந்தாள்.

கடந்த சில மாதங்களாகவே பிள்ளைகளினது படிப்பும் மார்க்ஸும் வீட்டில் பெரியதொரு பேசுபொருள்களாகவே இருந்து வருகின்றன. "அப்பா இவைக்கு மார்க்ஸ் வருகுதில்லை. இவையளை ரியூசனுக்கு விட்டால்தான் சரி வருவினம். பக்கத்து வீட்டுப் பெடியனும் போறானாம்" என்று மனைவி வேதம் ஓதத் தொடங்கினாள். எனக்கோ என் பிரச்சினை!

நான் எடுக்கிற சம்பளத்தில் ரியூசனுக்கும் காசைக் கொடுத்தால் காத்தைத்தான் குடிக்க வேணும். ஆனால், மைன்ட் வொய்ஸ்சை வெளியே காட்டாமல், "இங்க பாருங்கப்பா! இவை கெட்டிக்காரப் பிள்ளையள். வீட்ட இருந்து படிச்சாலே மார்க்ஸ் எடுப்பினம்'' என்று கூறி அன்றைய சண்டையை முடித்து வைச்சன்.

ரியூசனுக்குப் போறது காசுப் பிரச்சினை மட்டுமில்ல. வேறு சில பிரச்சினைகளையும் கொண்டு வந்திடும் என்று நினைத்தே அனுப்பவில்லை. படிக்கவேண்டும் என்று பிள்ளையளைக் கண்டித்து வைத்தேன். இரண்டு வாரங்கள் ஒழுங்காக வீட்டில் படித்தார்கள். பிறகு மீண்டும் வெறித்தனம் வெறித்தனம்தான்.

இன்றோ என் மனைவி முன் "சிங்கப் பெண்னே! சிங்கப் பெண்னே! ஆணினமே உன்னை வணங்குமே!'' என்ற நிலையில் இருந்தேன். மனைவியும் பிள்ளைகளும் புதிதாக வந்த ஜனாதிபதியைத் தமிழ் மக்கள் "இவரால் ஏதும் நல்லது நடக்குமோ'' என்று ஆவலாகப் பார்ப்பதுபோல் பார்த்த வண்ணமிருந்தனர். நானும் "சரி சரி நாளைக்குத் தவம் அண்ணையோடை கதைச்சிட்டு ஒரு ஒழுங்கு செய்யிறன்...'' என்றேன். உடனே ஏதோ சுப்பர் சிங்கரில் பெரிய வீடு கிடைத்தது மாதிரி நால்வரும் கட்டித் தழுவிச் சீன் போட்டார்கள்.

மறுநாள் எனது கள ஆலோசகர் தவமண்ணை வந்தார். "அண்ணை எங்க நல்ல ரியூசன் இருக்கு?'' என்றேன். "டேய் சைக்கிளை எடுத்து மெய்ன் றோட்டில விடு. முடக்கு முடக்கா ரியூசன் இருக்கு. அதில எந்த ரியூசன் போஸ்ரர் பெரிசா போட்டிருக்கோ அதுதான் நல்ல திறம் ரீயுசன்'' என்றார்.

அவரின் ஆலோசனைப்படி எனது தேடுதல் வேட்டையைத் தொடங்கினேன். என் மனைவி பிள்ளையள் எல்லோரும் ஏதோ நாட்டைக் காக்கச் செல்லும் சிப்பாயைப்போல வாழ்த்தி அனுப்பி வைத்தனர். அண்ணை சொன்ன மாதிரி முடக்கு முடக்காய் போர்ட்தான். என்னடா உதிலை எல்லாம் ஆக்கள் இருந்தவைதானே இப்ப எல்லாரும் வெளிநாடு போய்விட்டினம். நாட்டுப் பிள்ளைகளுக்குச் சேவை செய்யிறதுக்காக வீடுகளை எல்லாம் வாடகைக்குக் குடுத்திட்டுப் போயிருக்கினம். என எண்ணியபடி றோட்டில் இருப்பவற்றை வாசித்தபடி சென்றேன்.

"தரமான ஆசிரியர்கள் எங்களிடம்தான், போன வருடம் ஸ்கொலர்சிப்பில் பாஸ் என்று 25 பிள்ளைகள் கேற் ஓட ஒரு படம்'' என்று பல பல. விட்டால் உங்கள் மகன் இங்கே படித்தால் கொரோனா வைரசுக்கு மருந்து கண்டுபிடிப்பான் என்றுகூடப் போடுவார்கள். எல்லா ரியூட்டறிகளிலும் அம்மாமார் சூட்டியில வந்து ஏதோ நாடாளுமன்ற எம்பிகள் சல சலப்பதுபோல் சலசலத்தபடி.

மற்றுமொரு ரியூட்டறியில் இடை வயதுப் பிள்ளைகள் வாசலிலிருந்து கதை பேசியபடி இருந்தனர். கையில் ஒரேயொரு கொப்பியும் பேனாவும். றோட்டில் போய்வரும் பிள்ளைகளைக் கிண்டல் செய்தபடி ஒரு சிலர் அதற்கு முன்னிருந்த கடையை முழுதாக அடைத்தபடி, ஏதோ வாயில் கொறித்தபடி இருந்தனர். வேறு சில பிள்ளைகள் தமது வயதைவிடக் கூடிய சில ஆண் பையன்களுடன் தீவிரமாக விவாதித்தபடி. சில பெண் பிள்ளைகள் அங்குமிங்கும் உலா வந்தபடி.

நாம் படித்த காலத்தில் வெறும் பாடசாலைப் படிப்பு மட்டும்தானே. அன்றைய கல்வி நிலை ஒழுக்கம் இன்றைய நிலையைவிட மேன்மையானதாக உயர்வானதாக இருந்ததே. ஏன் இன்று பாடசாலைக் கல்வி மட்டும் போதாதா? அல்லது பாடசாலைக் கல்வி திருப்தியாக இல்லையா? அல்லது பக்கத்து வீட்டுப் பிள்ளை 3 இடங்களில் படிக்கப்போனால், நாங்கள் 5 இடங்களில் படிக்க விடவேணும் என்று நினைக்கின்ற பெற்றோரின் மடத்தனமா? எது எது எம்மை இங்கு கொண்டு வந்து சேர்த்தது.

படிப்புக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, வாழ்க்கையின் முழுமையை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கத் தவறி விடுகிறோமா? கடைசியில் படிப்பும் இல்லை. ஒழுக்கமும் இல்லை. இவ்வாறு ஆயிரம் கேள்விகள்.

நான் ஒரு முடிவுடன் சைக்கிளை வீடு நோக்கித் திருப்பினேன். வீட்டு வாசலில் மனைவி எதிர்பார்த்தபடி நின்றாள். என்னைக் கண்டவுடன் "என்ன ரியூசன் பாத்திட்டீங்களோ அப்பா? இவையளைக் கொண்டுபோய்ச் சேர்க்கலாமோ?'' என்று கேட்டாள். நான் பதில் கூறாமல் உள்ளே சென்று என் மூத்த மகளை அழைத்தேன். கேள்வியாய் என்னை நோக்கியபடி வந்து நின்றாள்.

"இங்கே பாராம்மா. இந்தக் காலப் படிப்பின் வேகத்துக்கு ரியூசனுக்குப்போனா நல்லம் போலத்தான் கிடக்கு. ஆனா அங்க படிக்க வாற எல்லாரது நோக்கமும் ஒரே மாதிரி இருக்காது. நீ உன் படிப்பில் மட்டும் கவனமாக இருந்துகொள். ஏதும் சிக்கல் என்றால் எங்களோடை நேராக் கதைத்துக் கொள்'' என்று சொன்னேன்.

மகள் என்னைப் பார்த்த பார்வையில் எனது அச்சமும் சந்தேகமும் கலையத் தொடங்கியது.

---


## செம்மண் வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

# கடவுளாய் மாறிய மருத்துவர்கள்..!!



## மனமுருகும் ஈரல் மாற்றிய சிறுமியின் தாய்

குமரன்

தனது குழந்தையைக் கட்டியணைத்தபடி இருக்கும் அந்தத் தாயின் முகத்தில் அத்தனை மகிழ்ச்சியான சிரிப்பு. தன் குழந்தையை மீண்டும் பெற்றெடுத்த பூரிப்பு.

9 வயதான சாரங்கன் கிஷானு எனும் தனது மகளை சாவின் விளிம்பிலிருந்து மீட்கும் போராட்டத்தில் சத்தியவானை மீட்ட சாவித்திரியைப் போல் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு தளர்ந்திருக்கிறார் ரசித்தா (வயது 38).

இலங்கையில் ஈரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட முதல் சிறுமி கிஷானு. ஆடி மாதம் 14ஆம் நாள் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில் இந்த அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டது. இப்போது கிஷானு நலமே இருக்கிறார்.

அவர் வீடு திரும்புவதற்கு முன் தொடர் சிகிச்சைகளுக்காக மேலும் 2 மாதங்கள் வைத்திய சாலையிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தாலும் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை முழுமையான வெற்றி என்று கொழும்பு வடக்கு போதனா வைத்திய சாலை அறிவித்துள்ளது.

12 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த இந்த அறுவைச் சிகிச்சையை சிறப்பு அறுவைச் சிகிச்சை நிபுணர் மருத்துவர் ரொகான் சிறிவர்த்தன தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர்.

கிஷானுவின் ஈரல் செயற்படமுடியாத அளவிற்குப் பாதிப்படைந்ததைத் தொடர்ந்து அவரது தாயிடமிருந்து பெறப்பட்ட ஈரலின் ஒரு பகுதியை வைத்து இந்த மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

"எங்கட பிள்ளை இத்தனை போராட்டத்துக்குப் பிறகு இண்டைக்கு எங்களோட இருக்குதெண்டா அதுக்கு முக்கிய காரணம் பிள்ளைக்கு வைத்தியம் பார்த்த எல்லா டொக்கடர் மாரும் தான்" என்கிறார் கிஷானு வின் தாய் ரசித்தா.

வட்டுக்கோட்டை, மூளாய் தெற் கைச் சேர்ந்தவர்களான சாரங்கன் - ரசித்தா தம்பதியினரின் கடைசிக் குழந்தை கிஷானு. அவருக்கு முன்னால் ஒரு அண்ணன் மட்டுமே இருக்கிறார். அறுவைச் சிகிச்சைகள் ஒன்றும் கிஷானுக்குப் புதிதில்லை. 4 வயதிலேயே அவருக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது.



"பிள்ளைக்கு ஒண்டரை வயசு இருக்கேக்க நிறை காணாமல் இருந்திச்சு. சந்தேகத்தில பரிசோதிச்சு பார்கேக்க, இதயத்தில ஓட்டை எண்டு சொல்லிச்சினம். சின்னன்லயே ஒப்பிரேசன் பண்ணினா நல்லம் எண்டு பிள்ளைக்கு நாலு வயசு இருக்கேக்க பொரள்ளை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் ஒப்பிரேசன் பண்ணினம். அதுக்கு பிறகுபிள்ளை வருத்தம் மாறி நல்ல மாதிரி தான் இருந்திச்சு.." என்றபடியே செம்மண்ணிடம் சரளமாகக் கதை பேசத் தொடங்கினார் ரசித்தா.

"இதயத்தில ஒப்பிரேசன் செய்யேக்க சொல்லிச்சினம் பிள்ளைக்கு ஈரலும் கொஞ்சம் வழமைக்கு மாறா இருக்கு, ஆனா இப்ப பிரச்சினை இல்லை. வளர்ந்தாப் பிறகும் பிரச்சினையெண்டா மாத்தவேண்டி வரும். சின்னப் பிள்ளையளுக்கு இங்க (இலங்கையில்) மாத்திற ஒப்பிரேசன் செய்யேலாது, இந்தியாக்குத்தான் கொண்டு போகவேணும். எப்பிடியும் ஒரு கோடி ரூபா வேணும் எண்டிச்சினம். எங்களிட்ட அவ்வளவு வசதி இல்லை பிள்ளையிண்ட அப்பா மேசன் வேலை, நான் வீட்டில தான். இப்பிடி இருக்கேக்க ஒரு கோடி ரூபாய்க்கு நாங்கள் எங்க போறது?" பெருமூச்சு விட்டுக் கொள்கிறார்.

காசின்றி தன் குழந்தையை எப்படிக் காப்பாற்றப் போகிறோம் என்று ஏங்கிய அந்தத் தாயின் கடந்த காலம் அவரது கண்கள் வழியே நுழைந்து பின்மண்டை வழியாக வெளியேறுகிறதோ...!

"பிள்ளை நல்ல கெட்டிக்காரி. மூளாய் சைவப்பிரகாசா பள்ளிக் கூடத்திலதான் படிக்கிறா. இதய ஒப்பிரேசன் செய்ததுக்கு பிறகு நல்ல மாதிரி பள்ளிக்கூடம் போய் படிச்சுக்கொண்டிருந்தவா விளையாட்டிலயும் நல்ல கெட்டிக்காரி, ஆள் சின்னன்லயே நிறை குறைவெண்டதால வயசுக்கேற்ற தோற்றம் இல்லை. மற்றும்படி நல்ல சுட்டி. திடீரெண்டு போன வருசம் ஐப்பசி மாசம் பிள்ளைக்கு சரியான காய்சல் கண் மஞ்சளா வர தொடங்கீட்டு. அது மட்டுமில்லாமல் வயிறும் வீங்க தொடங்கீட்டு.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டோடிப் போனம். துஸ்யந்தன் என்ற டொக்டரிட்டத்தான் தான் காட்டினம். அவர் சொன்னது எங்களால தாங்கேலாமா போயிட்டு. பிள்ளைக்கு ஈரல் பழுதாய் போய்ட்டு கட்டாயம் புதுசா மாத்த வேணும் எண்டார். அவருக்கு எங்கட நிலமை தெரிஞ்சபடியால பணிப்பாளர் டொக்டர் சத்தியமூர்த்தியோட கதைச்சு ராகம ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைச்சிச்சினம்.

ரெண்டு மூண்டு தரம் ராகமவுக்கு பரிசோதனைக்காக வந்து போனம். அப்பதான் கட்டாயம் ஒப்பிரேசன் செய்யவேணும், இந்த ஒப்பிரேசன் தான் சின்னப் பிள்ளை ஒண்டுக்கு முதன் முதலா இங்க செய்யிறதா இருக்கும் உங்களுக்குச் சம்மதமா எண்டிச்சினம். நாங்களும் சம்மதிச்சு ஒத்துக் கொண்டம். வேற வழி" கண் கலங்குகிறார் ரசித்தா.

"ஒப்பிரேசன் எண்டா நிறையக் காசு தேவைப்படுமே.... என்ன செய்யிறது எண்டு கவலைப்பட்டு, தெரிஞ்சாக்களிட்டக் கேப்பம் எண்டு நினைச்சுக் கொண்டிருக்க... கடவுள் மாதிரி வந்து பிள்ளைக்கு வைத்தியம் பார்க்கிற (ராகம வைத்திய சாலையில்) டொக்டர் தபித்தா, மற்றது அருனாத் என்ற இரண்டுபேரும் எங்கட நிலமையை விளங்கிக் கொண்டு நீங்க வெளியில காசு சேர்க்க வேண்டாம் நாங்கள் டொக்டர் ஆக்களிட்ட காசு சேர்த்து இந்த ஒப்பிரேசன செய்யிறம் எண்டிச்சினம். கடவுளா பார்த்து எங்களிட்ட அனுப்பி வைச் சிருக்கிறார் அவையளை எண்டு நினைச்சுக் கொண்டன். இண்டைக்கு வரைக்கும் உதவி செஞ்ச டொக் டர்மாரை கடவுளா தான் பார்க்கிறம் நாங்கள்.


ஒப்பிரேசனுக்கு ரெடி பண்ண வெளிக்கிட கொரோனா வந்திட்டு பிறகு 2 மாசம் கழிச்சு போன மாசம் தான் ராகம ஆஸ்பத்திரியில பிள்ளைய சேர்த்தம். எல்லா பரிசோதனையும் முடிஞ்சு 14ஆம் திகதி ஒப்பிரேசன் எண்டிச்சினம். விடிய ஏழு மணிக்கு உள்ளுக்கு (சத்திர சிகிச்சை கூடம்) கொண்டு போனவை. இரவு எட்டு மணிக்குத் தான் வெளியில கொண்டந்தவை.

கொண்டந்ததும் பிள்ளைக்கு கொஞ்சம் ஏலாம இருக்கெண்டு ஏழு நாளாக வத்தளை கேமாஸ் பிரைவட் ஆஸ்பத்திரில தான் வச்சிருந்தவை. அந்த ஆஸ்பத்திரிச் செலவைக்கூட முழுசா டொக்டர் மார் தான் பாத்திச்சி னம். ஐ.சி.யுவில பிள்ளையை வச்சிருந்து ஏழு நாளைக்கு பிறகு தான் ராகமவுக்கு விட்டிச்சினம்." ரசித்தாவின் கண்கள் இப்போதும் கலங்கியே இருக்கின்றன. ஆனால் அதில் ஆனந்தம் தாண்டவமாடுகின்றது.

"என்னட்ட இருந்து எடுத்த ஒரு பகுதி ஈரல் தானே பிள்ளைக்கு வைச்சது... அதால நானும் ஆஸ்பத் திரிலதான் இருந்தன் நேற்றுத்தான் (ஆடி 27) எனக்கு ரிக்கற் வெட்டினது. எனக்கு இப்ப ஒரு பிரச்சனையும் இல்ல, பிள்ளையும் நல்ல ஆரோக்கியமாதான் இருக்கிறா. பிள்ளைய பாக்க வாற டொக்டர் ஆக்கள் அவாக்கு படம்கீறுற புத்தகங்கள்,



(20ஆம் பக்கம் பார்க்க)



# வினாக்களில் தொங்கும் எமது கல்விப் போக்கு...

■ பேர் அறிஞன்

இன்றைய எமது கல்வியுலகம் செல்கின்ற அல்லது செல்ல எத்தனிக்கின்ற திசை பற்றிய திறந்த யதார்த்த நிலைப்பட்ட உரையாடல்களேதும் நடைபெறுகின்றனவா? அவ்வாறேதும் எங்கேனும் நிகழ்ந்திருப்பின் அது தொடர்பான வெளிப்படுத்துகைகள் ஏதும் உள்ளனவா? இது போன்ற தொடர் வினாக்களை எத்தனை பேர் தமக்குள் அல்லது பொது வெளியில் எழுப்புகின்றனர்?

இப்போது "இழந்த கல்வியை ஈடுசெய்தல்" எனுமொரு புதிய சொல்லாடல் மட்டும் கல்விச் சமூகத்துள் உலவுகிறது. புதிய சொல்லாடல் எனக் குறிப்பிட்டாலும் அதுவே பரிட்சயமானதாகவும் உள்ளது. அச்செயற்பாடு பற்றிய விளக்கங்களும் வியாக்கியானங்களும் உரையாடல்களும் மிகப் பெரியளவில் அது ஒரு பிரஷமாண்டமான அடைதற்கரிய அருஞ்சிந்தனை எனும் தோற்றப்பாட்டை உண்டுபண்ணலாம்.

கல்வியிழப்பு மற்றும் அதற்கான உடல்-உள வலுவை இழந்த காலத்தை வெற்றிகரமாகவும் சந்தடியில்லாமலும் பலமுறை கடந்து வந்த ஓர் இனம் என்பதை வசதியாக மறந்துபோனவர்களாக இருக்கிறோம் என்பது இப்போதைய வேடிக்கையான உண்மை.

## கல்வி என்பது என்ன?

கல்வி என்பது என்ன என்கின்ற விளக்கத்தோடுதான் இழந்த கல்வி அல்லது கல்வியிழப்புப் பற்றிய உரையாடல்கள் நடைபெறுகின்றனவா? இங்கு முறைசார்ந்த தேர்வுமையக் கல்வி மட்டுந்தான் பேசுபொருளாக இருக்கிறதே தவிர கல்விப் புலத்தின் முறைசாராக் கல்வி உள்ளிட்ட வேறெந்த விடயப் பரப்புகளையும் யாரும் கவனத்திற் கொள்ளவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

எம்மிடமுள்ள "முறைசார்ந்த கல்வி" என்பதன் உள்ளீடு வெளியீடு என்பன வாழ்க்கைக்கு எந்தளவுக்குத் துணை நிற்கிறது? இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொள்வது அவசியமானது. வகுப்பறை - (பாடத்திட்டப்படியான) பாடநூல் - போதனை - நெட்டுருப்போடுதல் - தேர்வுக்குத் தோற்றுதல் - உயர் பெறுபேறு (அல்லது சித்தி) என்பதற்கப்பால் என்ன இருக்கிறது? உத்தியோகம் - பதவியுயர்வு - ஓய்வு என் பவற்றிற்கப்பால் பதிலேதும் உண்டா?

பதினொரு வருடங்கள் வகுப்பறைகளில் ஏட்டுக் கல்வியில் முடிந்து வடி கட்டலில் தேறிய ஒரு தொகை மீண்டும் இரு வருடங்கள் ஏட்டுக் கல்வியின் பின் மீண்டும் வடிகட்டலில் தேறிய சிறு தொகையாகக் குறைந்து, நான்கு வருடங்கள் பல்கலைக் கழக வகுப்பறைகளிலிருந்து புத்தகங்களிலுள்ள - எங்கோ எப்போதோ ஏதோவொரு சூழலின் தேவையின் நிமித் தம் உருவாகிய - வரைவிலக்கணங்களை ஒப்புவித்து பட்டதாரிகளாதலில் நிறைவு செய்வதுதான் முறைசார் கல்வியா? வேறேதுமிருப்பதாகத் தெரியவில்லை.

## இறுதியில் ஒரே இடத்தில் வந்து குவிகின்றனர்

இதில் ஒவ்வொரு வடிகட்டலிலும் தவறியவர்களின் நிலை என்ன? இறுதியில் பட்டம்பெற்றவர்களின் நிலை என்ன? ஒரேயிடத்தில் வந்து குவிகின்றனர். அது தான் தொழில்வாய்ப்பு.

தொழில் என்று வரும்போது துறைசார் அறிவுமட்டம் எப்படியிருக்கிறது? எடுத்துக் கொள்கிற அல்லது வழங்கப் படுகிற பணி நிலை தொடர்பான பொது அறிவு, முன்னறிவு, பட்டறிவு இதனால் வரும் பணிநுட்ப அறிவு மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய இயங்கு நிலை போன்றன இருக்கின்றனவா? பணிகளில் வினைத்திறன் மிக்க விளைவை எப்படி எதிர் பார்ப்பது?

எம்மிடமுள்ள முறைசார் கல்விப் புலத்தில் எங்கேனும் வாழ்க்கைக்கான தொழில்சார் அறிவு ஊட்டப்படுகிறதா? இல்லை என்பதுதான் எற்றுக்கொள்ள வேண்டிய பதிலாக உள்ளது. செயன்முறைத் தொழில் நுட்பம் எனும் பாடம் முறைசார் கல்வியுள் கட்டாய பாடமாக இடைநிலை வகுப்புகளில் உள்ளது. ஆனால் அப்பாடம் முன்னெடுக்கப் படுகின்ற விதம் கேலிக்குரியதாகவே இருந்துவருகின்றது.

பாடநூலில் தாய் மொழியில் உள்ள விடயங்கள் வாசிக்கப்பட்டு பாடத்திட்டம் முடிக்கப்படுகிறது. அதற்குள்ளேயே வினாக்கள் வழங்கப்பட்டு மதிப்பீடும் முடிகிறது. தொழில் அல்லது வாழ்க்கைத் திறன்களின் அறிமுகம் மற்றும் மேம்பாடு நோக்கிய குறித்த பாடத்தைக் கற்பிப்பவர்கள் குறித்த பாடத்துறைசார் தேர்ச்சியற்றவர்கள் என்பதுடன் பாடசாலை நேர அட்டவணை வரை முறையில் அதிக ஓய்வுப் பாடங்களைத் தவிர்ப்பதற்கான உத்தியாக அப்பாடத்தைப் பொறுப்பெடுத்தவர்களாயும் உள்ளமை மறுக்க வியலாத விடயமாயுள்ளது. இவர்களுக்கான பயிற்சிகள் எந்தளவிலுள்ளன என்பது மறுபுறமானது. அப்படியேதும் இடம் பெற்றாலும் காலை முதல் மாலை வரை இருத்திவைத்து நடத்தப்படும் சொற்பொழிவுகளாகவே அவை இருந்து விடுகின்றன.


> செயன்முறைத் தொழில் நுட்பம் எனும் பாடம் முறை சார் கல்வியுள் கட்டாய பாட மாக இடைநிலை வகுப்பு களில் உள்ளது. ஆனால் அப்பாடம் முன்னெடுக்கப் படுகின்ற விதம் கேலிக் குரிய தாகவே இருந்து வருகின்றது.


## பாடத்திட்டம் எனும் போதிப்பு

தரம் 10 மற்றும் 11 களிலுள்ள தொகுதிப் பாடங்களின் நிலையும் கிட்டத்தட்ட இதே நிலையில்தான் உள்ளன. பாடத்திட்டம் போதனைத் தேர்வு என்பதற்கப்பால் நகர்வதில்லை.

தற்போது அறிமுக நிலையிலுள்ள பதின்மூன்றாண்டுக் கட்டாயக் கல்வியின் திசையையும் உய்த்துணரக் கூடியதாகவேயுள்ளது. ஒருவனது அறிதல் அல்லது கற்றல், பராயம் முழுமையாக வகுப்பறைக் கட்டடத்துள் முடக்கப்படக் கூடிய நிலைமையே இங்கு உள்ளது.

அடிப்படைக் கல்வித் தகைமையாகக் கொள்ளப் படும் க. பொ.த. சாதாரண தரத் தகைமையை நெட்டுருப் போட்டு விடைத்தாளில் கொட்டி அடைய முடியாத நிலையிலுள்ள அல்லது இயலாமையிலுள்ள ஒருவனை மீளவும் இரண்டு வருடங்கள் அதே சூழலில் வைத்திருந்து இறுதி மதிப்பீட்டு அடிப்படையில் வெளியேற்றிச் சமூகத்துள் விடுதல் என்பதாகவே இருக்கப் போகிறதா?


இதனைக் கூடிய கவனத்துடன் பார்க்கவேண்டியுள்ளது. காரணம் இயல்பாகவே துருவி ஆராயும் பருவத்தில் பதினொரு வருடங்களில் பாடத்திட்டப்படி இடித்தும் அடையமுடியாத நிலையிலுள்ளவனை அதே முறையில் மீளவும் இரண்டு வருடங்கள் வைத்திருப்பதில் பயனெதுவுமில்லை என்பதை உணரவோ ஏற்றுக்கொள்ளவோ மறுக்கிறோம்.

இங்கே குறிப்பிட விரும்புகின்ற முக்கிய விடயம் பாடத்திட்டம் - அதனை முன்னெடுக்கப் போகின்ற போதனையாளர் - மற்றும் போதனை முறையில் ஏதேனும் மாற்றங்கள் நடைபெறுமா என்பதுதான்.

பாடத்திட்டம் முடித்தல், பாடக்குறிப்பு வழங்குதல், பரீட்சித்தல் (எழுத்துத் தேர்வு) என்கிற படிமுறைகளுடன் மட்டும் பழக்கப்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரியர் குழுவே இதனையும் முன்னெடுக்கப்போகிறது என்பதும் கவனத்திற்குரிய தாகிறது. ஆக மொத்தத்தில் மோதகம் கொழுக்கட்டையாக மாறுகிறது என்பதற்கப்பால் ஏதும் எதிர்பார்க்கலாமா?

இப்படியான முறைசார் கல்வித்திட்டத்துக்கு உள்ளே நின்று கொண்டு தான் இழந்த கல்வியை ஈடு செய்தல் எனும் பெயரில் திட்டங்கள் உரையாடல்களை முன்வைத்துக் கொண்டிருக்கிறோம். இல்லாத ஒன்றை அல்லது பயனற்ற ஒன்றை அடைதல் என்ற விதமாகவே இந்த விடயம் நகரப் போகிறதா? இடர்காலக் கல்வி என்பது பாடத்திட்டத்தை முழுமை செய்து தேர்வுக்காக தயார்ப்படுத்துதல் மட்டுந்தானா?

(கேள்விகள் தொடரும்)



# சுத்த அபத்த அரசியல்!

இ.எழில்வேந்தன்

தமது இந்த எதிர்பார்ப்பைத் தென்பகுதிச் சிங்களக் கட்சி களும் சுயேச்சைக் குழுக்க ளும் குழப்பு கின்றன என்று கூட்டமைப்பு, முன்னணி, கூட்டணி ஆகிய கட்சிகள் குறை பட்டுக்கொள்கிறார்கள். இந்த உதிரிக் கட்சிகள் சிங்கள ஆட்சியாளர்க ளின் நலன்களை நிறைவேற்று வதற்காகக் களமிறக்கப்பட்டுள்ளன என்பதால் அவற்றைப் புரிந்துகொண்டு நிராகரிக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள்.

எதிர்வரும் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்குக் கிழக்கில் 20 ஆசனங்களைப் பெறும் எல்லா வாய்ப்புகளும் பட்டவர்த்தனமாக இருக்கின்றன என்கிறார் அதன் தலைவர் இரா. சம்பந்தன். அதிலும் யாழ்ப்பாணத்திலுள்ள 7 ஆசனங்களும் கூட்டமைப்புக்குத்தான் என்கிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் சிரிக்காதீர்கள்.

வடக்கு - கிழக்கில் 18 ஆசனங்கள் தமக்கு என்கின்றது தமிழ்த் தேசிய முன்னணி. 12 ஆசனங்கள் வரையில் எதிர்பார்க்கிறது விக்கினேஸ்வரன் தலைமையிலான கூட்டணி. சுரேஷ் பிரேமச்சந்திரன், அனந்தி சசிதரன் ஆகியோர் அதை வழி மொழிகிறார்கள்.


வடக்குக் கிழக்கில் 6 ஆசனங்களை எதிர்பார்க்கிறார் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலர் டக்ளஸ் தேவானந்தா தாமும் 3 ஆசனங்களைக் கைப்பற்றுவோம் என்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன். எப்படி இத்தனை கட்சிகளும் இத்தனை ஆசனங்களை வெல்வார்கள் என்று




ரஜீவ்
(பெரமுன - சுயேச்சை)



விஜயகலா
(ஐ.தே.க.)



சி.க.செந்திவேல்
(மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி-சுயேச்சை)



சந்திரகுமார்
(சமத்துவக் கட்சி-சுயேச்சை)

தெரியவில்லை. நேர்க் கணியத்தில் சிந்திப்பது கட்சிகளுக்கு அவசியம் தான். அதற்காக ஆகாயக் கோட்டையில் மிதக்காது யதார்த்தமாகவும் இருக்க வேண்டும் அல்லவா?

இதற்கிடையில் வேடிக்கை என்ன வென்றால் தமது இந்த எதிர்பார்ப்பைத் தென்பகுதிச் சிங்களக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் குழப்புகின்றன என்று கூட்டமைப்பு, முன்னணி, கூட்டணி ஆகிய கட்சிகள் குறைபட்டுக் கொள்கின்றன. இந்த உதிரிக் கட்சிகள் சிங்கள ஆட்சியாளர்களின் நலன்களை நிறைவேற்றுவதற்காகக் களமிறக்கப்பட்டுள்ளன என்பதால் அவற்றை நிராகரிக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். இதில் எந்தளவுக்கு உண்மையிருக்கிறது?

## ஏற்கனவே களத்திலுள்ள தெற்குக் கட்சிகள்

சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, பொது மக்கள் முன்னணி போன்றன ஏற்கனவே வடக்குக் கிழக்கில் காலூன்றிய கட்சிகள். சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அல்பிரட் துரையப்பா, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கலாநிதி தியாகராசா மகேஸ்வரரன் போன்றவர்கள் தேர்தல்களின் மூலம் தோற்கடிக்கப்பட முடியாத நிலையில் படுகொலை செய்யப்பட்டவர்கள்.

தற்போதுள்ள நிலையில் தென்பகுதிக் கட்சிகள் சார்பாகத் தேர்தலில் நிற்பவர்களைக் கொல்ல முடியாது. அவர்களை எதிர்கொண்டே ஆக வேண்டும். இந்தக் கட்சிகள் போட்டியிடாமல் விட்டால் அந்த வாக்குகளும் சேர்ந்து தமக்குக் கிடைக்கும்போது இன்னும் கொஞ்சம் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி வாய்ப்பைத் தக்க வைக்கமுடியும் என்கிற ஆசைதான், முக்கிய கட்சிகளை இவ்வாறு குற்றஞ்சாட்ட வைக்கிறது.

அதேவேளை டக்ளஸ் தேவானந்தா, தனது கட்சிக்குக் கிடைக்கும் ஆசனங்களை வைத்துப் ஆட்சியில் எப்படியாவது அமைச்சர் பதவியைப் பெற்று அரசியல் நடத்துவதும் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளுக்கு இடையூறாகத் தோன்றுகிறது. இதனால்தான் சுயேச்சைகளும் அரசோடு சேர்ந்தியங்கும் கட்சிகளும் வாக்குகளை வீணடிக்கிறார்கள் என்று தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் மூக்கால் சிந்துகின்றன. ஆனால் உண்மை என்னவோ மாறானது.

## முதன்மைக் கட்சிகளே வாக்குச் சிதைவுக்குக் காரணம்

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் 19 கட்சிகள், 14 சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 330 பேர் போட்டியிடுகின்றனர். ஆனால் தெரிவு செய்யப்படவுள்ள பிரதிநிதிகள் 7. வாக்காளர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 71 ஆயிரத்து 848 பேர்.

வடக்குக் கிழக்கு என்று பார்த்தால் மட்டக்களப்பில் 5 ஆசனங்கள், யாழ்ப்பாணத்தில் 7 ஆசனங்கள், திருகோணமலையில் 4 ஆசனங்கள், வன்னித் தேர்தல் தொகுதியில் 6 ஆசனங்கள், திகாமடுல்ல வில் (அம்பாறை) 7 ஆசனங்கள் என எல்லாமாக 29 ஆசனங்கள் உள்ளன.

தமிழ்க் கட்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.டி.பி. ஆகியன முக்கியம் பெறுகின்றன. இந்த முதன்மைக் கட்சிகள் நான்கும் தமிழ் மக்களின் பெருமளவு வாக்குகளைக் கூறுபோடுகின்றன. இதில் 3 கட்சிகள் சுயாட்சி, தேசியம் பேசுபவை. இவையே தேசியத்துக்கான வாக்குகளைப் பிரிக்கின்றன. ஆனால் 5 சத வீதத்துக்கும் குறைவான வாக்குகளை மட்டுமே பெறக்கூடும் என்று கருதப்படுகின்ற கட்சிகளையும் சுயேச்சைகளையும் தென்னிலங்கைக் கட்சிகளையும் வாக்குகளை வீணடிப்பதாகவும் விரயமாக்குவதாகவும் குற்றஞ்சாட்டுகின்றன. இது முறையற்றது.

## மேட்டுக் குடித் தலைமைகள்

மேற்படிக் கட்சிகள் தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றன என்ற விமர்சனங்கள் அதிகரித்துள்ளன. மேட்டுக் குடித் தலைமைகளைக் கொண்ட இந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 2009இற்குப் பின்னர் ஈட்டிய சொத்துகள் பற்றிய ஆய்வு தேவை. அப்போது தான் இவர்களின் தமிழ்த் தேசிய மோகத்துக்கும் அவர்களின் நடத்தைக்கும் இடையிலான இடைவெளியை நன்கு உய்த்துணர முடியும். இந்தத் தலைமைகள் தமக்குள் பிரிந்து நின்று மக்களின் வாக்குகளைத் தாம் கூறுபோடுவது பற்றிச் சிந்திக்காமல் ஆங்காங்கு சொச்ச வாக்குகளைப் பெறுகின்ற கட்சிகளையும், சுயேச்சைகளையும் சாடுவது முட்டாள்தனம்.

தமக்கிடையில் ஒன்றுபட முடியாதவர்கள் ஏனையவர்கள் தமக்காக ஒதுங்கிக்கொள்ள வேண்டும் என்று நினைப்பது எந்த வகையில் நியாயமானது.

இனத்துக்காக என்றால் அவர்களே ஒற்றுமையாக நின்று ஒரே அணியாகத் தேர்தலை எதிர்கொண்டிருக்கவேண்டும். தாங்கள் ஒற்றுமைப்பட மறுக்கும் தலைவர்கள் ஏனையவர்களைப் பார்த்து இவர்கள் ஆட்சியாளர்களின் ஏவல்காரர்கள், இனத்தின் நலனை தோற்கடிக்கிறார்கள் என்பது சுத்த அபத்தம்.

### மூளைக்கு வேலை
முடிகிறதா பாருங்கள்

7

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | + | B | = | 19 |
| + | | + | | + |
| A | + | 8 | = | 14 |
| = | | = | | = |
| 15 | + | C | = | D |


A,B,C,D எனக் குறிக்கப்பட்டுள்ள பெட்டிகளில் வரவேண்டிய எண்கள் என்ன?

## கடவுளாக மாறிய மருத்துவர்கள்

நிறம் தீட்டிற புத்தகங்கள் எண்டு வாங்கிக் குடுத்திருக்கினம். அவா இப்ப நல்ல மாதிரி இருந்து அதுகளை பார்த்து செய்யிறா.. இன்னும் இரண்டு மாதம் அவை யிண்ட கண்காணிப்பில பிள்ளை இருக்க வேணும் எண்டதால அவையளே தங்கட செலவில இங்க(ராகம) வீடொண்டு எடுத்து தந்திருக்கினம், எங்கட செலவெல்லாமே அவையள்தான் பார்க்கினம்.. வீட்டபோனாப் பிறகு பள்ளிக்கூடம் போகலாம் எண்டு சொல்லியிருக்கினம். எண்டாலும் பிள்ளைய கவனமா பார்க்கச் சொல் லியிருக்கினம். நாங்க இப்ப ஊரில இருக்கிற வீட்டத் திருத்தி பிள்ளைக் குப் பாதுகாப்பானதா மாத்த சொல்லியிருக்கினம்."

ரசித்தாவின் முகத்தில் இப்போது சிரிப்பு பளீரிடுகின்றது. அதில் நம் பிக்கை தெறிக்கின்றது.

வி.அருணாசலம்



# பெரும்பான்மை வாத ஜனநாயகம்

'மயோரிட்டியிசம்' (பெரும்பான்மைவாதம்), 'மயோரிட்டியிசம் டெமோகிரஸி' (பெரும்பான்மைவாத ஜனநாயகம்) ஆகிய விடயங்கள் தற்போது உலக அரசியலில் முக்கிய நடைமுறைகளாக மாறி வருகின்றன. இதன் மூலம் ஒரு நாட்டின் பெரும்பான்மை மக்கள் தீர்மானிப்பது எதுவோ அதுவே அந்த நாட்டின் அரசியல் நடைமுறையாக அமைகிறது. சிறுபான்மை மக்கள் மற்றும் நலிந்தோர் குழுக்கள் பற்றிய அக்கறைகள் புறந்தள்ளப்படு கின்றன இந்த பெரும்பான்மை ஜனநாயகத்தின் கீழ்.

பல்தேசிய இனங்கள் வாழ்கின்ற நாடொன்றில் பெரும்பான்மை இனத்துக்குச் சார்பாக மட்டுமே இந்தப் பொறிமுறை இருப்பதால் சிறுபான்மை இனங்களுக்கும் சிறுபான்மை இனங்கள் வாழும் பிராந்தியங்களுக்குமான அதிகாரப் பகிர்விலும் இந்தப் (மயோரிட்டியிசம் டெமோகிரஸி) பெரும்பான்மைவாத ஜனநாயகம் அதிக தாக்கத்தைச் செலுத்தும். இதுவே இலங்கை அரசின் நடைமுறையாகவும் இனி இருக்கப்போகிறது.

### அமெரிக்காவினதும் அயல் நாட்டினதும் நிலை

பல்தேசிய இனங்கள் வாழ்கின்ற இந்தியாவில் பெரும்பான்மைவாத ஜனநாயகம் நடைமுறைக்கு வந்துவிட்டது. மோடியின் ஆட்சியில் இது மிகவும் தெளிவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பெரும்பான்மைவாத ஜனநாயகத்தை விரும்புகின்ற ஆட்சியாளர்கள் ஏனைய நாடுகளில் இதுபோன்ற நடைமுறையைப்





பின்பற்றுபவர்களைப் பாராட்டவும், அவர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்ளவும் விரும்புகிறார்கள்.

அமெரிக்கா அண்மையில் எடுத்த பெரும்பான்மைவாத ஜனநாயகத் தீர்மானம் ஒன்றுக்கு இலங்கை அதிபர் கோத்தாபய ராஜபக்ச அமெரிக்காவுக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்தார். இது இலங்கையும் அந்தத் திசை நோக்கி வேகமாக முன்னேறப் போகிறது என்பதற்கான கட்டியம்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஆட்சியமைத்த அனைத்துச் சிங்களத் தலைவர்களும் பெரும்பான்மை மக்களுக்குச் சாதகமாகவே முடிவுகளை எடுத்தார்கள். அது பெரும்பான்மைவாத ஜனநாயகப் பண்புகளைக் கொண்டதாக அமைந்திருந்தாலும் வெளிப்படுத்தல் தன்மையில் அது வெறும் ஜனநாயக முடிவுகளாகக் காட்டப்பட்டன. அதன் மீதான அதிருப்தியே வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களை எதிர்வினையாற்ற வைத்தது. முதலில் அற வழியில் ஆரம்பித்து ஆயுதப் போர் வரை நீண்டது.

ஆனால், இந்தப் போராட்டம் பெரும்பான்மை வாதத்தை மேலும் உறுதிப்படுத்தும் விதமான ஒரு கட்டத்தை அடையவே வழிவகுத்துள்ளது என்பது கவலைக்கிடமான உண்மை. சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்குப் பதிலாக, சிங்களம் பெரும்பான்மைவாத ஜனநாயகத்தை பகிரங்கமாகவே வெளிப்படுத்தும் நிலையை ஏற்படுத்தி விட்டுள்ளது இந்தப் போராட்டம். உண்மையில்

இந்தப் போரினால் சிறுபான்மை இனம் இன்னும் சிறுபான்மையினமாக (இன்று இலங்கையில் 3ஆவது இனமாகும் விளிம்பில்

தமிழர்கள் இருக்கிறார்கள்) நலிந்துபோக பெரும்பான்மையினர் மிகப் பெரும்பான்மையாக வளர்ந்துள்ளனர்.

### சிறுபான்மையினருக்கு உரிமையளித்த யாப்புகள்

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வரையப்பட்ட டொனமூர், சோல்பரி போன்ற யாப்புகளில் சிறுபான்மை இனங்களுக்கான பாதுகாப்பு ஓரளவுக்கு எழுத்து வடிவிலாவது இருந்தது. ஆனால் 1972ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட குடியரசு யாப்பினாலும் 1978ஆம் ஆண்டில் ஜெ.ஆர்.ஜெயவர்த்தன கொண்டுவந்த இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசு யாப்பினாலும், விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையினாலும் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டன.

அதிலிருந்தே மீள முடியாத சூழலில் தமிழர்கள் இருக்கும்போது கோத்தாபய ராஜபக்ச ஆட்சியால் வரையப்படவுள்ளதாகக் கூறப்படும் புதிய அரசியல் யாப்பு எல்லாவற்றையும்விட மோசமாகச் சிறுபான்மை இனங்களைப் பாதிப்பதாக அமையும். சிறுபான்மை இனங்களின் நலன்களை முற்றிலும் புறந்தள்ளுவதாகவும், ஒரே இனம் ஒரே நாடு என்கிற முழக்கத்திற்குள் எல்லாவற்றையும் அழுத்தித் திணிப்பதாகவும் இது அமைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. பெரும்பான்மைவாத ஜனநாயகம் இதனை நியாயப்படுத்தி நிற்கும்.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கும் இலங்கைத் தீவின் சிறுபான்மை மக்கள் நலன்களைப் பாதுகாப்பதற்கும் வினைத்திறனுள்ள, உணர்திறனுள்ள, தீர்க்க தரிசனம் மிக்க தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அவசியம்.

தமிழர்கள் மத்தியில் அரசமைப்புத் தொடர்பான அறிவுள்ளவர்களாக ஏ.ஜெ. வில்சன் (தந்தை செல்வாவின் மருமகன்), நீலன் திருச்செல்வம், லக்ஸ்மன் கதிர்காமர் (இவரது சட்டத்துறை சார் புலமை பன்னாட்டுச் சொத்துகள் பற்றியதாக இருந்தபோதும் அரசமைப்பு விடயத்தில் சில பகுதிகளில் தேர்ச்சி அடைந்திருந்தார்) ஆகியோரைக் குறிப்பிடலாம். தற்காலத்தில் எம்.ஏ.சுமந்திரன் அரசமைப்புத் தொடர்பான விடயத்தில் தெரிந்தவராக இருக்கிறார்.

1978 அரசமைப்பை ஜெ.ஆர்.ஜெயவர்த்தன தயாரித்தபோது அருகிலிருந்து ஆலோசனை கூறியவர் ஏ.ஜெ.வில்சன். அவர் ஒரு மேட்டுக்குடித் தமிழராகவும், அறிஞராகவும் இருந்தமையால் ஜெ.ஆரின் நோக்கத்துக்கு ஏற்றவாறு (சிங்கள மக்களுக்குச் சார்பாக) அரசமைப்பை வரைவதற்கு உதவினாரே தவிர தமிழ் பேசும் மக்களின் நலன்களை முன்னி லைப்படுத்துவதற்குத் தவறிவிட்டார்.

இதேபோன்றதொரு நிலை மீண்டும் ஏற்பட்டுவிடாமலிருக்க வேண்டுமானால் அரசியல் யாப்பு விடயங்களில் நிபுணத்துவமும் சிறப்புத் தேர்ச்சியும் கொண்ட தமிழுணர்வுள்ளவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும். நாடாளுமன்றக் கதிரைகளைச் சூடாக்கிவிட்டு வரும் உறுப்பினர்களால் மிகைத் திறன் கொண்ட ராஜபக்சக்களின் சூட்சுமங்களைப் புரிந்துகொள்ள முடியாது.

### தமிழ் அரசியல்வாதிகளின் அறியாமை

ஜனநாயகம் பிழையான வழியில் பெரும்பான்மையினரால் கைப்பற்றப்படுகிறது

என்பதைத் தமிழ் அரசியல்வாதிகள் பலரும் புரிந்துகொள்ளும் அறிவோடு இருப்பதில்லை என்பதே தீயாய் சுடும் உண்மை. தற்போது நடக்கவுள்ள தேர்தலில் மகிந்த தரப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றால், அது பெரும்பான்மையினரின் ஜனநாயகத்துக்கே சாதகமாக இருக்கும். அதை முறியடிக்கக்கூடிய

ஏற்பாடுகள் முதன்மை எதிர்க்கட்சியான ஐக்கிய

தேசியக் கட்சியிடமோ ஜே.வி.பியிடமோ மட்டுமல்ல தமிழ், முஸ்லிம் கட்சிகளிடமும்கூட இல்லை.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற பின்னர் இலங்கையில் ஏற்படப்போகின்ற மாற்றங்கள் பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்குச் சாதகமாக

இருக்கும் நிலையில் அமெரிக்கா, இந்தியா போன்று பெரும்பான்மையினவாத ஜனநாயகமாக அது சிறுபான்மையினரை எல்லா வழிகளிலும் நசுக்கவே செய்யும்.

# நீ வா...!

இலை பெய்யும் காலம்
தொடங்கி இருந்தது
இந்த காலங்கள் நீ ஊர் திரும்பும்
காலங்களாய் பழகிப்போனது எனக்கு

இதே காலங்கள்
கிழை அமரும் பறவைகளின்
கீச்சொலிகலால் நிறைந்திருக்கும்
என் வீட்டு மாமரம்

ஒவ்வொரு நாளும் அரசமரத்து
பேரூந்து தரிப்பிடத்தை கடந்து போவேன்
எப்போதும் உன் சாயலில்
எவளோ ஒருத்தி தெரிவதுதான்
என்ன மாயாயலமோ?

போனமுறை நீ வந்தபோது
நீண்ட நேரம் கால் வலிக்க பேரூந்துக்கு
காத்திருந்தோம்
அந்த மாதிரியான மோசமான தருணம்
இனியும் நிகழாது வா...

இந்த வருடம் நீ வரும் நாட்களை
கடத்திக் கொண்டே போகின்றாய்
பல காரணங்களைச் சொல்லி உன் வரவை
தள்ளிப்போடுகின்றாய்

உன் வருகையை எதிர்பார்ப்பதும்
ஒரு சுவாரசிமான பொழுதாய் கடந்து
போகுகின்றது
உன் வருகையில் ஒரு எல்லையில்லா
ஆனந்தம் தங்கியிருக்கிறது

இன்றும் தொலைபேசியில் கேட்கிறாய்
காற்றும், கடலும்
பெரிதாகவா இருக்கிறது என்று
நான் எப்படிச் சொல்வேன்
இந்த சோளகத்து கடல் பற்றியும்,
ஆழியின் பெரும் அலைகளால்
நனைத்து கரை சேர்க்கும் *குமுதினி பற்றியும்

**- நேதா- நெடுந்தீவு.**




## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 6 | | 4 | | | 3 | |
| | 5 | 7 | 8 | 2 | | | | |
| 1 | | | 9 | | | 5 | | |
| | | 9 | | 1 | | | | 8 |
| 5 | | | | | | | | 2 |
| 4 | | | | 9 | | 6 | | |
| | | 4 | | | 3 | | | 1 |
| | | | | 7 | 9 | 2 | 6 | |
| | 2 | | | 5 | | 9 | 8 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஓரொ மூங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி **செம்மண்** அலுவலகத்திற்கு அனுப்பி வையுங்கள். சுடோக்கு, 551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெரும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## மூளைக்கு வேலை விடைகள்

**1) CORD - தொலைக்காட்சியின் பின்**
**TILES - குளியலறை தரையில்**
**STRAW - துடைப்பத்தில்**
**MIRROR - கண்ணாடியில்**
**CAT - பூனையின் வாலில்**
**COUCH - இருக்கையின் முதுகில்**

**2) 2**
**3) 8**

**4) 13 கீழிருக்கும் தானத்தை தவிர்த்து மற்றைய 3 தானங்களையும் கூட்டி வரும் எண்ணிக்கையில் இருந்து கீழ் தானத்தை கழித்தால் நடுத்தானம் கிடைக்கும்.**

**5) 75 + 40 x 5 = 275**
**சோளம் பொத்தி**
**25 (25+25+25)**
**சோளப்பொதி**
**20 (25+20+20)**
**மணிக்கூடு 2மணி காட்டுகிறது**
**2 (2+20+25)**
**விடை : 3பொத்தி + 2பொதி x 5மணி**

**6) 840 படியின் எண்ணால் முன்னுள்ள எண்ணை பெருக்கவும்**

**7) A - 6 B - 10 C - 18 D - 33**



## சுள்ளியின் பம்பல்

சுள்ளிராஜாவின் ஊரில் இருந்த சனசமூக நிலையத்தில் பவள விழாக் கொண்டாட்டம் வெகு கோலாகலமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இளவட்டங்கள் தடல்புடலாக போட்டி கள், விளையாட்டுக்கள் என்று தூள்பறத்திக் கொண்டி ருந்தாங்கள். அப்ப கிரிக்கெட் போட்டியும் நடத்தவேண்டும் ஊரை ரெண்டாப் பிரிச்சு எண்டு ஒரு திட்டத்தையும் அவங்கள் தீட்டிப் போட்டாங்கள். ஒரு அணியில் சுள்ளிராஜாவும் கட்டாயம் களமிறங்க வேண்டியதாப் போட்டுது. வேற வழி இல்லை. மட்ச்சுக்குப் போனால் சுள்ளிராஜாவத்தான் ஓப்பின் பட்ஸ்மனா இறக்கி விட்டிட்டாங்கள்.

முதல் பந்து: விசுக் கொண்டு கொண்டு பந்து ஓவ் ஸ்டொம்புக்கு நெருக்கமா பறந்து போய் கீப்பரின்ட கையில புகுந்துது. சுள்ளி காலைக்கூட அசைக்கவே யில்லை. அப்படியே நின்றுகொண்டிருந்தார்.

இரண்டாவது பந்து: சுள்ளியின் பட்டில பட்டும் படாமலும் மிடில் ஸ்டொம்புக்கு மேலால போய் கீப்பரின்ற கையில நிண்டிட்டுது. அப்பவும் சுள்ளி விரலைக்கூட அசைக்கேல்ல. அப்பிடியே நின்று கொண்டிருந்தார்.

மூன்றாவது பந்து: அது ஒரு பவுன்ஸர். சுள்ளியின்ர முகத்துக்கு நேர சறுக்கெண்டு கொண்டு கீப்பரிட்ட போயிட்டுது. கொஞ்சம் அசைஞ்சிலுந்தாலும் சுள்ளியின்ர தலையில பட்டுத் தெறிச்சிருக்கும் பந்து.

நான்காவது பந்து: இப்ப பந்து நடுப் பிட்சில விழுந்து லெக் ஸ்டொம்புக்கு அருகால சுள்ளிக்குப் பின்புறமாக் கடந்து போனது. கீப்பர் பாய்ஞ்சு பிடிச்சிட்டான். ஆனா இந்தத் தடவை அது நோ போல் என்று அறிவித்தார் அம்பயர்.

அதைக் கேட்டதும் அம்பயரை நோக்கி நடந்துபோன சுள்ளி அவரிட்டச் சொன்னார், உமக்கு இப்பத்தானே அவன்ர கையில போல் இல்லை என்டது தெரிஞ்சது....

நான் தொடக்கத்தில இருந்து பாக்கிறன், அவன் ஒவ்வொருக்காலும் ஓடி வந்தாப் பிறகு அவன்ர கையில போலே இல்லை....!

## கார்ட்டூன்



# ஆலாய்ப் பறக்கும் அபேட்சகர்கள்

## மக்கள் தீர்ப்பு என்ன?

-அகீல்-

அம்பாறை மாவட்டத்தில், அதாவது திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் திருவிழா இறுதிக் கட்டத்தை நோக்கி சூடுபிடித்துள்ளது.

ஆவணி 2ஆம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் முடிவுக்கு வருவதால் இறுதிக்கட்டப் பரப்புரைகள், வாக்கு வேட்டைகள் தீவிரமடைந்திருக்கின்றன.

அதேவேளை கட்சிகளினதும், சுயேச்சைக் குழுக்களினதும் வேட்பாளர்கள் வாக்காளப் பெருமக்களை நோக்கி ஆலாய்ப் பறந்த வண்ணமுள்ளனர்.

இந்தமுறை தேர்தல் வன்முறைகள் அதிகரித்த, பரப்புரை மேடைகளில் வெறுப்பூட்டக்கூடிய பேச்சுக்கள் மலிந்த, பொய்ச் செய்திகள் பரப்பும் மாவட்டங்களில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டம் முதலிடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இனவாதம், மதவாதம் கக்குவதையே அரசியல்வாதிகள் இந்த மாவட்டத்தில் ஒரு கலையாகப் பயின்று வரும் துர்ப்பாக்கியம் நிகழ்கின்றது என்றும் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.மனாஸ் மக்கீன் கடந்த வாரம் அட்டாளைச் சேனையில் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இனவாதம், மதவாதமற்ற உண்மையான மக்கள் சேவையாளர்களை மக்கள் தேர்தலில் தேர்ந்தெடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

### வெறுப்பூட்டும் பேச்சுக்கள்

இந்தமுறை தேர்தல் பரப்புரை மேடைகளில் குறிப்பாக அகில இலங்கை தமிழர் மகாசபை சார்பில் போட்டியிடும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் கருணா அம்மான் என அழைக்கப்படும் வினாயகமூர்த்தி முரளீதரனின் பரப்புரை மேடைகளில் குறித்த வெறுப்பூட்டும் பேச்சுக்கள் மலிந்து காணப்பட்டதாகப் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

முஸ்லிம்களை இலக்காக வைத்து கருணா ஆற்றிவரும் உரைகள் தமிழ் மக்களை உசுப்பேற்றித், தமது ஆதரவுத்தளத்தைப் பெருக்கும் அவர்களின் உத்தி என்பதை ஊகிப்பது பெரும் கடினமல்ல.

தன்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தால் கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தை நிச்சயம் தரமுயர்த்தித் தருவேன் என்ற துரும்புச் சீட்டையும் கருணா கையிலெடுத்திருக்கிறார்.

முஸ்லிம்களிடமிருந்து அம்பாறை மாவட்ட தமிழ் மக்களையும், தமிழ் மக்களின் இருப்பையும் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் அவரது பரப்புரையின் அடிநாதமும் முழு நாதமும்.

இதையொத்த துரும்புச் சீட்டை முஸ்லிம் மக்கள் மத்தியில் ஐக்கிய மக்கள் சக்தியின் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீசும் தூக்கிப் பிடித்திருக்கிறார்.

கருணா அம்மான், பொது பலசேன ஞானசார தேரர் போன்றவர்களிடமிருந்து கல்முனை நகரைக் காப்பாற்றக்கூடிய ஒரே ஆள் தானே என்று அவர் பறைசாற்றுகிறார்.

கருணா - ஹரீஸிடையேயான வாதப்பிரதிவாதங்கள் தேர்தல் களத்தை நாளொரு வண்ணமும் சூடாக்கி வருகின்றன.

முஸ்லிம்கள் ஜப்பான் மீன் குஞ்சுகளைப்போல் பிள்ளைகளைப் பெற்று தமது சனத் தொகையைக் கூட்டி வருகின்றனர் என்றும், கொரோனாவுக்காக நாடு முடக்கப்பட்டு வீட்டிலிருந்த சமயம் கூட தமிழர்கள் பிள்ளைகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டவில்லை எனவும், அடுத்து ஒரு முடக்கம் வந்தால் அதனைப் பயன்படுத்தி கூடுதலான பிள்ளைகளைப் பெற்று தமிழர்கள் சனத் தொகையைப் பெருக்க வேண்டும் என்றும் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கருணா கூறினார்.

பதிலுக்கு "இந்த நாட்டில் முஸ்லிம்கள் பிள்ளை பெறுவதற்குக்கூடச்










சுதந்திரம் இல்லையா?" எனத் தனது பரப்புரை மேடையில் கேள்வி எழுப்பினார் வேட்பாளர் ஹரீஸ்! கல்முனை மண்ணை கலவர பூமியாக்கவே கருணா முனைப்பு காட்டி வருகிறார் என்பது அவரது குற்றஞ்சாட்டு. தனக்கு அதில் பங்கில்லை என்ற பாங்கிலேயே அவரது குற்றச்சாட்டு அமைந்திருக்கிறது.

இதேவேளை காரைதீவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முதலாவது பரப்புரைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கருணா அம்மான் மீது சீறிப் பாய்ந்திருக்கிறார்.

நாகரீகமாகப் பேசத் தெரியாத கருணா புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவரென களத்தை இன்னும் சூடாக்கியிருக்கிறார் ஜெயசிறில்,

கருணாவின் நாகரீகமில்லாத பசப்பு வார்த்தைகளைக் கேட்டு ஏமாற அம்பாறை மாவட்டத் தமிழர்கள் முட்டாள்கள் அல்லர் எனவும் இன்று அவர் முஸ்லிம்களை வசை பாடுவது நகைப்புக்குரியது என வும் கூறியுள்ளார்.

பிரதி அமைச்சராகவிருந்தபோது கருணா மட்டக்களப்பில் 150 கழிவறைகளை மாத்திரமே கட்டினார் என்று வேறு குத்திக்காட்டியுள்ளார்.

இப்படியெல்லாம் அம்பாறை மாவட்டத்தில் தேர்தல் களம் அதகளப்படும்போது, தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன் னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லாவும், அவரது கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் குதிரைகளில் நகர்வலம், ஊர்வலம் வந்தவண்ணமுள்ளனர்.

தேசிய காங்கிரஸ் கட்சியின் சின்னம் குதிரை என்பதால் வாக்காளர்களைக் கவரும் வண்ணம் இப்படி உண்மையான குதிரைகளைக் கொண்டு வந்து அதில் வலம் வரும் அதாவுல்லாவும் தமிழ்த் தலைவர்களைச் சீண்டும் வகையிலான கருத்துக்களை பரப்புரைகளில் முன் வைக்கத் தவறுவதில்லை.

புலிகள் ராஜீவ் காந்தியைக் கொன்றதன் பின்னணியைத் தெரிந்து கொள்ள தமிழ்த் தலைவர்கள் தனக்குப் பின்னால் பைல் தூக்கிக்கொண்டு திரியவேண்டும் என்று அவர் பேசும் காணொலி ஒன்று சமூக ஊடகங்களில் தீயாய் பரவியது.

### அஷ்ரப் எனும் ஆளுமை

மாவட்டத்தின் முஸ்லிம் பகுதிகளில் தேர்தல் களம் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் என்பவற்றுக்கிடையேதான் பங்கிடப்பட்டிருக்கின்றது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு இம்முறை களமிறங்கவில்லை. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அது போட்டியிடுகின்றது. முஸ்லிம்களின் வாக்குகளை மேலும் பிரிக்கக்கூடாது என்கிற நல்லெண்ணமே அது அம்பாறையில் போட்டியிடாததற்குக் காரணம்.

இம்முறை போட்டியில் குதித்திருக்கும் மூன்று கட்சிகளின் தலைவர்களுமே மறைந்த தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் பாசறையிலேயே தாம் வளர்ந்தவர்களென மார் தட்டுகின்றனர். தமது பரப்புரைகளிலும் சுவரொட்டிகளிலும், பதாகைகளிலும் அஷ்ரப்பின் படத்தை மறந்தும்கூட அவர்கள் போடாமல் விடுவதில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் மேடைகளில் "ஆயிரம் விளக்குடன் ஆதவன் எழுந்து வந்தான்" எனும் அஷ்ரப் காலத்துக் கட்சியின் எழுச்சிப் பாடலும், மர்ஹூம் அஷ்ரபின் நேரடி குரலிலான "போராளிகளே புறப் படுங்கள்" எனும் உணர்வு மேலிட்ட ஒலிப்பதிவும் தொடர்ந்து ஒலிக்கிறது.

அஷ்ரப் எனும் ஆளுமையை வைத்து அரசியல் செய்யும் இவர்கள் உண்மையில் அவரை ஞாபகத்தில் வைத்திருக்கிறார்களா என்பது சந்தேகமே!

"ரணில் சாரதியாக இருக்கும்வரை யூ.என்.பி. எனும் அந்த பஸ்ஸில் ஏறவே மாட்டேன்" எனச் சூளுரைத்த மாமனிதர் அஷ்ரப் மறைந்த சில காலத்திலேயே அத்தகைய ரணிலை சாரதியாகக் கொண்ட பஸ்ஸில் ஏறிய வர்தான் இன்றைய முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.


தலைவர் அஷ்ரபின் நினைவு தின நிகழ்வுகளை நடத்துவதிலேயே அசமந்தம் காட்டும் முஸ்லிம் காங்கிரஸும், அவர் பாசறையில் வளர்ந்த வர்களெனத் தம்பட்டமடிக்கும் ஏனையோரும் தேர்தல் ஒன்று வந்துவிட்டால் அஷ்ரபைத் தூக்கிப் பிடிக்கத் தவறுவதில்லை.

மக்கள் எல்லாவற்றையும் கவனிக்கிறார்கள். கடைசியில் அவர்கள் தானே தீர்ப்பெழுதப்போகும் நீதிபதிகள்.




**தமிழரசுக் கட்சியின் முதலாவது பரப்புரைக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கருணா அம்மான் மீது சீறிப் பாய்ந்திருக்கிறார்.**

**நாகரீகமாகப் பேசத் தெரியாத கருணா புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவரெனக் களத்தை இன்னும் சூடாக்கியிருக்கிறார். கருணாவின் நாகரீகமில்லாத பசப்பு வார்த்தைகளைக் கேட்டு ஏமாற அம்பாறை மாவட்டத் தமிழர்கள் முட்டாள்கள் அல்லர் எனவும் இன்று அவர் முஸ்லிம்களை வசைபாடுவது நகைப்புக் குரியது எனவும் கூறியுள்ளார்.**




## 'கர்ஸட்' எனும் புதிய தொடர்!

நவீன கதை சொல்லின் துணையுடன் பழங்காலப் புனைவுகளையும் வெற்றிகரமாக மீளுருவாக்கம் செய்ய முடியும் என்று நிரூபித்துள்ளது கர்ஸட் என்கிற (Cursed) தொடர். பிரிட்டனின் பிரதானமான புனைவுகளில் ஒன்றான ஆர்தர் மன்னனின் கதையுடன் கற்பனைச் சம்பவங்களைக் கலந்து சொல்லும் தொடர் இது. மாயாஜால சக்தி கொண்ட 'எக்ஸ்காலிபர்' என்ற வாளைக் கொண்டு ஆர்தர் தனது எதிரிகளையும் மாய சக்திகளையும் வீழ்த்தும் கதைகளை நிறையப் படங்களில் பார்த்திருந்தாலும் ஆர்தரின் கைகளுக்கு எக்ஸ்காலிபர் வந்து சேர்வதற்கு முன்பு மகிமை பொருந்திய அந்த வாள் எங்கே இருந்தது என்பதுதான் இந்தத் தொடர்.

## புதிய முயற்சியில் ஸ்ருதி!

ஆரோக்கியம், உடற்பயிற்சி, சமையல்கலை, ஒப்பனைக் குறிப்புகள் பற்றியும், தனது இசைச் சுற்றுப் பயணத்திலிருந்து ஒளிப்பதிவு செய்த காட்சிகளையும் தனது பெயரில் பிரத்தியேகமாகத் தொடங்கியிருக்கும் யூ ரியூப் பக்கத்தில் பதிவிட இருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார் ஸ்ருதி ஹாசன். தனது முதல் அல்பத்துக்கான வேலைகளில் தற்போது ஓய்வின்றி ஈடுபட்டு வருகிறார் என்றும் தான் மெட்டமைத்திருக்கும் பாடல்களின் முன்னோட்டங்களைத் தனது வலையொளியில் காணலாம் எனத் தெரிவித்துள்ளார்.

நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர், பாடலாசிரியர், பாடகர், கதாசிரியர் ஏனப் பல துறைகளில் மிளிர்ந்து வரும் தனுஷ் ஜூலை 28ஆம் திகதியன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

சினிமாத்துறை சார்ந்த பலரும் அவருக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

'மாஸ்டர்' படத்தில் விஜய்க்கு நாயகியாக நடித்த மாளவிகா மோகன் தனுஷுக்குப் பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்கும்போது தனுஷுடன் நடிப்பதற்குத் தனக்கு விருப்பம் இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார். தனது கீச்சகப் பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில், 'இனிய பிறந்தநாள் வாழ்த்துகள் தனுஷ் சேர். உங்களோடு பணிபுரிய ஆவலாக உள்ளேன். விரைவில் யாரேனும் நம் இருவரையும் ஒரே படத்துக்குத் தெரிவு செய்வார்கள் என்று நம்புகிறேன்' என்றுள்ளார்.

மாளவிகா மோகனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அவருடைய பதிவுக்கு 'நன்றி... விரைவில் நடக்கும் என நினைக்கிறேன்' என்று பதில் குறிப்பிட்டுள்ளார் தனுஷ்.

## தனுஷுடன் நடிக்க விருப்பம்!







இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.08.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781